விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசே. விலைக்குறிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3397)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 23 ஞாயிற்றுக்கிழமை (06.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 078

# முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எதிராக மாவை தலைமையில் இரகசியக் கூட்டம்

## பூட்டிய அறைக்குள் சதித்திட்டம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் உள்ள தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கான இரகசியக் கூட்டம் ஒன்று நேற்று காலை 10 மணியளவில் யாழ்.மார்டீன் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

(15-ம் பக்.)

## இந்தியாவை முந்தியது சீனா

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலாப்பயணம மேற்கொள்ளும் வெளிநாட்டவர்கள வரிசையில் முன்னிலையில் இருந்த இந்தியாவை பின்தள்ளி சீனா

16 ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பை மிரட்டும் பாதாள உலகக்குழு


## கர்ப்பிணிப் பெண் மீது நேற்றும் சூடு

(கொழும்பு)

கொழும்பில் பாதாள உலகக்குழுக்கள் பட்டப்பகலில் கொலை செய்யவும் குற்றச் செயல்களில் ஈடுபடவும் ஆரம்பித்துள்ளன. இதனால் அங்கு கடந்த சில நாட்களாக அதிகரித்த துப்பாக்கி பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மக்கள் பீதியடைந்தும் உள்ளனர்.

நேற்றைய தினமும் வெலிக்கட சிறைக்கு முன்பாக கர்ப்

15 ஆம் பக்கம் பார்க்க....



## 13-வது நாளாக...

## உடல் பாதிப்புடன் கைதிகள் போராட்டம்

(கொழும்பு)

புதிய மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 14 பேரும் மருத்துவ உதவியை புறக்கணிப்பதாக நேற்றையதினம் சிறைச்சாலை ஆணையாளருக்கு கடிதம் ஒன்றினை கையளித்துள்ளனர்.

புதிய மகசின் சிறைச்சாலை

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஜெனிவா செல்கிறது மகிந்த அணி!



(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் அதிருத்தியடைந்துள்ள மகிந்த ஆதரவு ஒன்றிணைந்த

16 ஆம் பக்கம் பார்க்க....

## அம்பினை நொந்து அதர்ம யுத்தம்!

## மன்னிக்க மறுக்கும் உங்களால் நல்லிணக்கம் எப்படி சாத்தியம்?

### கைதிகளின் விடுதலை கோரி ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

மன்னிக்க மறுக்கும் உங்களால் எப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கடந்த பல வருடங்களிற்கு

15 ஆம் பக்கம் பார்க்க....

## அடுத்த வாரம் நாமல் கைது!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜ

16 ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் நாளை உணவு தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் நாளை 7-ம் திகதி திங்கட்கிழமை காலை 7.00 மணி

15 ஆம் பக்கம் பார்க்க....

## சூளைமேடு கொலை வழக்கு; டக்ளஸ் நேற்று சாட்சியம்

(கொழும்பு)

1986ஆம் ஆண்டு தமிழகத்தின சூளைமேட்டில் இடம்பெற்ற கொலைச சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நேற்று சனிக்கிழமை காணொலி உரையாடல் மூலம் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சென்னை விசேட அமர்வு நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையின் போதே கொழும்பிலிருக்கும் இந்தியத் தூதரகத்திலிருந்து அவர் இவ்வாறு சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்குகளில் முன்னிலையாகுமாறு டக்ளஸ் தேவானந்

16 ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற விசாரணைகளின் போது

## சர்வதேசத்தை தலையிட விடோம் இராணுவத்தை காப்பதே இலக்கு

(கொழும்பு)

போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை மீது சர்வதேசம் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை நிவர்த்தி செய்து எமது நாட்டையும் இராணுவத்தையும் காப்பாற்றும் வகையிலேயே எமது நகர்வுகள் அமையுமே தவிர எவரையும் காட்டிக் கொடுக்கும் வகையில் அமையாது என தெரிவித்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க, போர்க்குற்ற விசா



15 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

## பேரம்பலம் சிவலிங்கம்



எமது நிறுவனத்தின் பணியாளர்
சி.சூரியகுமாரனின் அன்புத் தந்தை
**பேரம்பலம் சிவலிங்கம்** அவர்கள்
04.03.2016 வெள்ளிக்கிழமை
காலமானதையிட்டு துயர் அடைவதுடன்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3795)

52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
S.P.N நாகரட்ணம் அன்கோ,
கஜமுகன் ஹாட்வெயர்
S.P.N மோட்டோர்ஸ்



## ஸ்ரீ ஸ்ரீமான் கல்கி பகவானின் 68-வது ஜென்மதின மஹோற்சவம்

**அன்பர்களே!**

கலியுக அவதார புருஷராகிய ஸ்ரீமான் கல்கி பகவானின் 68-வது ஜென்மதின மஹோற்சவம் 07.03.2016 திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பித்து நிகழ பகவத் சங்கல்ப்பம் கைகூடியுள்ளது. இந் நிகழ்வானது பகவானின் பக்தி சங்கீர்த்தன பாற்குட பவனியுடன்

யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்திலும் சுன்னாகம் ஐயனார் கோவில் வீதியில் உள்ள பகவான் நிலையத்தில் ஆரம்பித்து ஜெயகிருஷ்ணா சத்சங்க இல்லத்திலும் நிகழவுள்ளது.

பாற்குட பவனியில் பங்குபற்றும் பக்தர்கள் அதற்குரிய ஆயத்தங்களுடன் 7.00 மணிக்கு ஒன்றுகூடும் வண்ணம் அழைக்கின்றோம்.

"காலை 10.00 மணிக்கு பகவானின் தரிசனம்"
WEBCAST இடம்பெறும்.
மகேஸ்வர பூஜையுடன் நிறைவு பெறும்...

(3788)

**ஸ்ரீ கல்கி விஷ்வ வித்யாலயா யாழ்ப்பாணம்**

# மணிவிழா வாழ்த்து

"தேச புத்திரா"
"சமூக திலகம்"
"சமூக நல ஜோதி"
E.S.P **நாகரத்தினம்**
அவர்கள்
இன்நறுங்கனிச் சோலை செய்தல்
இனிய நீர் தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாலாயிரம் நாட்கள்
பின்னருள்ள தர்மங்கள் யாவும்
பெயர் விளங்க ஒளிர நிறுத்தல்
அன்ன யாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
என்ற கோட்பாட்டுடன் வாழும்
E.S.P நாகரத்தினம் வாழ்க வளமுடன்

**வாழ்த்துவோர்**
E.S பேரம்பலம்,
கஜமுகன் ஹாட்வெயர்
முன்னாள் ஊழியர்களான
ப.ஹரிதாஸன், சக்திவேல்,
தயாபரன், மனோகரன்



(3797)

# மகா சிவராத்தரி மாசி அமாவாசை தின சிறப்பு ஏற்பாடுகள்

மகா சிவராத்திரி ,மாசி அமாவாசை திருநாட்களை முன்னிட்டு சுஜீவா வைத்தியசாலை (சுஜீவா தாய்மைப் பேறு சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை) நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம், சுஜீவா விற்பனை நிலையம் கேணி வீதி கீரிமலை என்பன இணைந்து பின்வரும் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

**(1) சிவனடியார்களுக்காக இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட சைவசமய கிரியைகளுக்கான கங்காதீர்த்தம் இலவசமாக வழங்குதல்.**

1. சுஜீவா வைத்தியசாலை 07/03/2016 காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
2. சுஜீவா விற்பனை நிலையம் 07/03/2016 காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரை

**(2) கீரிமலைக் கேணி வீதி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் (108 பாணலிங்ககோவில்) ஆலயத்தில் பூஜை வழிபாடுகள்**

கருங்கல் லிங்கத்தை விட 32 இலட்சம் மடங்கு சக்தி கூடிய பாணலிங்கமானது 108 எண்ணிக்கையில் சுமார் 3000 வருடங்களிற்கு முன்னர் இந்தியாவிலிருந்து ஜேர்மனிக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. இவை இராதாகிருஷ்ணசுவாமிகளால் ஜேர்மனியிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு சீலைச் சுவடியில் எழுதப்பட்டபடி மாவைக்கந்தன் ஆலயத்துக்கு சம்பந்தமான ஏற்கனவே சிறிய சிவன் கோவில் இருந்த கீரிமலை தீர்த்தக் கேணிக்கு அருகிலுள்ள இடத்தில் பிரமிட் வடிவில் ஆலயம் எழுப்பப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. எனவே இவ் வருடம் சிவராத்திரி தினம் காலை முதல் மறுநாள் மாசி அமாவாசை மாலை வரை வழமையான பூஜைகளுடன் விசேட பூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- **108 பாணலிங்கங்களுக்கான லிங்காபிஷேகம்.**
  **(07/03/2016 காலை 8.00 மணி முதல் 08/03/2016 மாலை 6.00 மணி வரை)**
  இங்கு வரும் அனைத்து சிவனடியார்களும் இலட்சம் மடங்கு அபிடேகம் செய்த பலனை தரவல்ல வலம்புரிச்சங்குகளால் கங்கா தீர்த்த அபிஷேகம் செய்யலாம். இதேபோல சிவராத்திரி முதல் காலம் பாலும், இரண்டாம் காலத்தில் தயிரும், மூன்றாம் காலத்தில் (லிங்கோற்பவ) நெய்யும் வெந்நீரும் அபிஷேகம் செய்யலாம்.

- **ருத்ர யாகம் ருத்ர பாராயணம் ஸ்ரீருத்ர மந்திர ஜபம்**
  **(07/03/2016 காலை 12.30 முதல் மதியம் 3.30 மணிவரை)**
  சிவதொண்டர் சுவாமி மனோஜன், அநகாய சர்மா, செல்வலிங்க ஐயர், பாபாசுவாமிகள், நரசிங்கசித்தர், சிவரூப சிவதொண்டர்கள் பாலகிருஷ்ணன், பிரசாந்தன், தங்கராஜசிங்கம் போன்றோரின் வழிகாட்டல்களில் இங்கு வரும் அனைத்து சிவனடியார்களும் பங்கு கொள்ளலாம்.

**சிவ சின்னங்களான சுத்ததிருநீறு மற்றும் இலட்சம் மடங்கு பலனை பெற உதவும் உருத்திராட்சைகள் என்பன தரித்து சிவனருள் பெற்றுக் கொள்வீராகுக.**

விளம்பரம்

## சுஜீவா வைத்தியசாலை

(சுஜீவா தாய்மைப் பேற்று சிறப்புசித்த ஆயுள்வேத வைத்தியசாலை)

குழந்தையின்மை உட்பட மாற்றமுடியாது என கைவிடப்பட்ட வியாதிகளை நீக்குவதில் பிரசித்தி பெற்றது.

வேதங்களிலொன்றான அதர்வவேதத்தின் உபபிரிவான ஆயுள்வேத சித்த வைத்தியம் தூய நிலையில் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது.

நாச்சிமார் கோவிலடி
K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3913)

## சுஜீவா விற்பனை நிலையம்

(ஆலய பொருட்கள் விற்பனை நிலையம்)

பசுச்சாணத்தால் செய்யப்பட்டு திருநீற்றுப்பச்சிலை சேர்க்கப்பட்ட தூய திருநீறு 2 முகம் முதல் 21 முகம் வரையான ருத்ராட்சைகள், யந்திரங்கள், லிங்கங்கள், பூஜை செய்யப்பட்ட வாஸ்துதோஷம், நவக்கிரக தோஷம் நீக்கும் பொருட்கள், நோய் தீர்க்கும்- செல்வம் தரும் தாயத்துக்கள், படிகம் மாலைகள், ஸ்ரீசக்கரம், சாளக்கிரமம் வெள்ளெருக்குப்பிள்ளையார், கூர்ம யந்திரம் (ஆமை) என பல சமய பொருட்கள் வாங்கலாம்.

# மகிந்தவிடம் காட்டிய கோபமான முகத்தை மைத்திரியிடம் காட்டவில்லை சர்வதேசம்

## மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

சர்வதேசம் மகிந்த ராஜபக்ஷவிடம் காட்டிய கோபமான முகத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் காட்டவில்லை.

எமது ஜனநாயக நகர்வுகளே இதற்கு காரணமாகும் என நிபுணத்துவ தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நல்லிணக்கம் மற்றும் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுத்தல் போன்ற விடயங்கள் குறித்தே கடந்த முறை ஜெனிவா தொடரில் அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது.

அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவா தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் வரையில் அனைத்து வகையான அழுத்தங்களையும் அமெரிக்கா வழங்கும் என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஷா பிஸ்வால் தெரிவித்திருந்தார்.



அது தொடர்பில் வினவிய போதே அமைச்சர் மகிந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

(கொழும்பு)

பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

அண்மைக் காலமாக பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் பாரியளவிலான நடவடிக்கை ஒன்றை நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினதும் பொலிஸாரினதும் கூட்டு முற்சியாக பாதாள உலகக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பின்னர் பாதாள உலகக் குழுச் செயற்பாடுகள் காணப்படும் ஏனைய மாகாணங்களிலும் முன்னெடுக்கப்பட உள்ளது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களின் மேற் பார்வையின் கீழ் இந்த விசேட பிரிவுகள் இயங்க உள்ளன.

24 மணித்தியாலமும் கண்காணிப்பு நடத்தி பாதாள உலகக்குழு செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பாதாள உலகக்குழு உறுப்பினர்கள், போதைப் பொருள் வர்த்தகர்கள், குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக பொலிஸ் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# வரிகளில் மாற்றம் கொண்டுவர தீர்மானம்!

(கொழும்பு)

வரிகளில் மாற்றம் கொணடுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது வரி அறவீடு தொடர்பிலான கொள்கைளில் மாற்றம் செய்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

வரி அறவீட்டு வீதங்கள், வரி அறவீடு செய்யும் துறைகள் மற்றும் வரி அறவீடு செய்யும் முறைமை போன்றனவற்றில் மாற்றம் செய்யப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

நாட்டின் எதிர்காலம் குறித்த சில முக்கிய தீர்மானங்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த அரசாங்கத்தினால் ஆவணங்களின்றி பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தக் கடன் தொகைகள் பற்றியும் கூட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவை அமைச்சர் ஒருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ)

# முக்கிய அரசியல்வாதிகள் நால்வர் மீதான ஊழல் விசாரணைகள் இறுதிக்கட்டத்தில்

(கொழும்பு)

**பிரபல அரசியல்வாதிகள் நால்வர் மீதான முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன எனவும் விசாரணை முடிவில் அவர்கள் மீதான மேலதிக நடவடிக்கைகள் பற்றி தீர்மானிக்கப்படும் எனவும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

மகிந்த அரசின் பிரபல அரசியல்வாதிகளாக இருந்த இவர்கள் நால்வரும் மோசடியாக சொத்து சேர்த்துள்ளமை தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்ததாகவும், அவ்விசாரணைகள் தற்சமயம் முடியும் தறுவாயில் உள்ளதாகவும், இன்னும் சில தினங்களில் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ)

# நெடுந்தீவிலுள்ள மாவிலி துறைமுகத்தை கடற்படையினர் விடுவிக்க வேண்டும்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

நெடுந்தீவிலுள்ள பாரம்பரிய துறைமுகமான மாவிலி துறைமுகத்தை கடற்படையினர் விடுவித்து அதனை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கொண்டுவந்த மேற்படி தீர்மானம், அனைவரது ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் பிரதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு, கடற்படைத் தளபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தற்போது, மேற்படி துறைமுகம் கடற்படையினர் வசமுள்ளது. கடற்படையினர் தங்கள் தேவைக்கு பயன்படுத்துவதுடன், பொதுமக்கள் பயன்படுத்தவும் அனுமதிக்கின்றனர்.

எனினும், வாடைக்காற்று நேரங்களில் தங்கள் படகுகளை மீனவர்கள் மேலே ஏற்றுவதற்கு இந்தத் துறைமுகத்தை பயன்படுத்த கடற்படையினர் அனுமதிப்பதில்லை. முழுமையாக இந்தத் துறைமுகம் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் தாங்கள் சுதந்திரமாக அதனைப் பயன்படுத்தலாம் என கடற்றொழிலாளர் அமைப்புக்கள் கூறின.

மேலும் நெடுந்தீவு பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களால் நெடுந்தீவு மீனவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாக யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ்கண்ணா இதன் போது தெரிவித்தார்.

நெடுந்தீவு மீனவர்களில் கடலில் இறங்கி மீன்பிடிக்கும் போதும், ஆழ்கடலுக்குச் செல்லும் போதும் அவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள் இந்திய மீனவர்களால் அழிக்கப்படுகின்றது. இந்திய மீனவர்கள் அத்துமீறுகின்றனர் என தொழில் செய்யாமல் இருந்தால் நெடுந்தீவு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# சமிந்த மீது அதிக கரிசனை காட்டுகிறார் ஞானசார தேரர்

(கொழும்பு)

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தெமட்டகொட சமிந்தவை பார்வையிட பொதுபல சேனாவின் செயலாளரான ஞானசார தேரர் வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார்.

இதன்போது தான் சிறையில் காலுக்கு செருப்பு அணியாததைக் கண்ட சமிந்த தனக்கு செருப்பு வாங்கி தந்ததோடு தனக்கு சிறையில் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தந்ததாக தேரர் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை கடந்த புதன கிழமை வெலிக்கடை சிறைச்சாலை பேருந்து மீது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் பாதாள உலகத் தலைவரான தெமட்டகொட சமிந்த படுகாயமடைந்து தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வைத்தியசாலைக்கு தனது பரிவாரங்களுடன் சென்ற ஞானசார தேரர் சமிநதைக்கு பிரித் நூலையும் கட்டியுள்ளார்.

அத்துடன் சமிந்த பாதாள உலகத் தலைவரா? குற்றவாளியா? என்ற விடயங்களுக்கு அப்பால் நான் ஒரு மனித நேயமுள்ள பௌத்த துறவி என்ற ரீதியில் அவரை பார்ப்பதற்கு சென்றேன் என்றும் தேரர் விளக்கமளித்துள்ளார். (இ)

# ஹெரோயினுடன் 2 பெண்கள் கைது

கல்கிஸ்ஸ பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த இரண்டுப் பெண்களை கல்கிஸ்ஸ பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

56 வயதான குறித்த பெணணிடம் இருந்து 3 கிராம் 570 மில்லிகிராம் ஹெரோயினை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதேவேளை கல்கிஸ்ஸ பெலக்கடே என்ற இடத்தைச் சேர்ந்த 33 வயது பெண ஒருவரையும் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த பெண்ணிடம் இருந்து 2 கிராம் 100 மில் லி கிராம் ஹெரோயினை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் இவர்கள் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# அவன் கார்ட் நிறுவனம் கடற்படைக்கு 124 மில்.ரூபா நட்டத்தை ஏற்படுத்தியது

(கொழும்பு)

அவன் கார்ட் நிறுவனம் கடற்படைக்கு 124 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக பாரிய நிதி மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவன் கார்ட் நிறுவனத்தினால் கடற்படைக்கு வழங்கப்பட வேண்டிய தொகை குறைந்த காரணத்தினால் இவ்வாறு நட்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த அரசாங்க ஆட்சிக் கால பாதுகாப்பு அமைச்சு, அதிகாரிகள் மற்றும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரே இவ்வாறு நட்டம் ஏற்படக் காரணம் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.


முன்னாள் கடற்படைத் தளபதி ஜயனாத் கொலம்பகே ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த போது நேற்று முன்தினம் இதனை தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற நீதவான் கிஹான் குலதுங்க மற்றும் அரச சட்டத்தரணி ஜனக பண்டார ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்டணக் குறைப்பை மேற்கொள்ளுமாறு அவன் கார்ட் நிறுவனம் 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கடற்படையினரிடம் கோரியிருந்த் போதிலும், அப்போதைய மேலதிக பாதுகாப்புச் செயலாளர் தமயந்தி ஜயசூரிய திகதி குறிப்பிடாமல் ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளார்.

இதனால் கட்டணக் குறைப்பு 2012 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதனால் பாரியளவு நட்டம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவன் கார்ட் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)




# ஆசிய கிண்ண இறுதிப் போட்டி இன்று பங்களாதேஷை தெறிக்கவிடுமா இந்தியா?

இரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் ஆசிய கிண்ண தொடரின் இறுதிப் போட்டி இன்று மிர்பூரில் நடைபெறுகிறது.

இதில் 5 முறை சம்பியனான இந்திய அணி கடந்த ஆசிய கிண்ண போட்டியில் 2ஆம் இடத்தை பிடித்த பங்களாதேஷ் அணியை சந்திக்கிறது.

13ஆவது ஆசிய கிண்ண 20 ஓவர் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய 5 நாடுகள் பங்குபற்றின.

'லீக்' போட்டிகளின் முடிவில் இந்தியா தான் மோதிய 4 ஆட்டங்களிலும் வென்று 8 புள்ளிகளுடன் முதலிடத்தையும், பங்களாதேஷ் 3 வெற்றி, ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்தையும் பிடித்து இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதும இறுதிப் போட்டி இன்று நடக்கிறது.

தோனி தலைமையிலான இந்திய அணி இப் போட்டித் தொடரில் மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறது. இதனால் பங்களா தேஷை வீழ்த்தி ஆசிய கிண்ணத்தை வெல்லுமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

அதேநேரத்தில் பங்களாதேஷ் அணியை இந்திய வீரர்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்ள இயலாது. சொந்த மண்ணில் அந்த அணி வீரர்கள் சிறப்பாக விளையாடக்கூடியவர்கள்.. இலங்கை, பாகிஸ்தான் அணிகளை இந்த தொடரில் சாய்த்திருந்தது.

மேலும் இந்திய அணி கடந்த காலங்களில் பங்களாதேஷிடம் ஒருநாள் தொடரில்தோற்று இருந்தது.

இதனால் இந்திய அணி .இன்றைய இறுதிப்போட்டியில் மிகுந்த கவனமுடன் விளையாடும். ஏற்கெனவே 'லீக்' ஆட்டத்தில் பங்களாதேஷை 45 ஓட்டங்களில் வீழ்த்தி இருந்தது.

இதனால் இந்திய அணி மிகுந்த நம்பிக்கையுடன் விளையாடும். கடைசியாக விளையாடிய பத்து 20 ஓவர் ஆட்டத்தில் இந்தியா 9இல் வெற்றி பெற்று இருந்தது.

ஆசிய கிண்ண ஒருநாள் போட்டிகளில் 5 முறை சம்பியன் பட்டம் பெற்று இருந்த இந்தியா முதல் முறையாக நடைபெறும் 20 ஓவர் ஆட்டத்திலும் கிண்ணத்தை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு எதிரான கடைசி லீக் ஆட்டத்தில் ஓய்வுகொடுக்கப்பட்ட ஆசிஷ் நெஹ்ரா, அஸ்வின், ரவீந்திர ஜடேஜா இன்றைய இறுதிப்போட்டியில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை விராட் ஹோலி மிகவும் நிலையாக விளையாடி வருகிறார். ரோகித் சர்மா, தவான், ரெய்னா போன்ற அதிரடி துடுப்பாட்டக்காரர்களும் நல்ல நிலையில் உள்ளனர். மேலும் யுவராஜ் சிங் நல்ல நிலைக்கு திரும்பி இருப்பது கூடுதல் பலமாகும்.

20 ஓவர் உலக கிண்ணத்துக்கு முன்பு கடைசியாக நடைபெறும் இந்த ஆட்டத்தில் இந்திய வீரர்கள் அனைவரும் முழு திறமையுடன் ஆடுவது முக்கியமானதாகும்.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளை வீழ்த்தி இருந்ததால் பங்களாதேஷ் அணி மிகுந்த நம்பிக்கையுடன் இந்திய அணியை சந்திக்கும். உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு அந்த அணிக்கு கூடுதல் பலமே.

பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்டத்தை பொறுத்தவரை சபீர் ரகுமான் சிறப்பாக உள்ளார். அவர் இலங்கைக்கு எதிராக 80 ஓட்டங்கள் எடுத்து முத்திரை பதித்தார். இது தவிர முஷ்பிகுர் ரகீம், சகீப் அல் ஹசன், மகமதுல்லா, அணித் தலைவர் மோர்டாசா போன்ற சிறந்த வீரர்களும் அந்த அணியில் உள்ளனர்.

இன்றைய இறுதிப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது. ஸ்ரார் ஸ்போர்ட்ஸ், தூர்தர்சனில் இந்தப் போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

# எருமை மாட்டின் மீது மோதியது ஹயஸ்

## 5 பேர் படுகாயம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் ஹயஸ் வாகனம் எருமை மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் படுகாயம் அடைந்த நிலையில் ஒட்டுசுட்டான் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். விபத்தின்போது வாகனத்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் நெடுங்கேணி ஒட்டுசுட்டான் வீதியில் இடம்பெற்றது.

இதில் புதுக்குடியிருப்பு வண்ணாபுலம் பாடசாலை வீதியைச் சேர்ந்தவர்களான தினேஸ் (வயது 28), தினேஸ் ரவிக்கா (வயது 25), தினேஸ் டிலுக்சி (வயது 3), யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறைச் சேர்ந்தவர்களான பிறேமதாஸ் பிரதீபன் (வயது 28), கனகலிங்கம் சுமனாதேவி (வயது 45) ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வாகனம் மேற்படி வீதியில் நின்ற எருமை மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது வாகனத்தில் பயணித்த ஐந்து பேரும் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணையை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-2, 28)


# 8ம் ஆண்டு நினைவலைகள்



கிருஸ்ணர் சிவநேசன்

(யாழ்.மாவட்ட முன்னாள் பா.ம.உ (TNA)/வட மாகாண (தெ.ப. பொருள் பேரிணையம் - பொது முகாமையாளர்)

தோற்றம் 21.01.1957 மறைவு 06.03.2008

தஞ்சமோ உண்டு இனி நம் வாழ்வுதனில்
இன்புறு நம் தந்தை எரியகம் மூண்டதனால்
கலங்கி நோய் கைமிகுந்து எமை வாட்ட
அன்பரை இழந்து அலவும் எம் நெஞ்சிங்கு
காலமது கரைந்து போனபோதும்-உம்
நினைவுகள் மட்டும் எம் நெஞ்சமதில்

குடும்பத்தினர் - கரவெட்டி கிழக்கு

(C-3914)

## கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்கள் சிறப்புற வாழ்த்துகிறோம்

சரித்திரப் பிரசித்தி பெற்றதும் தொன்மை வாய்ந்ததும் புனிதமும் அதிசயமும் சக்தியும் நிறைந்த மாபெரும் சிவன் ஆலயமான கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானுக்கு 7ம் திகதி தேர்த்திருவிழாவும், 8ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறுவதால் இலங்கையிலுள்ள சைவ அடியார்கள் அனைவரும் கீரிமலை என்கின்ற புனித நகரில் ஒன்று கூடி இனிய சிவபூமியில் சிவநாம சிந்தனை சிவசேவையில் ஒருமித்தும் சிவன் அருள் பெற்றுய்ய சிறப்புற வாழ்த்துகிறோம்.

579, நாச்சிமார் கோவிலடி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

சுஜீவா வைத்தியசாலை
சுஜீவா விற்பனை நிலையம்

(C-3915)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## விற்பனைக்கு

முத்து மணவறை, பூ மணவறை விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0779789467

(3790)

## வேலைவாய்ப்புக்கள்

எமது விசா ஆலோசனை நிறுவனத்திற்கு பேச்சாற்றலுடைய பெண் பணியாளர்கள் தேவை.



- ஆங்கிலம் சரளமாக கதைக்க கூடியவர்கள்
- 28 வயதிற்குட்பட்டவர்கள்
- Ms Office, Photoshop இல் தேர்ச்சி
- சிங்களப் பேச்சாற்றல் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும் (3799)

WINSTAR VISA CONSULTANTS
#106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.
0765450539

## வேலைக்கு ஆட்கள் தேவை

புத்தக விற்பனை நிலையத்துக்கு பெண் வேலையாள் தேவை. தமிழ், ஆங்கில ரைப்பிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளும் தொலைபேசி இல:-
0770792264

(3791)

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆவது வீதியில் 3 ஆம் இலக்க தொடர்மாடி இணைந்த குளியலறையுடன் கூடிய 2 அறை வீடு நாள்/கிழமை/மாத/வருட வாடகைக்குண்டு.
(C-3916)

தொடர்பு: 0778378597

## தகவல் தாரீர்

மு/இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய அன்னையின் வைரவிழா எதிர்வரும் 30.08.2016 அன்று கோலாகல கொண்டாட்டம் காண உள்ள வேளையில், வெளிவர உள்ள வைரவிழா மலருக்காக கீழ்வரும் தகவல்களை வேண்டி நிற்கின்றோம்

1. பாடசாலையில் கல்வி கற்று அரச மற்றும் அரசசார்பற்ற பணிகளில் சிறந்தோங்கி மிளிரும் பழைய மாணவர்கள் விபரம்.
2. பாடசாலையில் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டு தற்போது இளைப்பாறி வாழும் ஆசிரியர்கள் விபரம்.
3. பாடசாலையில் கல்வி தொடர்ந்து கொண்டிருக்கையில் அகால மரணமானோர் விபரம்.

இடர்கால சூழலில் இவ் விபரங்கள் விடுபட்டு போயுள்ளமையால் அன்புள்ளங்கள் இவ் விபரங்களை கீழ்க்காணும் வழிகளில் எமக்கு அறியப்படுத்துமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**குறிப்பு :** 15.04.2016க்கு முன் எமக்கு கிடைக்கும் விபரங்கள் மட்டுமே வெளிவரவிருக்கும் வைரவிழா மலரில் பதிவிடப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

மின்னஞ்சல் : miranaippalairc@gmail.com
தொலைபேசி : அலுவலகம் - 0212290801
அதிபர் - 0772881895
உப அதிபர் - 0750470641
முகநூல் : M Iranaippalai RC MV
Skype : iranaippalai.rcmv
(3794)

வைரவிழா ஏற்பாட்டுக்குழு
மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.

## வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வுப் போட்டி-2015

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாவருடம் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கமாகக்கொண்டு மேற்படி போட்டிகளை நடாத்தி வருகின்றது. இப்போட்டிக்கான நிபந்தனைகள் வருமாறு,

01. நூல்கள் யாவும் 2015 ஜனவரி 01 ஆம் திகதிக்கும் 2015 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும் முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.

02. நூலாசிரியர் வடக்கு மாகாணத்தின் 05 மாவட்டங்களில் ஒன்றினை பிறப்பிடமாகக் கொண்டவராக அல்லது வடமாகாணத்தில் 10 வருடங்கள் வாழ்ந்தவராக இருத்தல் வேண்டும். (யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி)

03. நூலின் 04 பிரதிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

04. பின்வரும் துறைகளில், போட்டிகள் இடம்பெறும். நூலாசிரியர் தான் எந்தப்பிரிவில் தனது ஆக்கத்தை சேர்த்துக்கொள்ள விரும்புகின்றார் என்பதை கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

| | |
|---|---|
| 1) அறிவியல் | 9) நாவல் |
| 2) சமூக விஞ்ஞானம் | 10) நாடகம் |
| 3) ஆய்வு நூல் | 11) குழந்தை இலக்கியம் |
| 4) திறனாய்வு | 12) சிறுவர் இலக்கியம் |
| 5) சமயம் | 13) நாட்டார் இலக்கியம் |
| 6) வரலாறு | 14) சிறுகதை |
| 7) மரபுக்கவிதை | 15) மொழிபெயர்ப்பு |
| 8)புதுக்கவிதை | 16) ஏனையவை |

05. நூல் ISBN முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதாக இருத்தல் வேண்டும்.

06.மொழிபெயர்ப்பு (மொழிபெயர்ப்பு நூல்கள் யாவும் தமிழ் மொழியிலிருந்து ஏனைய மொழியிலும் ஏனைய மொழியிலிருந்து தமிழ் மொழியிலும் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்) தவிர்ந்த ஏனைய நூல்கள் தமிழ்மொழி மூலம் ஆக்கப்பட்டிருப்பதுடன் நூலில் பதிப்பித்த ஆண்டும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

07. பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தரிடம் விண்ணப் பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து நூல்களை பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்கலாம்.

08. விண்ணப்ப முடிவுத் திகதி 2016.04.30 ஆகும். இத்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக

**உதவிப் பணிப்பாளர்,**
**இல.175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூற் பிரதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

09. போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் நூல்கள் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு 021 205 4105 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இ.இரவீந்திரன், செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.

(ஞ-3906)


வாழ்க்கையில் வெற்றி பெற எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்
வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு பிராந்தியங்களில் பணியாற்றுவதற்கான-அரிய சந்தர்ப்பம்



செலிங்கோ லை.'.ப் விற்பனை ஆலோசகருக்கு கிடைக்கும் சிறந்த வருமானம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள், அறிவு, அனுபவம் மற்றும் ஏனைய நலன்கள் மிக விஷேடமானவை. எனவே வாழ்க்கையில் வெற்றி பெற செலிங்கோ லை.'.ப் உடன் இணைந்து கொள்ளுங்கள். இது தொழிலுக்கும் மேலான ஒரு உன்னத காரியம்.

தகைமைகள்

- க.பொ.த (உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி இருத்தல் வேண்டும். (விஞ்ஞானம், வணிகம் அல்லது கணிதப் பிரிவு எனின் 2 சித்திகள் போதுமானது)
அல்லது
க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி இருத்தல் வேண்டும். அவற்றுள் இரண்டிற்கு திறமைச் சித்தி காணப்படுவதுடன்
1 வருட தொழில் அனுபவமும் இருத்தல் வேண்டும்.
- பாடசாலை கல்விக்குப் புறம்பாக வேறு துறைகளில் திறமையை வெளிப்படுத்தியவராக இருத்தல் வேண்டும்.
- உறவினர், நண்பர், அயலவர் மற்றும் சமூகத்திலுள்ள வெவ்வேறு நபர்களுடன் சிறந்த பொதுசனத் தொடர்பு இருத்தல் வேண்டும்.
- விற்பனைத் துறையில் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- ரூ. 10,000 (3 மாதங்களுக்கு) ஊக்குவிப்பு தொகையாக வழங்கப்படும்*
- பயிற்சி மற்றும் தொழில்துறையில் விருத்தி

உங்கள் சுயவிபரக்கோவையை பின்வரும் முகவரியில் அல்லது அருகிலுள்ள செலிங்கோ லை.'.ப் கிளையில் ஒப்படையுங்கள். இல்லையெனில jobs@ceylife.lk இற்கு ஈ-மெயில் மூலம் அனுப்பவும் முடியும்.

சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் - விற்பனை நிர்வாகம்,
செலிங்கோ லை.'.ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விற்பனை ஆலோசகர் பதவி" எனக் குறிப்பிடவும். (ஈ-மெயிலிலும் இவ்வாறு குறிப்பிடுக)

வாழ்க்கை,
பாசம்,
பாதுகாப்பு.

(ஞ-3910)

PHOENIX O&M

செலிங்கோ லை.'.ப்

செலிங்கோ லை.'.ப் காப்புறுதி நிறுவனம், செலிங்கோ லை.'.ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PB5183 தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் திரு.வீ.கனகசுந்தரசுவாமி**
(முன்னாள் கிராம சேவையாளர்,புதுக்குடியிருப்பு, வடமாகாண சபை உறுப்பினர், முல்லை. மாவட்டம்.)

தோற்றம்
1948.06.30

மறைவு
2015.02.17



முற்றத்து மல்லிகை
முழுதும் உணர்ந்த மல்லிகை
பற்றோடு வாழ்ந்த அந்த
பரமபிதா எம் தந்தை
வற்றாத அன்பு தந்தார்
வாண்மையான வாழ்வு தந்தார்
உற்றதோ கெடுதி
ஒரு வருடம் சென்றிடவே!

கடந்த வருடம் சிவராத்திரி நன்னாளில் சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் வீரவாகு-கனகசுந்தரசுவாமி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு எமது இல்லத்தில் 07.03 2016 நாளை திங்கட்கிழமை இடம்பெற இருக்கின்றது. இந் நிகழ்வில் நண்பர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் , சகமாகாண சபை உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர்கள், பொதுமக்கள் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறும் அன்று இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

10 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

குடும்பத்தினர்.

(ச-3909)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
28
06
1941

உதிர்வு
05
02
2016

**அமரர் நாகமுத்து ஜெயராஜசிங்கம்**

துன்பத்தை வெளிக்காட்டுவதற்கு
சமமான ஒரு காரியம் இருக்குமானால்
அதற்கு பெயர் தான் மௌனம்
மௌனம் கலைந்து உங்களை தேடினோம்
மாமாவே: எங்கு சென்றீர்கள்
தினம், தினம் கண்விழித்து
உங்களை, தேடுகிறோம் காணவில்லை!

06.03.2016 அன்று அந்தியேட்டி நிகழ்விலும், சபிண்டீகரணத்திலும் கலந்து, அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

"தாமரபரணி"
அல்வாய் வடக்கு, அல்வாய்.
077 711 1081

இ.தமிழ்அழகன் (மருமகன்)
தர்மிகா ஹாட்வெயர்
தர்மிகா ரான்ஸ்போட்

(3781)

# அரசியலில் வல்லவர்களுடன் நல்லவர்களும் உள்ளிட வேண்டும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

அரசியலில் வல்லவர்களுடன் நல்லவர்களும் உள்ளிடவேண்டும். ஏனெனில் வல்லவர்கள் பலர் சுயநலவாதிகள். நல்லவர்கள் பொதுநல சிந்தனை படைத்தவர்கள் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் அமைக்கப்பட இருக்கின்ற மாணவர் விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

1875களில் தென்னிந்திய திருச்சபையினால் சாவகச்சேரியில் உருவாக்கப்பட்ட இக் கல்லூரி தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஓர் கலங்கரை விளக்கமாக அக் காலத்தில் அமைந்திருந்தது.

டிறிபேர்க் கல்லூரி மீண்டும் ஒருமுறை தனது பழைய தராதரத்திற்கு உயர்ச்சிபெறும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். சர்வதேச பழைய மாணவர்கள் ஒன்றியத்தினால் 100 மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கக் கூடிய விடுதியொன்றையும் நவீன வசதிகளுடன் முற்றுமுழுதாக பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் கட்டித்தரவிருப்பது உங்கள் முன்னேற்றத்திற்கான ஒரு அறிகுறி என்று கூறலாம்.

இந்த நல்ல கைங்கரியங்களை முன்னின்று ஆரம்பித்து வைப்பதற்காக எனது நெருங்கிய நண்பர் மனோகணேசன் இங்கே வருகை தர இருந்தார்.

நான் நல்லதொரு சூழலில் அமைதியான முறையில் எனது இளைப்பாறல் காலத்தைக் கழித்து வந்திருந்தேன். அதில் மண் அள்ளிக் கொட்டக் காரணமாயிருந்தவர்களில் ஒருவர் நண்பர் மனோகணேசன். மற்றவர்கள் தனிப்பட்டமுறையில் வலிந்தழைத்தார்கள் என்றால் நண்பர் மனோகணேசன் கூட்டம் வைத்தே என்னை அரசியலுக்கு அழைத்தார். என் அமைதியைக் கெடுத்துவிட்டு அவர் இப்பொழுது அமைச்சராகிவிட்டார்.

இப்பாடசாலை தென்மராட்சி மாணவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என மட்டுப்படுத்தாமல் வன்னிப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் மலையகப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களும் இங்கே வந்து தங்கி தமது கல்விச் செயற்பாடுகளைமுன்னெடுக்கக் கூடியவகையில் மாணவர்களின் விடுதி மற்றும் இதர தேவைகள் பற்றிய ஒழுங்குகள் பழைய மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்திருக்கின்ற காரணத்தினால் பொருளாதார வசதி குறைந்த திறமை மிக்க மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த வரப்பிர சாதமாக அமையும்.

இக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அருந்தவபாலன் ஒரு திறமையான அதிபராக விளங்கி இக்கல்லூரியை வளர்ச்சிப் பாதையை நோக்கி முன்னெடுத்துச் சென்றபோதும் அவரின் பணிகள் கல்லூரியுடன் மட்டும் நின்றுவிடாது இப்பகுதியைச் சார்ந்த அனைத்து மக்களுக்கும் அவரின் உயரிய சேவை கிடைக்கப் பெற வேண்டும் என்ற உங்கள் அனைவரதும் விருப்பத்தின்படி அருந்தவபாலன் பொதுத் தேர்தலில் போட்டியிட்டபோதும் அவர் விருப்பு வாக்கு எண்ணிக்கையில் ஒரு சிலவாக்கு வித்தியாசங்களில் வெற்றி வாய்ப்புக்களை நழுவ விட்டது ஒரு துர்ப்பாக்கியம் என்றே கருதுகின்றேன்.

எனினும் அவர் மனம் தளராது மக்கள் பணிக்காகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற தன்மையை நான் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டி வாழ்த்துகின்றேன். அரசியலில் வல்லவர்களுடன் நல்லவர்களும் உள்ளிட வேண்டும். வல்லவர்கள் பலர் சுயநலவாதிகள். நல்லவர்கள் பொதுநல சிந்தனை படைத்தவர்கள். அருந்தவபாலன் பொதுநல சிந்தனை படைத்த வல்லவராவார்.

அனைவரும் ஒன்றுசேரப் பாடுபட்டு இந்தச் சாவகச்சேரி மண்ணிலே முன்போன்று மூன்று பாடசாலைகள் சமாந்தர வளர்ச்சிகளைப் பெற்று வருகின்றன என மக்கள் போற்றத்தக்க வகையில் இக்கல்லூரி மீண்டும் வளர்ச்சியுற வேண்டும் என அவர் மேலும் தெரித்தார். (இ-9)

# தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தினரின் சிவராத்திரிவிழா கீரிமலை சிவபூமியில்

தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தினரின் சிவராத்திரி விழா கீரிமலை சிவபூமி யாத்திரிகர் விடுதியில் சிவராத்திரி தினமான நாளை திங்கட்கிழமை தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத் தலைவர் ச.சிவானந்தராசா தலைமையில் நடைபெறும்.

இரவு 7 மணிக்கு சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் துர்க்கா துரந்தரர் கலாநிதி ஆறு.திருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவுடன் ஆரம்பமாகும் மேற்படி நிகழ்வின் சிறப்பு நிகழ்வுகளாக, கரகாட்டம், காவடி ஆட்டம், நடனம், ஒயிலாட்டம் ஆகியன இடம்பெற்று, இன்றைய சூழலில் ஆன்மீகத்தை இளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்வது குடும்பத்தின் பங்களிப்பா? சமூகத்தின் பங்களிப்பா? என்னும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறும். குடும்பத்தின் பங்களிப்பே! என்ற அணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பா.மகாலிங்கசிவம் தலைமையில் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ந.பகீரதன், காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரி ஆசிரியர் பா.பாலமுரளி ஆகியோரும் சமூகத்தின் பங்களிப்பே! என்னும் தலைப்பில் தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.அருட்குமரன், யூனியன் கல்லூரி ஆசிரியர் எஸ்.நகுலன் ஆகியோரும் வாதிடுவர். பட்டிமன்ற நிகழ்வுக்கு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் நடுநிலை வகிப்பார்.

விசேட நிகழ்வாக தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் புகழ்பூத்த கலைஞர்கள் வழங்கும் அரிச்சந்திர மயான காண்டம், சத்தியவான் சாவித்திரி ஆகிய இசை நாடகங்கள் இடம்பெறவுள்ளன. (இ)

# விசேட மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 1 ஆம் 2 ஆம் பருவகால மற்றும் ஆண்டிறுதி விசேட மீள் பரீட்சைக்கு (1st, 2nd semester & Annual- Special Repeat Exam) விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்குமான விசேட மீள் பரீட்சையானது நாளை மறுதினம் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளையும் மற்றும் பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதற்காகவும் அன்றைய தினம் தொடர்பு கொள்ளுமாறும் இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 222 9803 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நிறுவன உதவிப்பதிவாளர் யோ. ரிசாந்தன் அறிவித்துள்ளார். (இ-5)

## மஹா கும்பாபிஷேகம்

வடமராட்சி-புலோலி இலந்தையடி தோட்டத்து ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான சம்பு ரோஷண ஏக குண்டபக்ஷ(பெருஞ்சாந்தி மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை 17ஆம் திகதி வியாழக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

சைவ சித்தாந்த பண்டிதர் சிவாகம உபதேச வாசஸ்பதி, சிவாகம வித்தியா பூஷணம் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்த ராஜக்குருக்கள் தலைமையில் இக்கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறவுள்ளது. (இ-5)

## உடற்கட்டமைப்பு சங்கம் உருவாக்கல்

இலங்கை உடற்கட்டமைப்பு மற்றும் விருத்தி சம்மேளனத்தின் வடமாகாணத்திற்கான சங்கம் உருவாக்கல் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ரில்கோ யாழ். சிற்றி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு இலங்கை உடற்கட்டமைப்பு மற்றும் விருத்திச் சம்மேளன உத்தியோகத்தர்களும் ஆசிய உடற்கட்டமைப்புசம்மேளனஉத்தியோகத்தர்களும்கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்போன்ற மாவட்டங்களுக்கான உடற்கட்டமைப்பு மற்றும் விருத்திச் சங்கமே உருவாக்கப்படவுள்ளது.

எனவே வடமாகாணத்திற்கென அமைக்கப்படவுள்ள இவ் உடற்கட்டமைப்பு மற்றும் விருத்தி சங்கம் உருவாக்கல் என்ற இந்நிகழ்விற்கு ஒவ்வொரு கழகங்களினதும் உரிமையாளர் அல்லது பயிற்றுவிப்பாளர் ஒருவர் கட்டாயம் சமுமளிக்க வேண்டும் என சம்மேளன வடமாகாண ஒருங்கிணைப்பாளர் அ.ஜெயகிருஷ்ணா தெரிவித்துள்ளார். (இ-5)

# பாதுகாப்பற்ற நிலையில் வீதிக்கு அருகில் கிணறு



வீதிக்கருகே பாதுகாப்பற்ற கிணறு காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வடமராட்சி- மண்டான் சந்நிதி கோவில் வீதிக்கருகாமையில் இக் கிணறு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற முறையில் கிணறு காணப்படுவதால் அசம்பாவிதங்கள் நிகழக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (இ-5-60)




## மஹா சிவராத்திரி

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹா சிவராத்திரி உற்சவம் நாளை இடம்பெறும். சிவராத்திரி விசேட பூஜைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## பஜனை நிகழ்வு

பருத்தித்துறை சாயிசேவா நிலையத்தில் அகண்ட நாமபஜனை நாளை இடம்பெறவுள்ளது. இப்பஜனையானது நாளை மாலை 6 மணி தொடக்கம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும். (இ-5)

## இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெறும்.

இணுவில் மஞ்சத்தடி ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தலைவர் இணுவையூர் வி.கே. குகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பாடல்- நிசேதனா-கார்த்திகேசன், வைஸ்ணவி ராமச்சந்திரன், வயலின் -திருமதி வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம்- க.நந்தகுமார், கெஞ்சிரா-பா.ஞானவேல் ஆகியோர் பங்குபற்றி இசையரங்கினை நடத்தவுள்ளனர். (இ-5)

# காணி பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் செயலணியின் முதலாவது கூட்டம்

யாழ்.முஸ்லிம்களுக்கான காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உருவாக்கப்பட்ட செயலணி முதலாவது கூட்டத்தை நேற்றுக் காலை ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணம் மன்பஉலும் பாடசாலை மண்டபத்தில் காலை ஆரம்பமாகிய இக் கூட்டம் மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அச்செயலணியில் அங்கத்துவம் வகிக்கும் 10 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதேவேளை இச்செயலணி கடந்த ஞாயிறு 21.02. 2016 பிரதி அமைச்சர் அமீர் அலி முன்னிலையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் உருவாக்கப்பட்டது.

வடமாகாண முஸ்லிம்களின் காணி விவகாரங்கள் தொடர்பான பிரச்சினைகளை தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கில் கைத்தொழில் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோரின் இணை தலைமையில் பாராளுமன்றத்தில் கமிட்டி அறை 2 இல் நடைபெற்ற கூட்டத்தில் ஆலோசனைகள் செய்யப்பட்டிருந்ததன் அடிப்படையில் மேற்படி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.(இ)

## துண்டுப்பிரசுரம்

சாவகச்சேரி மறவன்புலோ பகுதியில் பெண்களை இழிவுபடுத்தும் வகையில் பெண்களின் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் புலனாய்வுத்துறை தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் துண்டுப்பிரசுரம் கடந்த 2 ஆம் திகதி ஒட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துண்டுப்பிரசுரத்தில் 7 பெண்களின் பெயர் மற்றும் அவர்களின் தொலைபேசி இலக்கம் என்பன கணனியில் தட்டச்சு செய்யப்பட்டு அந்த தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்பு கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பில்நெல்லியடிபொலிஸாரினால் கவனிக்கப்பட்ட பின்னர் நெல்லியடிபொலிஸ் புலனாய்வுத்துறை இது தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (இ-5-60)

## பொதுக்கூட்டம்

பருத்தித்துறை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 6 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். உயர்தொழில் நுட்பவியல் நிறுவன முன்னாள் பணிப்பாளர் கதிரமலை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி அஜித்தா பிரதீபன் , பிரதேச செயலக கணக்காளர் செ.கிருபாகரன், நிர்வாக உத்தியோகத்தர் ச.சீவரத்தினம், நிதி உதவியாளர் வே. சிவகுமாரன் மற்றும் யாழ்.மாவட்ட ப.சே.ஓ.ந.நிதியத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-60)

**வேலையாள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல அச்சக மொன்றிற்கு
* கோட் மெசின் மைண்டர்
* மெசின் பழகுநர்

உடன் தேவை (3764)

**தொடர்பு: 0772209474**

**வான் வாடகைக்கு**

11 பேர் பிரயாணம் செய்யக் கூடிய High Roof வான் வாடகைக்கு உண்டு. நாள் அடிப்படையிலும் கிலோ மீற்றர் அடிப்படையி லும் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 077 322 3084, 021 223 1414 (3741)


# கடந்த10 வருடங்களில் மஞ்சள் கடவை விபத்துக்களில் 917 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த 10 வருடங்களில் மஞ்சள் கடவையில் இடம் பெற்ற விபத்துக்களில் 917 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

2006ஆம்ஆண்டு தொடக்கம்2015ஆண்டு வரை இடம்பெற்ற விபத்துக்களிலே அதிகளவானோர் உயிரிழந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்த காலப்ப குதியில் இடம்பெற்ற விபத்துக்களில் 2ஆயிரத்து 442 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இவ்வாறான விபத்துக்களை தடுக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


**புலமை அருவி**

புலமை அருவி ஆசிரியர் திரு.யோக.தயாளன் (BA,PGDE Dip in Teach ) அவர்களின் தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை முற்றிலும் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள் - 11

பரீட்சை நேரம் - ஞாயிற்றுக்கிழமை - பி.ப 2.00 - 4.00 / பி.ப 4.00 - 6.00 } விரும்பிய ஒரு நேரத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்

பரீட்சை நடைபெறும் திகதிகள்- 06.03.2016, 20.03.2016, 03.04.2016, 17.04.2016, 01.05.2016, 15.05.2016, 05.06.2016, 19.06.2016, 03.07.2016, 17.07.2016, 07.08.2016

வினாத்தாள் திருத்தி வழங்கல் விளக்கம் அளித்தல் பிரதி ஞாயிறு தோறும் பி.ப 2.00 - 4.00 மணி வரை

ஆசிரியர் திரு. யோக.தயாளன் அவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகள் செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெறுகின்றது.


மேலதிக விபரங்களுக்கு 021 223 1220 0779122918

மதுரம் இன்ஸ்ரிரியூட் டச்சு வீதி, கோப்பாய் தெற்கு

(C-3896)



**மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்**



**உயர் திரு. E.S.P.நாகரத்தினம் அவர்கள்**

"சமூக மாமணி", "சைவப் புரவலர்","ஈகையார் திலகம்"

காலத்தால் அழியாத கல்விக்கு வித்திட்ட
காரை தாய் பெற்றெடுத்த- கலை
மகனாம் எங்கள் கல்விக் காருணியன்
காலமெல்லாம் போற்றிடுவோம் அவர் பணி
மணிவிழா காணும் இந்நாளில் - மகத்தான
பணி செய்யும் மைந்தனே நீர் வாழ்க!
நடுநிலை வகிக்கும் நாயகனாய்- எங்கள்
நாகரத்தினம் நற்பண்பும் கொண்டவர்
தொழில் அதிபர் மட்டுமல்ல- தொழில்
வழி காட்டியாகவும் விளங்குபவர்- எங்கள்
கதாநாயகன் கல்விக் காருணியன்
வளர்க அவர் பணி இந் நாட்டினிலே
மக்கள் மனங் குளிர மாண்புமிகு
பண்பாளன் அமுது அளித்து தாக சாந்தி தீர்த்து
தன் பணி மேற்கொள்ளும்- காரை
தாய் பெற்ற களங்கரை விளக்காம் எங்கள் மைந்தன்
உதவி கேட்டு செல்பவரை இல்லை என்று கூறாது
அன்பான உள்ளத்துடன் அரவணைத்து
வேண்டும் வரம் கொடுத்திடும்- எங்கள்
கொடையாளன் மணிவிழா நாயகன்
பார் போற்றும் நாயகனாய்- பாரினிலே
பாரியாருடன் பல்லாண்டு காலம் வாழ்ந்திட
எங்கள் கற்பக விநாயகர் அருள் புரிந்திட
மணிவிழா நாயகன் கல்விக் காருணியனை வாழ்த்துகிறோம்.

காரைநகர் கல்விக் கோட்டம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்:-
திரு.A.குமரேசமூர்த்தி (DEO)
கல்விக் கோட்டச் செயலாளர்:- திரு.K.சுந்தரலிங்கம் (அதிபர்)
யா/ வியாவில் சைவ வித்தியாலயம் காரைநகர்
கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள். (3776)



யாழ்.குடாநாட்டில் கேபிள் ரிவியை அறிமுகப்படுத்திய

**Sats-tech Engineer's நிறுவனத்தின்**

25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மக்களின் தொலைக்காட்சி ரசனைக்காக மிக குறைந்த செலவிலான அதி நவீன தொழில்நுட்ப முறையிலான கேபிள் அற்ற (வயர்லெஸ்) தொலைக்காட்சி சேவையூடாக


**Tv Lanka Digital Cable Less Set up Box**

முறையில்,

கேபிள் இணைப்பு, டிஸ் அன்ரனா எதுவுமில்லாமல் சாதாரண அன்ரனா மூலமான சேவை,



- உபகரணங்கள் Rs.2500/- மட்டும்
- மாதவாடகை Rs.400/- மட்டும்
- தடைகள் அற்ற சேவை
- அதிநவீன தொழில்நுட்பம்
- வாழ்நாள் உத்தரவாதம் (உபகரணங்களுக்கு)
- முற்கூட்டிய கொடுப்பனவுகளுக்கு 20% தள்ளுபடி



விரைவில் வடமராட்சி, கிளிநொச்சி, முல்லைத்தீவு,மன்னார் பிரதேசங்களுக்கும் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.

**விற்பனை முகவர்கள் தேவை**

SATS-TECH Engineer's Pvt Ltd
NO. 298, K.K.S. ROAD, JAFFNA.
Phone:- 021-222 8812
Hot Line:-077 771 0785



(3744)


# இராசி பலன்

06.03.2016
(மாசி 23, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
துவாதசி பிற்பகல் 1.21 மணிவரை
திருவோணம் பின்னிரவு 2.03 மணிவரை
சுபநேரம் 9.25-10.55 மணிவரை
இராகுகாலம் 4.55-6.25 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி புத கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை, புனர்பூசம் | | |
| சுக் சந் | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், யோகமான நாள்.

**இடபம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் அகலும்.

**மிதுனம்:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எந்தக் காரியத்திலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உறவினர்களின் சந்திப்பால் சுப செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** தொட்ட காரியங்கள் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், தேகநலனில் அதிக அக் கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், சிந்தனை மிகுதியான நாள்.

**தனுசு:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, எதிர்பாராத தன வரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கையாள்வீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**துலாம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், நீண்ட காலமாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள்.

# முக்கிய சிறைக் கைதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

## சிறைச்சாலைகள் ஆணையாளர்

முக்கிய சிறைக்கைதிகளின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க தாம் எதிர்பார்த்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

தெமட்டகொட பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சமிந்தவின் உடல் நிலை தேறி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் தெமட்டகொட சமிந்தவிற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, எதிர்வரும் சில தினங்களில் குறித்த கைதியை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்க தாம் எதிர்பார்த்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

இதேவேளை, சிறைக் கைதிகளின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிறைச்சாலை பேருந்தில் கைதிகள் அழைத்து சென்று கொண்டிருந்த தருணத்தில் தெமட்டகொட பகுதியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகமொன்று கடந்த 2 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்தது.

பேருந்தில் பயணித்த பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபராக தெமட்டகொட சமிந்த, இந்த துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மஹா சிவராத்திரியை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நிகழ்வுகள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் சிவராத்திரி நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளை திங்கட்கிழமை நடைபெறும் சிவராத்திரி விரதத்தை சிறப்பிக்கும் முகமாக அன்றைய தினம் இரவு நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சிவாலயங்களில் அறநெறி பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளை நடத்துவதற்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

பிரதானமாக கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீபொன்னம்பல வாணேஸ்வரர் ஆலய முன்றலில் 4 ஜாமங்களுக்கும் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதல் ஜாமத்தில் ஜிந்துப்பட்டி ஸ்ரீ சிவசுப்ரமணியர் ஆலய, ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய, ஸ்ரீபத்மாவதி ஆலய, ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலைகளின் மாணவர்களது நிகழ்ச்சிகளும் திருமதி பவானி குகப்பிரியாவின் மாணவிகளின் நடன நிகழ்வும், அருணந்தி ஆருரனின் இசைக்கச்சேரியும், சங்கீத வித்துவான் என்.எஸ்.வாகீஸனின் வீணைக்கச்சேரியும் அ.விக்னேஸ்வரனின் இசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

அறநெறிப் பாடசாலை மாணவர்கள் இந்துப்பண்டிகைகள், விரதங்கள், விழாக்கள், வழிபாடுகள், கிரியைகள் தொடர்பான விழுமியங்களை அறிந்து கொள்ள செய்யவும் அவர்களது கலைத்திறன்களை வெளிப்படுத்தும் களமாகவும் ஆலயங்கள் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இத்திட்டத்தை முன்னெடுக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மஹா சிவராத்திரி நன்னாளில் மதுபான சாலைகளை மூடவும்

## இந்துமத குருமார்கள் கோரிக்கை

நாளைய தினம் இடம்பெறவுள்ள சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மதுபான சாலைகள் மற்றும் மாமிச கடைகளை பூட்டி ஒத்துழைக்குமாறு சைவ அமைப்புக்களும் குருமார்களும் கோரியுள்ளனர். சைவ சமய விரதங்களில் சிவனைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் மஹா சிவராத்திரி விரதம் தலையாயது. இந்த விரதம் விளையாட்டாகவோ அன்றி வேடிக்கையாகவோ அனுஷ்டிக்கப்படக் கூடாது. இந்த விரதம் மஹா சிவராத்திரி தினத்தின் முன் தினமாகிய திரயோதசி தினத்தன்று ஒரு வேளை பகல் உணவுண்டு சிவராத்திரி தினத்தன்று இரவு நித்திரை செய்யாமல் எல்லாம் வல்ல பரம் பொருளான சிவனைப் பக்தியுடன் நினைந்து உள்ளன்புடன் வழிபட வேண்டும்.

கண் விழிக்க வேண்டும் எனும் காரணத்துக்காக சினிமாப் படம் பார்த்தோ அல்லது வேறு கேளிக்கை நிகழ்வுகளில் பங்குபற்றியோ இந்த விரதத்தை அனுஷ்டித்தல் மகாதவறு. சைவமக்களின் புனிதமான இந் நன்னாளில் மதுபானம் அருந்துதல், மாமிசம் உண்ணல், தீய சொற்கள் பேசுதல் என்பவற்றை அறவே தவிர்க்க வேண்டும். இவ் வருட மஹா சிவராத்திரி விரதம் நாளை 07 ஆம் திகதி திங்கட்கிழமை உலக இந்துக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மகிமை வாய்ந்த இவ் விரத தினத்தில் அரசாங்க விடுமுறை அறிவிக்கப்பட்ட போதும் அரசாங்க வர்த்தக விடுமுறை அறிவிக்கப்படவில்லை. இதன் காரணமாக இத் தினத்தில் யாழ். குடாநாட்டில் மதுபானச் சாலைகள், மாமிசக் கடைகள் திறந்திருப்பது வழமை. இந்தச் செயற்பாடு தொடர்பில் சைவசமய அபிமானிகள் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளனர். சைவசமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானுக்குரிய முக்கியமான விரத தினத்தில் மதுபானச் சாலைகள், மாமிசக் கடைகள் யாவும் மூடப்பட்டுப் புனிதம் பேணப்பட வேண்டுமென்பது இந்து சமய குருமார்கள், இந்துசமய அமைப்புக்கள், இந்துசமய அபிமானிகள் ஆகியோரின் கருத்துக்களாகவுள்ளன. இது தொடர்பில் இந்து சமயக் குருமார்கள், இந்துசமயத் தலைவர்கள் ஆகியோர் தெரிவிக்கையில்

நா.சர்வேஸ்வரக் குருக்கள் - சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானப் பிரதம குரு

எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் தெய்வங்கள் அனைத்திலும் மேலான சிறப்பு வாய்ந்தவரா்வார். சிவனுடைய விரதங்களுக்கு எல்லாம் தலையாயதும், மிகச் சிறந்ததும் மஹா சிவராத்திரி விரதமாகும். இந்த விரதம் அன்னத்து விரதங்களிலும் மிகச் சிரத்தையாகவும், கண் விழித்து மனதை ஒரு நிலைப்படுத்தி வேறு கருமங்கள் தொடர்பில் சிந்திக்காது விரததினத்தில் இரவும், பகலும் இறைவன் கருணையையே சிந்திக்க வேண்டும். இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர்கள் மேன்மை அடைவார்கள். விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களும் இந்த விரத அனுஷ்டிப்பின் மூலம் பலன் பெறுவார்கள்.

ஆகவே இந்த விரத நன்னாளில் குறிப்பாக மதுபானச் சாலைகள், மாமிச விற்பனை நிலையங்கள் என்பன மூடப்பட வேண்டும். விரதம் அனுஷ்டிக்கும் அடியவர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் நாமனைவரும் செயற்பட வேண்டியது அவசியம். சிவராத்திரி விரதத்தைத் திவ்யமான அருள் விரதமாகக் கடைப்பிடிப்பதற்கும், எமது மண்ணிலும், மனதிலும் சிவப்பொலிவு ஏற்படவும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இது தொடர்பில் இந்து சமய கலாசார அமைச்சும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் - மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலயப் பிரதம குரு

மஹா சிவராத்திரி சைவ மக்களின் புனிதம் வாய்ந்த விரதமாகக் காணப்படுகின்றது. இந்தத் தினத்தில் சிவனுடைய காடாட்சத்தைப் பெறுவதற்காக உலகம் முழுவதிலுமுள்ள இந்துக்கள் பக்திபூர்வமாக விரதம் அனுஷ்டிப்பர். ஈழத்திலுள்ள சைவ ஆலயங்களில் குறிப்பாகச் சிவன், அம்மன் ஆலயங்களில் மஹா சிவராத்திரி வழிபாடுகள் சிறப்பாக நிகழ்த்தப்படும். சைவ ஆசார சீலர்களாக இந்தப் புனிதமான விரத்தை அனுஷ்டிக்க வேண்டிய தார்மீக கடமை ஒவ்வொரு சைவனுக்குமிருக்கிறது.

ஆகவே சிவனுக்குகந்த மஹா சிவராத்திரி நன்னாளில் நாமனைவரும் எமது முன்னோர்கள் காட்டிய வழியில் மதுபானம், புலால் உண்ணுதல், மாமிசம் உண்ணுதல் ஆகிய பா்தகங்களைத் தவிர்த்து அன்றைய தினம் முழுமையான சிவ சிந்தனையுடன் கண் விழித்து விரதம் அனுஷ்டித்து அவனருளாலே அவன் தாள் வணங்கி எமது சமயத்தின் தனித்துவத்தை நிலைநாட்ட ஒன்றுபடுவோம். எனவே, இந்தத் தினத்தில் எமது மண்ணிலுள்ள மதுபானக் கடைகள், மாமிசக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டு எமது சைவத்தின் கொள்கைகளுக்கு ஆதரவு தர வேண்டுமென சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்களை அன்பாகக் கேட்டுக் கொள்வதுடன், இந்துசமய கலாசார அமைச்சு மற்றும் அதிகாரிகளும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா சுவாமிகள் - யாழ்.சின்மயா மிஷன் அமைப்பின் தலைவர்

சிவராத்திரி விரதம் சிவனுக்குரிய இராத்திரியாக சைவசமயத்தவர்களால் பக்திபூர்வமாக ஒவ்வொரு வருடமும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த விரத காலத்தில் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்று கருவிகளாலும் பரம்பொருளான சிவபெருமானுடைய நாமங்களைச் சொல்லியும், அவனுடைய சிறப்புக்களைப் பாடியும், கேட்டும் எங்களுடைய செயல்களும் அவனுக்கு அர்ப்பணிப்புள்ளதாக பூஜைகள், பஜனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள், யாகங்கள், ஹோமங்கள் என அனைத்து வகையாலும் சிவனையே மையமாக வைத்து வழிபடப்பட வேண்டிய முக்கியமானதொரு நன்னாளாகும்.

அப்படிப்பட்ட மஹா சிவராத்திரி நன்னாளில் திருமூலரால் சிவபூமி எனப் போற்றி வர்ணிக்கப்பட்ட எங்களுடைய நாட்டிலே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வண்ணம் சிவ எழுச்சி ஏற்பட வேண்டும். சைவசமயத்தவர்கள் அனைவரும் ஆசார சீலர்களாக முறைப்படி கண்விழித்து விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அதற்கு இடையூறான செயற்பாடுகளாகக் காணப்படும் மதுபானக் கடைகள் மூடப்பட வேண்டும்.

மாமிசம் உண்ணும் செயற்பாட்டை முற்றாக அன்றைய தினம் தவிக்கும் வகையில் மாமிச விற்பனை நிலையங்கள் அதிலும் குறிப்பாக இறைச்சிக் கடைகள் மூடப்பட வேண்டும்.

சைவசமயத்துக்காக என்னாலான பணிகளை ஆற்றி வரும் ஒரு துறவியாகவும், சின்மயா மிஷன் அமைப்பின் சார்பாகவும் அடியேன் இந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். இது தொடர்பில் அரச உயர் மட்டத்தினரும், அதிகாரிகளும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். சைவத் தமிழ் கலாசாரத்தின் மையப் புள்ளியாக விளங்கும் யாழ். மண்ணிலிருந்து இதனை ஆரம்பிக்க வேண்டும். சைவத்தின் காவலரான நாவலர் பெருமான், ஈழத்துச் சித்தர்களான யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் ஆகியோர் அவதரித்த புண்ணிய பூமியிலே சைவப் பெருமக்களுக்குரிய முக்கியமானதொரு திருநாளில் மதுபானச் சாலைகள் திறத்தல் மற்றும் மாமிச விற்பனை இடம்பெறுவது என்பன ஏற்றுக்கொள்ள முடியாது. அனைவரும் அன்றைய தினம் எல்லாம் வல்ல பரம் பொருளான சிவபெருமானை சிந்தையிற் கொண்டு சிவ பேறை அடைவதற்கு முயல்வோம்.

உன்னதமான வழிபாட்டு நன்னாள் மஹா சிவராத்திரி விரதமாகும். உலகமெங்கும் வாழ்கின்ற சைவமக்கள் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கின்ற இந்த நன்னாள் தெய்வீகத் திருவருள் நிறைந்த சிறப்புடையதாகும். குறிப்பாக எங்கள் குடாநாட்டிலும், ஏனைய பாகங்களிலும் இந்த நாளில் மதுபானச் சாலைகள், மாமிசக் கடைகள் என்பன திறக்கப்படக் கூடாது என்பது எனது தாழ்மையான கருத்து.

அனைத்து மக்களும் அன்றைய தினம் பக்தியோடு தீய எண்ணங்களை விடுத்து சிவ சிந்தனையை மனதிற் கொண்டு செயற்பட வேண்டும்.

சைவ மக்களின் முக்கிய சிவ விரதமாகக் கருதப்படும் மஹா சிவராத்திரி நன்னாளில் மதுபானச் சாலைகள், மாமிசக் கடைகள் என்பன திறக்கப்படாதிருக்க வடக்கு மாகாண சபையும், மத்திய அரசாங்கமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சைவப் பெருமக்கள் சார்பாக வேண்டிக் கொள்கின்றேன் என்றார். (இ-4)

# இனவாத சக்திகளின் நாடகங்களுக்கு இலங்கை மக்கள் ஏமாறமாட்டார்கள்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் காட்டம்


(கொழும்பு)

**இனவாதச் சக்தி ஒருபுறம் அரசு மீது வசை பாடிக் கொண்டு மறுபுறம், மகிந்த பரம்பரையின் துரோகச் செயல்களை மூடி மறைத்து அவருக்காகவும் குடும்பத்துக்காகவும் ஊர் ஊராய்ப் போய் ஒப்பாரி வைக்கின்றனர். இந்த பம்மாத்து வேலைகளுக்கும், திரைமறைவு நாடகங்களுக்கும் நாட்டு மக்கள் ஏமாறப் போவதில்லை. நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அச்சுறுத்தல் ஏற்பட அரசு இடமளிக்காது எனவும் இராணுவத்தை இலக்குவைக்கும் எச்செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் எண்ணம் கிடையாது எனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன காட்டமாக தெரிவித்துள்ளார்.**

அதேவேளை தமிழினத்தின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதும் வடக்கில் ஜனநாயக செயற்பாடுகளை மேலோங்கச் செய்வதையும் பிரிவினைவாதமாக நோக்கக்கூடாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தென்னிலங்கை இனவாத அரசியல் சக்திகள் எப்போதும் வடக்கையும் தமிழ் பேசும் மக்களையும் மாற்றுக் கண்கொண்டே பார்த்து வருகின்றன. இந்த இனவாதச் சக்திகளுக்கு துணைபோகும் அரசியல் இன்று இனவாதத்தை தமக்கான தாரக மந்திரமாகவே கொண்டுளளன. 30 வருடத்துக்கும் மேலான கசப்பான சம்பவங்களால் நாடு எதிர்கொண்ட பேரழிவு குறித்து இந்த இனவாதச் சக்திகள் சிந்திப்பதாகவே தெரியவில்லை.

முழுநாடும் அழிந்து நாசமாகிப் போனாலும் பரவாயில்லை. சிறுபான்மை தமிழ், முஸ்லிம்கள் இந்த நாட்டில் தலையெடுக்க இடமளிக்காத வகையிலான சிந்தனைப் போக்கையே இந்த இனவாதச் சக்திகள் கொண்டிருக்கின்றன. கடந்த வருடம் ஜனவரி 8இற்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இந்த இனவாதிகளுக்கும், ஒட்டுமொத்த நாட்டு மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும்



கோபத்தை ஏற்படுத்தி இருப்பதே இந்த தவறான சிந்தனைப் போக்குக்கான காரணியாகும்.

இந்தச் செயற்பாடுகளில் காணப்படும் மற்றொரு புதுமை என்னவென்றால் இதுவரை காலமும் சிவப்புச் சட்டைக்குள் தாங்கள் இடதுசாரிகள், பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகள் என்று வாய் கிழியக் கத்திய சிலரின் போலித்தனங்கள் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளன. மகிந்தவின் காலத்தில் மொழித்துறைக்கான அமைச்சராக இருந்த வாசுதேவ ஐயா, இதுவரை காலமும் நுணிநாக்கில் தேனுடன் செயற்பட்டவர். ஆனால் அவரது அண்மைக் காலத்து செயற்பாடுகள் அவர் யார் என்பதை வெளிக்காட்டியுள்ளன.

அண்மைக்காலமாக மகிந்த ஐயாவின் கூட்டாளிகள் சிலர் உள்ளகப் பொறிமுறை மூலம் நாட்டின் இராணுவத்தையே இலக்கு வைத்து அரசு செயற்படுவதாகவும் சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலில் இதுவும் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் நாட்டு மக்கள் மத்தியில் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

மகிந்த தரப்பாரின் எந்தப் பேச்சும், சபையேறாத நிலையிலும் கூட அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற எண்ணப்போக்கில் நல்லாட்சி அரசுக்கு எதிரான சாக்கடைத்தன அரசியலை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர். இந்த காடைத்தன அரசியல் நடவடிக்கைகளை நாட்டு மக்கள் நம்பத்தயாராக இல்லை.

2015 ஜனவரிக்கு முன்னர் எமது மக்களிடம் காணப்பட்ட மனநிலை வேறு. அதன் பின்னர் ஏற்பட்டிருக்கும் மனமாற்றம் வேறு. இன்னொரு தடவை ஓநாயின் வாயில் சிக்கிய ஆடுகளாக எமது மக்கள் மாறப்போவதில்லை.

இந்த இனவாதச் சக்திகளின் பச்சைப்பொய் வார்த்தைகளுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் காட்டமான சாட்டை அடியை கொடுத்திருக்கிறார்.

இராணுவம் இழைத்ததாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றாலும் அது எந்தச் சந்தர்ப்பத்திலும் இராணுவத்தை இலக்கு வைத்த பொறிமுறையாக அமைய மாட்டாது என அவர் சூடாகவே பதிலடி கொடுத்திருக்கிறார்.

தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரசு மிகவும் உன்னிப்பாகவும் பொறுப்புடனுமே இருப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது எனவும் அவர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

மறுபுறத்தில் தமிழ் மக்களது உரிமைகளை பெற்றுக் கொடுப்பதும், ஜனநாயகத்தை வடக்கில் உறுதிப்படுத்துவதும் இனவாதமாக பார்க்கக்கூடாது. அது ஒருபோதும் பிரிவினை வாதமல்ல. சிறுபான்மை சமூகங்களை தொடர்ந்து எம்மால் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. அவரவர் உரிமைகளை பெற்றுக்கொடுத்தே ஆக வேண்டும்.

நாம் சர்வாதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டோம். இப்போது ஜனநாயக ஆட்சி மலர்ந்துள்ளது. நாட்டின் அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து நல்லிணக்க ஆட்சியை ஏற்படுத்தி சகல சமூகங்களையும் அரவணைத்துச் செல்கின்றோம். இதனைச் சீர்குலைக்க எந்தச் சக்திக்கும் இடமளிக்கப்படமாட்டாது எனவும் அவர் சூளுரைத்திருப்பதன் மூலம் இனவாதச் சக்திகளின் மூக்குடைபட்டிருப்பதையே காட்டுகின்றது.

இனவாதச் சக்தி ஒருபுறம் அரசு மீது வசைபாடிக்கொண்டு "சர்வதேச கூட்டு" என்ற மாய வலையை வீசி மக்களை தம்பக்கம் இழுத்தெடுக்கும் முனைப்பில் தீவிரம் காட்டி வருகின்றன. மறுபுறம், மகிந்த பரம்பரையின் துரோகச் செயல்களை மூடி மறைத்து அவருக்காகவும் குடும்பத்துக்காகவும் ஊர் ஊராய்ப் போய் ஒப்பாரி வைக்கின்றனர். இந்த பம்மாத்து வேலைகளுக்கும், திரைமறைவு நாடகங்களுக்கும் நாட்டு மக்கள் ஏமாறப் போவதில்லை.

அந்தக் காலத்தில் நமது கிராமப்புறங்களில் இடம்பெற்ற தெருக்கூத்து நாடகங்களை இன்று நாடெங்கும் ஊர் ஊராக மகிந்த நாடகக் கம்பனி அரங்கேற்றி வருகின்றது.

மகிந்தருக்கு ஒன்றை மட்டுமே சொல்ல முடியும். அதுதான் "காலத்தின் விதி" என்பது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## வாரம் ஒரு தகவல்

### பேசுவது தவறா?

"டாக்டர்...உங்களிடம் ஒரு முக்கியமான சந்தேகம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று வந்திருக்கிறேன்"

"சொல்லுங்க?"

"சிலபேர் தனியாகப் பேசுகிறார்களே...

அவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"தனக்குத் தானே பேசிக் கொள்ளும் பழக்கம் ஒருவிதமான மனநோய்"

"அப்படியா?"

"ஆமாம். மனதிற்குள் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் விருப்பு, வெறுப்பு, கோபம், எரிச்சல் அல்லது வேறு ஏதாவது பிரச்சினைகள் அளவுக்கு மீறிப் போய்விட்டால் அது மனவருத்த நோயில் கொண்டுபோய் விட்டுவிடும். அதற்குப் பெயர் (Depressive Disorder)

"இப்படி ஒரு நிலைமை உண்டானதற்குப் பின் அவர்கள் தனியாக இருந்து பேச ஆரம்பித்து விடுகிறார்களா?"

"ஆமாம் அதுமாதிரி உள்ள சமயங்களில் மனத்திலுள்ள பிரச்சினைகளுக்கு ஒரு வடிகால் தேவைப்படுகிறது. என்ன செய்யலாம் என்று மனம் யோசிக்கிறது. அப்பொழுது ஏற்படக்கூடிய ஒரு வகையான வெளிப்பாடுதான் தனக்குத்தானே பேசிக்கொள்வது"

"பாருங்கள் டாக்டர் இப்பொழுது இதைப்பற்றி இவ்வளவு தெளிவாக சொல்லுகிறீர்கள். இது என் மனைவிக்குப் புரியவில்லையே"

"ஏன்"

"எனக்கு அந்த வியாதி இருப்பதாகச் சொல்லி இப்பொழுது உங்களிடம் அனுப்பி வைத்திருக்கிறாள்"

"நீங்கள் எதிரில் யாரும் இல்லாத போது தனியாகப் பேச ஆரம்பிப்பீர்களா?"

"அப்படிச் செய்யவே மாட்டேன்...

எதிரில் யாரையாவது பார்த்தால் தான் பேச ஆரம்பிப்பேன். குறைந்தபட்சம் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியாவது எனக்கு வேண்டும்"

தென்கச்சிக் கோ. சுவாமிநாதன்

## பொலிஸாருக்கான எரிபொருள் மானியம் 15 வீதத்தால் குறைப்பு

பொலிஸ் திணைக்களத்தில் உள்ள அனைத்து விசேட பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியமானது இந்த ஆண்டு 15 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் நிர்வாகத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன ஊடாக இந்தத் தீர்மானமானது அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் சுட்டிக்காட்டின.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அமையவே இந்த எரிபொருள் மானியமானது 15 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களத்தில் உள்ள சுமார் 43 பிரிவுகளில் கடமையாற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர்களின் கவனத்திற்கு இந்த எரிபொருள் மானிய குறைப்பு பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. (இ)

## மகனின் கழுத்தில் சூடு வைத்த தந்தைக்கு விளக்க மறியல்

தலவாக்கலை பிரதேசத்தில் 9 வயது மகனின் கழுத்தில் சூடு வைத்த தந்தையொருவரை, எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஐ.ஆர்.டி.இந்திக்க உத்தரவிட்டுள்ளார்.

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா தோட்டத்தில் தந்தையொருவர் மதுபோதையில் தனது மகனின் கழுத்தில் சூடு வைத்துள்ளார்.

இது தொடர்பில் தலவாக்கலை பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, பொலிஸார் குறித்த நபரை கடந்த வியாழக்கிழமை கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரை நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியபோதே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளான சிறுவன் தற்போது நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## நாமல் எனது அப்பாவை மச்சான் என அழைத்தார்; குணவர்த்தனவின் மகன்

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது தந்தையை மச்சான் என்று அழைத்ததாக காலம் சென்ற முன்னாள் அமைச்சர் எம்.கே.ஏ.டி எஸ். குணவர்த்தனவின் புதல்வர் நளின் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கண்டி தலதாமாளிகைக்கு நேற்று முன்தினம் காலை சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட நளின் குணவர்த்தன, அஸ்கிரிய மற்றும் மல்வத்து மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே இதனைக் கூறியுள்ளார்.

நான், நாமல் ராஜபக்ஷவின் பின்னால் செல்லவில்லை. அவரது நடத்தைகள் எங்களுக்கு பிடிக்கவில்லை. அந்த நடத்தைகள் தான் நாட்டின் இளைஞர்களின் வாழ்க்கையை அழித்தது.நாமல் ராஜபக்ஷ என் எதிரிலேயே எனது தந்தையை மச்சான் என்று மூன்று முறை கூறியுள்ளார்.

அப்போது என் தந்தை, உங்கள் அப்பாவும் என்னை மச்சான் என்கிறார். நீங்களும் மச்சான் என அழைக்கின்றீர்கள் என்று கூறியதாக நளின் குணவர்த்தன தெரிவித்தார். (இ)

# மகிந்தவின் காலத்தில் இப்படியும் ஒரு மோசடி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் பணியாற்றிய விமானப் பணிப் பெண் ஒருவருக்கு, விமானத்தில் பயணிப்பதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவையில் பணியாற்றிய விமானப் பணிப் பெண் ஒருவர் ஜனாதிபதி காரியாலத்தில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

இந்த விமானப் பணிப்பெண்ணுக்கு விமானப் பயணங்களின் போது அதற்காக வழங்கப்படும் 15 இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் இந்தக் கொடுப்பனவை வழங்கியுள்ளதாக பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

விமானப் பயணங்களை மேற்கொள்ளாத காரணத்தினால் இந்த விமானப் பணிப் பெண்ணுக்கு குறித்த தொகை பணம் வழங்கப்பட வேண்டிய அவசியமில்லை.

எனினும், மூன்றாண்டு காலமாக இவ்வாறு அரசாங்கப் பணம் குறித்த விமானப் பணிப்பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் விரதுங்கவின் எழுத்துமூல உத்தரவிற்கு அமைய கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விமானப் பணிப்பெண்ணுக்கு நூற்றுக்கு நூறு வீத கொடுப்பனவு வழங்காது 50 வீத கொடுப்பனவு வழங்க அப்போது நிறுவனத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றிய மனோஜ் குணவர்தன நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதி முக்கிய பிரபு குடும்பமொன்றின் உறுப்பினர் ஒருவரது வற்புறுத்தல் காரணமாக இந்த விமானப் பணிப் பெண் ஜனாதிபதி செயலகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இந்த நபருடன் குறித்த விமானப் பணிப் பெண் மிக நெருங்கிய உறவினைப் பேணியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்னர், இந்த விமானப் பணிப் பெண் ஜனாதிபதி காரியாலயத்திலிருந்து நீக்கப்பட்டு, விமானப் பணிப் பெண் மேற்பார்வையாளராக கடமையாற்றி வருகின்றார் என தெரிவிக்கப்படுகிறது. (இ)

# சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபட்ட இலங்கையருக்கு சிறைத்தண்டனை

சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபட்ட இலங்கையருக்கு இந்தோனேசியாவில் ஐந்தரை ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

விஸ்வநாதன் தினேஸ்குமார் எனப்படும் குகன் என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரிச் சென்ற புகலிடக் கோரிக்கையாளர்களை அவுஸ்திரேலியா திருப்பி அனுப்பி வைத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

குறிப்பாக சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு பணம் வழங்கிய அவுஸ்திரேலிய அதிகாரிகள் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்களை மீள அழைத்துச் செல்லுமாறு கோரியிருந்தனர் என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. புகலிடக் கோரிக்கையாளர்களை சட்டவிரோதமாக படகு மூலம அழைத்துச் செல்ல முயற்சித்தமைக்காக இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், குகனுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்ய உள்ளதாக அவரது சட்டத்தரணி மேலும் தெரிவித்துள்ளார். (இ)




- 1447 - ஐந்தாம் நிக்கலாஸ் திருத்தந்தை ஆனார்.
- 1479 - கனாரி தீவுகளை போர்த்துக்கல் காஸ்டில் பேரரசுக்கு வழங்கியது.
- 1521 - பேர்டினண்ட் மகலன் குவாம் தீவை அடைந்தார்.
- 1788 - கைதிகளைக் குடியமர்த்தும் திட்டத்தில் முதற்படியாக முதலாவது தொகுதி கைதிகள் அடங்கிய கப்பல் நோர்போக் தீவை அடைந்தது.
- 1790 - மதுரை மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- 1836 - டெக்சாசில் அலாமோ நகரை மெக்சிக்கோ படைகள் தாக்கிக் கைப்பற்றினர்.
- 1869 - திமீத்ரி மென்டெலீவ் தனது முதலாவது ஆவர்த்தன அட்டவணையை சமர்ப்பித்தார்.
- 1940 - குளிர்காலப் போர்: பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்குமிடையில் தற்காலிகப் போர் ஓய்வு ஒப்பந்தம் ஏற்பட்டது.
- 1945 - ருமேனியாவில் கம்யூனிச அரசு பதவிக்கு வந்தது.
- 1946 - வியட்நாம் போர்: ஹோசிமின் பிரான்சுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி பிரான்ஸ் வியட்நாமை பிரெஞ்சு ஒன்றியம் மற்றும் இந்தோசீனக் கூட்டமைப்பினுள் தன்னாட்சி அதிகாரம் கொண்ட பகுதியாக ஏற்றுக்கொண்டது.
- 1953 - ஸ்டாலினின் மறைவையடுத்து சோவியத்தின் பிரதமராகவும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை செயலாளராகவும கியோர்கி மாலென்கோவ் பதவியேற்றார்.
- 1957 - ஐக்கிய இராச்சியக் குடியேற்ற நாடுகளான கோல்ட் கோஸ்ட் மற்றும் பிரித்தானிய டொகோலாந்து ஆகியன இணைந்து கானா குடியரசு என்ற பெயரில் விடுதலை பெற்றன.
- 1964 - காசியஸ் கிளே தனது பெயரை அதிகாரபூர்வமாக முகமது அலி என மாற்றிக் கொண்டார்.
- 1967 - திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது.
- 1975 - ஈரானும் ஈராக்கும் தமது எல்லை தொடர்பாக உடன்பாட்டிற்கு வந்தன.

**பிறப்புக்கள்**

- **1475 - மைக்கலாஞ்சலோ புவோனரோட்டி, இத்தாலிய மறுமலர்ச்சிக் கால ஓவியர (இ. 1564)**
- 1508 - ஹுமாயூன், இரண்டாவது மொகலாயப் பேரரசர் (இ. 1556)
- 1869 - சேர் ஜேம்ஸ் எமர்சன் டென்னெண்ட், எழுத்தாளர், பயணி, இலங்கைக்கான பிரித்தானிய காலனித்துவ செயலாளர் (பி. 1804)
- 1928 - காபிரியேல் மார்க்கெஸ், நோபல் பரிசு பெற்ற கொலம்பிய எழுத்தாளர்
- 1937 - வலன்டீனா தெரெஷ்கோவா, சோவியத் விணவெளி வீரர், விண்ணுக்குச் சென்ற முதற்பெண்
- 1948 - ஸ்டீஃபன் ஷ்வார்ட்ஸ், அமெரிக்காவைச் சேர்ந்த பாடலாசிரியர், இசையமைப்பாளர்
- 1954 - ம. சா. அறிவுடைநம்பி, தமிழ்ப் பேராசிரியர் (இ. 2014)

**இறப்புக்கள**

- 1888 - லூயீசா ஆல்கொட், அமெரிக்க நாவலாசிரியை (பி. 1832)
- 1973 - பெர்ல் பக், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)

# இலங்கையர்களுக்கான விசா நடைமுறையை தளர்த்த மலேசியா உறுதியாகவுள்ளது

இலங்கையர்களுக்கான விசா நடைமுறையை தளர்த்துவதற்கு மலேசிய அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இதற்காக சிவப்புப்பட்டி மற்றும் ஆவணக்கோரல்களில் குறைப்பு ஏற்படுத்தப்படவுள்ளதாக மலேசிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மலேசியாவை பொறுத்தவரை இலங்கை முக்கிய சந்தை என்பதால், இலங்கையர்கள் மலேசியா வருவதற்கு இலகுவான வழிமுறைகளை அறிமுகப்படுத்தவுள்ளதாக அந்த நாட்டின் சுற்றுலாத்துறை பணிப்பாளர் டல்ஜித் சிங் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் மலேசியாவுக்கு 52 ஆயிரம் இலங்கையர்கள் பயணம் செய்தனர்.

வாராந்தம் கொழும்புக்கும் மலேசியாவுக்கும் இடையில் 38 நேரடி விமானச்சேவைகள் இடம் பெறுகின்றன என்றும் டல்ஜித் சிங் தெரிவித்தார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 70 | 100 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 65 | 70 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 | 120 | 160 | 100 |
| தக்காளி | 40 | 25 | 30 | 40 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 60 | 40 | 50 | 80 | 80 | 50 |
| கரட் | 120 | 120 | 100-140 | 140 | 120 | 120 |
| பூசணி | 60 | 35 | 50 | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 30 | 50 | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 50 | 60 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 70 | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 100 | 80 | 80 | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 50 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 70 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 50 | 70 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 120 | 100 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 50 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 150 | 100 | 120 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 700 | 300 | 180 | 400 | 400 | 350 |
| போஞ்சி | 100 | 70 | 60 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 60 | — | 80 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 15 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 60 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-35 | 50 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 120 | 100 | 140 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 60 | 60 | 120 | 60 |
| முள்ளங்கி | 20 | 20 | 40 | 40 | 60 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 15 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | — | — | — | — | — |



## மைக்கலாஞ்சலோ

மைக்கலாஞ்சலோ டி லொடோவிக்கோ புவோனரோட்டி சிமோனி, 1475 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம திகதி பிறந்தார். இவர் ஒரு இத்தாலிய மறுமலர்ச்சிக் கால ஓவியரும், சிற்பியும், கவிஞரும், கட்டடக் கலைஞருமாவார்.

மைக்கலாஞ்சலோ எனப் பொதுவாக அறியப்படும் இவரது கலைசார்ந்த பல்துறைத் திறமையின் உயர்ந்த தரம் காரணமாகச் சமகாலத்தவரான லியொனார்டோ டாவின்சியுடன் சேர்த்து இவரும் மறுமலர்ச்சிக்காலத் தந்தையெனக் கணிக்கப்படுகின்றார்.

மைக்கலாஞ்சலோவின் நீண்டகால வாழ்க்கையில், அவர் படைத்தவைகள் அனைத்தும் அவரது அதிசயக்கத்தக்க திறமைக்குச் சான்றாக அமைகின்றன. கடிதத் தொடர்புகள், வரைபடங்கள், நினைவுக் குறிப்புகள என இவர் எழுதிக் குவித்தவை ஏராளம். இவைகளையும் சேர்த்தால், 16 ஆம் நூற்றாண்டில் அதிகமாக ஆவணப்படுத்தப்பட்ட கலைஞர் இவரே எனலாம்.

மைக்கலாஞ்சலோ தனது 23 ஆம் வயதில் செதுக்கிய புகழ் பெற்ற படைப்புக்களான, தாயும் சேயும் அல்லது பியேட்டா (Pieta), டேவிட் ஆகியவை 16 ஆம் நூற்றாண்டின் இருபதுகளின் பிற்பகுதியிலும், முப்பதுகளின் ஆரம்பத்திலும் உருவாக்கப்பட்டவை.

ஆறு அடி உயரம் உடைய இத்தாலிய மொழியில் "Pietà" என்று அழைக்கப்படும் பியேட்டா சிலை, உலகப் புகழ்பெற்ற கலைஞர் மைக்கலாஞ்சலோ என்பவரால் செதுக்கப்பட்டு, வத்திக்கான் நகரிலுள்ள பேதுரு பெருங்கோவிலின் உள்ளே வைக்கப்பட்டுள்ள கலையழகுமிக்க பளிங்குச் சிலை ஆகும். இச்சிலை சிலுவையில் தொங்கி இறந்த இயேசுவை அவர்தம் அன்னை மரியா தம் மடியில் கிடத்தியிருப்பதுபோல் செதுக்கப்பட்டுள்ளது.

இவர் வாழ்ந்த காலத்திலேயே இவரது இரண்டு வாழ்க்கை வரலாறுகள் வெளியிடப்பட்டது. இவற்றில் ஒன்றை எழுதிய ஜோர்ஜியோ வசாரி (Giorgio Vasari). இவரை, மறுமலர்ச்சிக் காலச் சாதனைகள் அனைத்துக்கும் சிகரம் போன்றவர் எனப் புகழ்ந்துள்ளார்.

# ஈராக்கில் அமெரிக்கா மேற்கொண்டளவிற்கு இலங்கையில் குற்றச்செயல்கள் இடம்பெறவில்லை

## கூறுகிறார் சந்திரிகா



தாம் வழங்கிய அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வருந்தினார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தாம் ஜனாதிபதியாக ஆட்சி வகித்த காலத்தில் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்ததாகவும் அதனை பிரபாகரன் நிராகத்திருந்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனை தெரிவித்தார்.

எவ்வாறெனினும், அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாமைக்காக பிரபாகரன் பின்னர் வருந்தியுள்ளார் என சந்திரிகா தெரிவித்துள்ளார்.

லண்டனில் பணியாற்றிய அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று வரும் நபர் ஒருவரிடம் 'பிரபாகரன், இவ்வாறு அரசியல் தீர்வுத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை' என வருந்தியுள்ளார் என்று சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

சிங்களத் தலைவர் ஒருவரினால் வழங்கப்படக்கூடிய அதிகபட்சமான விடயங்களை தாம் வழங்கியதாகவும், மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இனவாதத் தூண்டுதல்கள் அதிகரித்துள்ளதனால் தற்போதைய தலைமைகளுக்கு தமிழர்களுக்கு தாம் வழங்கிய அளவிற்கு நன்மைகளை வழங்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் அமெரிக்கா மேற்கொண்டளவிற்கு இலங்கையில் குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும், அமெரிக்கா மற்றும் ஈராக்கைக் காரணம் காட்டி இலங்கையில் இடம்பெற்றவற்றுக்கு நியாயம் கற்பிக்க முயற்சிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைப் பொறிமுறைமை முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அதிகார மோகம் கிடையாது எனவும் இந்த அரசாங்கத்தில் பதவி வகிக்க விரும்பவில்லை எனவும் மக்களுக்கு நன்மை செய்வதே தமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார். (இ)


SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | 21,300/- | LONDON | 94,300/- |
| MADURAI | 17,000/- | TORONTO | 155,100/- |
| TRICHI | 27,400/- | MALDIVES | 24,100/- |
| BOMBAY | 30,100/- | PARIS | 88,300/- |
| BENGALURE | 30,900/- | NEWYORK | 118,800/- |
| KOCHI | 25,600/- | MELBOURNE | 92,800/- |
| DELHI | 39,400/- | CANTON | 68,900/- |
| MALAYSIA | 33,400/- | PERTH | 93,900/- |
| SINGAPORE | 33,800/- | NARITA | 73,800/- |
| BANGKOK | 31,800/- | AUCKLAND | 129,300/- |
| ONEWAY: CHENNAI - 12,500/- | | SYDNEY | 104,800/- |

DUBAI -15,900/- , DOHA -19,800/-, SHARJAH -15,900/-

0% NET FARE *Condition Apply VISA CARD ACCEPTED.

குழுவாக டிக்கட் பெறுபவர்களுக்கு 5% கட்டணக்கழிவு

IATA ACCREDITED AGENT

எதிரபாராத மிகக்குறைந்த அதிக கட்டணக்கழிவுடன் டிக்கட்டுகளும், விசா ஏற்பாடு உட்பட அனைத்தும் ஒரே இடத்தில் சிறப்பாக செய்து கொள்ள இன்றே அழையுங்கள்:

0771083480,81,82,83 | 0766911080, 81, 82,83

0212229555 / 0212228555

(C-3911)

Call us on : 0094 112540540 / Mobile: 0094 771083480/81

e-mail : bookings@sbairfares.com

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280

No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322

NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL-021 2229555

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence


## விண்ணப்பங்கள் கோரல்

கடற்றொழில் நீரியல்வளங்கள் திணைக்களத்தின் கடற்றொழில்அலுவலர்-III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்தபோட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இதற்கெனவடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் அமைந்துள்ள கரையோர மாவட்டங் களில் 15 இலும் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித் தகைமை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் உயிரியல், நுண்ணுயிர், விலங்கியல், கடற்றொழில் விஞ்ஞானம், கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞானவியல், உணவு விஞ்ஞானவியல் தொடர்பான விஞ்ஞானவியல் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல்வேண்டும். விண்ணப்பங்களை 2016. 04.04 ஆம் திகதியன்றோஅல்லதுஅதற்கு முன்பதாகவோ "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புமற்றும் வெளி நாட்டுப் பரீட்சை பிரிவு, இலங்கைப்பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 1503கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிகதகவல்களுக்கு 4/3/2016 இல்வெளியான வர்த்தமானியை பார்வையிடவும். (இ)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:12<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/4086 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 14 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4606 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: B/3571 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 45 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/4608 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 17 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:DIPLOMA/ டுபாய்<br>தொ.இ: B/3572 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 32 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/4622 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 92 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ சொந்த தொழில் லண்டன்<br>தொ.இ: B/2058 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 29<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BBM/தனியார் தொழில்<br>தொ.இ: G/4624 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# செய்தித்துளிகள்

## மலேசியாவுக்கு இலங்கையின் பாதுகாப்பு பணியாளர்கள்

மலேசியாவில் பாதுகாப்பு பணியாளர்களாக கடமையாற்ற இலங்கையர்களுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதுவரை காலமும் வெளிநாட்டவர்கள் என்ற குர்காஸ் என்ற புகழுக்காக நேபாள நாட்டினருக்கு மாத்திரமே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டு வந்தது.

எனினும் நேபாளத்தில் இந்த பணிகளுக்கு வருவோரின் தொகை வரையறைக்கு உட்பட்டிருப்பதால் வேறு நாட்டவர்களுக்கும் இதனை விஸ்தரிக்க தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை மலேசியாவின், உள்துறை பிரதியமைச்சர் டட்டுக் நூர் ஜெஷ்லான் வெளியிட்டுள்ளார்.

குறித்த பாதுகாப்பு பணியாளர்கள், இலங்கையில் இருப்பதைப் போன்று இராணுவ அடிப்படையை கொண்டவர்களாக இருப்பதை தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

## மஹா சிவராத்திரி சொற்பொழிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சரசாலை இந்துமன்றம் கடந்த 30 வருடமாக நடத்தி வருகின்ற மஹா சிவராத்திரி சொற்பொழிவுகள் ஐந்து பிரிவுகளாக நாளை திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நடத்தப்படவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.சிவசங்கரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு சிறந்த சொற்பொழிவாளர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவுகளை ஆற்ற முடியும்.

சொற்பொழிவுகளை ஆற்றும் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும். (இ-5)

## பன்றி இறைச்சி வைத்திருந்தவருக்கு 27ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிப்பு

திருகோணமலை புல்மோட்டை பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் இரண்டு கிலோ பன்றி இறைச்சியை தம்வசம் வைத்திருந்த ஒருவருக்கு குச்சவெளி நீதிமன்ற நீதவான் ஹயான் மீ ஹககே 27 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து நேற்று முன்தினம் உத்தரவிட்டார். (இ)

## 15 பொலிஸாருக்கு பதவியுயர்வு

பொலிஸ் விசேட அதிரடிப்படையில் பிரதான பொலிஸ் பரிசோதகர்களாக கடமையாற்றிய 15 பேர் உதவி பொலிஸ் அதிகாரிகளாக பதவியுயர்வு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பதவியுயர்வு எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

சேவைக் காலம் மற்றும் திறமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ)

## வித்தியாசமான போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது

இத்தாலி நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் 200 கிராம் போதைப் பொருளுடன் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அரசாங்கத்தின் உயர் மட்டத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை மற்றும் கேரளா கஞ்சா ஆகியவற்றுக்கு இணையானது எனக் கூறப்படும் இந்த போதைப் பொருள் வெள்ளை நிறத்திலானது என்பதுடன் அதிக விலை மதிப்பானது எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி நாரஹேன்பிட்டியில் போதை உண்டாக்கும் சொக்லேட்டுகளுடன் கைது செய்யப்பட்ட பெண் வைத்தியரின் மகளிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

## தளபாட நிலையத்தில் தீ

பூண்டுலோயா நகரில் அமைந்துள்ள தளபாட விற்பனை நிலையமொன்றில் நேற்று முன்தினம் தீ பரவியுள்ளது.

இந்த தீ விபத்து நேற்று முன்தினம் 7.45 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

விற்பனை நிலையத்தின் மூன்றாம் மாடியிலேயே தீ பரவியுள்ளதுடன், தீயினால் அந்த மாடியிலிருந்த தளபாடங்கள் அனைத்தும் முற்றாக எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நுவரெலியா தீயணைப்பு சேவைப் பகுதியினர், பிரதேச மக்களுடன் இணைந்து பொலிஸார் தீயைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

சுமார் மூன்று இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய தளபாடங்கள் தீயினால் அழிவடைந்துள்ளன. (இ)

# சர்வதேச மகளிர் தினத்தில் கறுப்பு உடை போராட்டம்

## பெண்கள் அமைப்புகள் அழைப்பு

(பனிக்கன்குளம்)

நாடளாவிய ரீதியில் சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

அன்றைய தினம் வீடுகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் கறுப்புக்கொடி ஏற்றுமாறும் கறுப்புப்பட்டிகள், கறுப்பு உடைகளை அணியுமாறும் ஒன்றிணைந்த பெணகள் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பு, வடமாகாண பெண்கள் மாற்றத்திற்கான பரிந்துரை செய்யும் வலையமைப்பு, பெண்கள் செயற்பாட்டுக்கான வலையமைப்பு என்பன இணைந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

இதுதொடர்பில் விடுக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சர்வதேச பெண்கள் தினமான மார்ச்8 ஆம்திகதியையும் இந்த முழுமாதத்தினையும் நாம் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் இருண்ட நாட்களாக பிரகடனப்படுத்துகின்றோம். பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளும் கொலைகளும், சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன் முறைகளும் கொலைகளும் மிகவும் மோசமான முறையில் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றன.

இந்த வன்முறைகளுக்கான நீதி இதுவரை கிடைக்காததாலும் நீதிகிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப் போனதாலும் பெண்களுக்கான தினமாகிய மார்ச் 8 ஆம் திகதியையும் இந்த முழு மாதத்தினையும் ஒட்டுமொத்த நாட்டுமக்களுக்கும் இருண்ட நாட்களாகப் பிரகடனப்படுத்துகின்றோம்.

வன்முறைக்குட்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான பெண்களும் குடும்பத்தினரும் அவர்களது உரிமைக்காக போராடிக்கொண்டிருக்கும் செயற்பாட்டாளர்களும் நீதிக்காக காத்திருந்து நம்பிக்கை இழந்து விட்டோம். யாழ்ப்பாணம் புங்குடுதீவில் 2015 இல்15 வயதான மாணவி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கு நீதிகோரி நாடு முழுவதும் மக்கள் எழுச்சி கொண்டும் இதுவரை நீதி கிடைக்கவில்லை. மட்டக்களப்பில் 2009 இல் 24 வயதான பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கு நீதியை கோரி அவரின் தாய் இன்று வரை அலைந்து கொண்டிருக்கின்றார்.

ஹற்றனில் (ஏப்ரல் 2015) 5 வயது சிறுமி பாலியல் வல்லுறவு, புத்தளத்தில் (ஜனவரி 2016) 26 வயது பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சி, கம்பஹாவில் (பெப்ரவரி 2016) 18 வயதான பெண் பாலியல் வல்லுறவு, கம்பளையில் (பெப்ரவரி 2016) 7 மாத குழந்தையின் தாய் 10 பேரால் பாலியல் வல்லுறவு, வவுனியாவில் (பெப்ரவரி 2016) 14 வயது மாணவி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை என வன்முறைகள் நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் அனைத்து நாட்களிலும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)




## உருத்திரபுரீஸ்வர ஆலயத்தில் மகாசிவராத்திரி



கிளிநொச்சி உருத்திரம் புரம் பகுதியில் சோழர்காலத்திற்கு முற்பட்ட ஏழு ஈஸ்வரங்களின் ஒன்றாக கோயில் கொண்டு வீற்றிருக்கும் உருத்திரபுரநாயகி உடனுறை உருத்திரபுரீஸ்வரப்பெருமான் ஆலயத்தில மகாசிவராத்திரி நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

நிகழ்வுகள் தவத்திரு கணேசானந்தமகாதேவ சுவாமிகள் மகாதேவ ஆச்சிரமம் ஜெயந்திநகர் நல்லாசியுடன் ஆரம்பமாகும். நான்கு சாமப்பூசைகள் நடைபெறுவதுடன் பாடசாலை மாணவ,மாண விகளின் கலை நிகழ்வுகள் , சொற்பொழிவுகள் என்பன இடம் பெறவுள்ளது.

காவல் கடமை ,வைத்திய வசதிகள் என்பன ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அடியார்கள் கலந்து கொண்டு அருளாசி பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-254)

## தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி; முல்லைத்தீவு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

### மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் செவ்வி

முல்லைத்தீவில் தென்னிலங்கை மீனவர்களின் 300 இற்கும் மேற்பட்ட படகுகள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழியாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஐ.பி.சி. தமிழ் செய்திக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் கூறுகையில்,

வன்னி இறுதி யுத்தம் முடிவடைந்து அகதி முகாம்களில் துன்பங்களை அனுபவித்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தாங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன்கடற்றொழிலுக்கு தேவையான பொருட்களை பெற்று தமது பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சி செய்துவருவதாக அவர் கூறியுள்ளார். மூன்று வருடங்களின் முன்னர் 591 ஆவது டிவிசன் படையினர் மீனவர்களை ஒருங்கிணைத்து 30 வருடங்களின் முன்னர் சிங்கள மீனவர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், அவர்களுக்கு மீன் பிடிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும் என இராணுவம் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கேட்டதற்கு இணங்க 35 மீன்பிடி படகுகளுக்கு அனுமதி அளித்ததாகவும் அதாவது அவ்வாறு இராணுவமே சொல்லிச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார.

எனினும் தற்போது தென்னிலங்கை மீனவர்களின் படகுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

## சமுர்த்தி வீட்டுத்திட்டம் பூரணப்படுத்தப்படாமையால் தொடர்ந்தும் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றோம்

வவுனியா கனகராயன் குளம் வடக்கு பெரியகுளம் பிரதேசத்தில் சமுர்த்திவீட்டுத் திட்டம் 2014 ஆம்ஆண்டு வழங்கப்பட்டபோதும் இதுவரை பூரணப்படுத்தப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இடம்பெயர்ந்த நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோதும் இதுவரை குடிசைகளில் வசித்து வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு தமக்கு ஒரு இலட்சம் பெறுமதியான அரைநிரந்தர வீடு வழங்குவதாக தெரிவித்தனர. அந்தவீட்டுத்திட்டநிதியினை சமுத்திஅதிகாரியிடம் வழங்கு மாறும் அவர் வீட்டினை அமைத்து தருவாரெனவும் குறிப்பிட்டு அவர்களது வங்கிக்கணக்கிலிருந்து முழுப்பணத்தையும் சமுர்த்தி உத்தியோகத்தர் பெற்றுக்கொண்ட போதும் இதுவரை அந்தவீடுகள் நிறைவு செய்து தரவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை தாம் மிகவும் பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பதாக குறிப்பிட்ட மக்கள் விறகுவெட்டியே தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பில் அரச அதிகாரிகள் பலருக்கு தெரியப்படுத்திய போதும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, தமக்குரிய சமுர்த்திவீட்டுத்திட்டத்தை உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி பெற்றுத்தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

## சமூக அபிவிருத்தி சார்ந்த நிகழ்வுகள் கிராம அதிகாரிகளினால் புறக்கணிப்பு

### பிரதேச மக்கள் சுட்டிக்காட்டு

கிராமங்களில்நடைபெறும் சமூக அபிவிருத்தி சார் நிகழ்வுகள், ஒன்று கூடல்கள், சமய, சமூக ஒற்றுமைக்கான நிகழ்வுகள் ஆகியவற்றை கிராமம் சார் அரசஅதிகாரிகளான கிராம அலுவலர்கள் , சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் புறக்கணிக்கும் சம்பவங்கள் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சில கிராமங்களில் இடம் பெறுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, இப்பிரதேசத்திற்குட்பட்ட சில கிராமங்களில் கிராம மக்களை ஒன்றிணைத்து பல்வேறு அமைப்புக்கள் , தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றி னால் முன்னெடுக்கப்படும் சமூக சார் அபிவிருத்தி நிகழ்வுகள் ஒன்றுகூடல்களில் அக்கிராமங்களில் பணியாற்றுகின்ற சில அரச உத்தியோகத்தர்கள் புறக் கணித்து வருகின்றமை தொடர்பில் பொதுமக்கள் விசனத்தை தெரிவிக்கின்றனர்.

கிராமங்களின் உடைய சமூக அபிவிருத்தி வளர்ச்சிகளில் முக்கிய பங்காளிகளாக திகழும் இவ்வாறான அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பில் மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோர் கவனத்தில் கொண்டு அவ்வாறானவர்களை வழிப்படுத்துவதன் ஊடாக கிராமங்களில் சமூக அபிவிருத்தி பணிகளை மேம்படுத்த முடியுமென மக்கள் தெரிவிக்கின்றனர். (2-310)

## வ.மா.கல்வி அமைச்சரின் தலையீட்டையடுத்து உணவுத் தவிர்ப்பு போரராட்டம் கைவிடப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலயம் முன்பாக முன்னெடுக்கப்பட்டு வந்த உணவு தவிர்ப்பு போராட்டம் வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் தலையீட்டை அடுத்து முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. வித்தியாலய நிர்வாகத்தை சீர்செய்யக்கோரி குறித்த போராட்டம் கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர் , நலன் விரும்பிகள் ஈடுபட்டு வந்தனர். இவர்களிற்கு ஆதரவாக சனசமூக நிலையம், விளையாட்டு கழகம் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கம் ஆகியன ஆதரவு தெரிவித்திருந்தன.

குறித்த போராட்டம் 2 ஆம நாளாக நேற்று முன்தினம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் சுகவீனமுற்ற நிலையில் காணப்பட்ட வேளை நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வருகை தந்த வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலை தொடர்ந்து தமக்கு இரண்டு வாரங்கள் அவகாசம் தருமாறும், விசாரணை மேற்கொண்டு தீர்வு பெற்று தருவதாகவும் அமைச்சர் கோரியதையடுத்து போராட்டக்காரர்கள் இணங்கினர்.

கோரிக்கைக்கு தம்மால் உடனடி பதில் வழங்க முடியாது என குறிப்பிட்ட அமைச்சர், எதிர்வரும் நாட்கள் தொடர் விடுமுறையாகையால் எதிர்வரும் 8 ஆம் தகதி அதற்கான முடி வினை வழங்குவதாக குறிப்பிட்டார். எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை போராட்டத்தினை தாம் தற்காலிகமாக கைவிடுவதாக தெரிவித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது,

இதேவேளை குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த அமைசசர், முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் விரிவான விசாரணை மேற்கொள்ளப் படுமென குறிப்பிட்டார்.(2-271)



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தனது அலுவலகமான மக்கள் தொடர்பகத்தினை நேற்று முன்தினம் முல்லை நகர்ப்பகுதியில் திறந்து வைத்த போது....
(படம்:- வற்றாப்பளை செய்தியாளர்)

## கலந்துரையாடல்

(திருமுறிகண்டி)

கிளி/சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலையின் பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெறும்.

இதில் பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் மற்றும் புதிய நிர்வாக தெரிவும் இடம்பெறவுள்ளது.

எனவே அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-311)

சிவசிவ என்றிட தீவினை மாளும்
சிவசிவ என்றிட சிவகதிதானே
- திருமந்திரம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சிவ சிந்தனைக்கு இடம் கொடுமின்!

"... சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர், சிவசிவ என்றிட சிவகதிதானே!" என்பது திருமூலர் கூறும் திருமந்திரம். பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் 10ஆம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

சைவ சமயத்தின் மிகப்பெரும் மருத்துவர் திருமூலர் என்றால் அதில் மிகையில்லை. எனினும் திருமூலரின் தெய்வீகம் நிறைந்த தத்துவப் பாடல்களை சைவ ஆலயங்களில் பாடுவதற்கு நாம் முன்வராதது பெரும் குறைபாடே.

பஞ்சபுராணம் ஓதுகின்றபோது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்று வகுத்தவர்கள் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்திற்கு இடம்தராமல் விட்டமை துரதிர்ஷ்டமே.

எனினும் நம் முன்னோர்கள் அவ்வாறு ஆக்கிவிட்டார்கள் என்பதற்காக நாமும் அதை அப்படியே பின்பற்றாமல் பஞ்சபுராணம் என்பதற்கு அப்பால், ஆலயங்களில் ஓதுதற்குரிய திருமுறைகள் என்றொரு பட்டியலைத் தொகுத்து அவற்றை ஆலயங்களில் பஞ்சபுராணத்திற்கு மேலதிகமாக பாடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் திருமூலரின் திவ்விய பிரபந்தங்களின் தேன்சுவையை நாம் பருக முடியும். அழியின் உயிரால் அழிவர் திறம்பட ஞானம் சேரவும் மாட்டார் என்று திருமூலர் பாடிய திருமுறைக்குள் இருக்கக் கூடிய தத்துவம் சாதாரணமானதன்று. உறுதியான உடலில்தான் உறுதியான உள்ளம் இருக்க முடியும் என்பதை மருத்துவ உலகம் ஏற்றுள்ளது.

இந்த மருத்துவக் கருத்தையே திருமூலர் சுவாமிகள் உடம்பால் அழியின் உயிரால் அழிவர்... என்றுரைத்தார்.

ஆக, இன்று நாம் உடல் ஆரோக்கியம் பற்றி மாநாடு கூட்டிப் பேசுகின்றோம். ஆனால் மதுவையும் போதையையும் ஒழுங்கீனத்தையும் உடல் ஆரோக்கியத்தின் எதிரியாகப் பார்த்த திருமூலர் மனதை சுத்தமாக வைத்திருப்பதன் அவசியத்தையும் எங்ஙனம் மனச்செம்மை ஏற்பட முடியும் என்பதையும் தெளிவாகக் கூறியுள்ளார். எனவே நம் பெரும் சொத்தாகிய திருமந்திரத்தை மாணவர்களுக்கு எடுத்துரைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்பதற்கப்பால்,

நாளைய தினம் சிவராத்திரி விரத நாளாகும். சிவ விரதம் சைவச் சமயத்தவர்களின் உன்னதமான விரதம். சிவசிவ என்ற நாமத்தை நெஞ்சிருத்தி காய்த்தைக் கோயிலாக்குவதற்குரிய இத்திருநாளில் நாம் நடந்து செய்கின்ற செயற்பாடுகள் சரியானதா? என்றுணர்தல் அவசியமாகும்.

இந்த வகையில் சிவராத்திரியில் மதுபாவனையும் பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்துவதும் விரசச் செயல்களும் தாராளமாக நடந்தேறுகின்றன.

ஒரு புனிதமான சிவ விரத நாளில் எது நடக்கக் கூடாதோ அது நடப்பதாக இருந்தால் எங்கள் இளம் சமூகத்தின் எதிர்காலம் எங்ஙனம் அமையும் என்பதை எவரும் சொல்லித் தெரியவேண்டியதேவையிராது.

எனவே புனிதமான சிவராத்திரி நாளில் மதுப்பாவனைக்கும் விரசச் செயல்களுக்கும் முற்றாகத் தடைவிதிப்பது கட்டாயமானதாகும்.

இது விடயத்தில் சைவசமய அமைப்புகள் குரல் கொடுப்பது அவசியம். சமயம் என்பது மனிதர்களை பக்குவப்படுத்தி நல்வழிப்படுத்துவதாகும்.

இத்தகைய உன்னதமான செயற்பாடுளை செய்யும் பொருட்டு விரத வழிபாட்டு நாட்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த நாட்களிலாவது இறைசிந்தனையை உள்ளத்திருத்தவேண்டும். இதைச் செய்வது எங்கள் அனைவரதும் தலையாய கடமையாகும் என்பதால் நாளைய சிவராத்திரி விரதநாளில் எல்லோரும் புனிதமாக இருந்து சிவசிந்தனையை மனத்திருத்துவோமாக.

# கைது செய்யப்பட்டுள்ள இந்தியர்களின் உடல் உறுப்புக்கள் நீக்கப்பட்டுள்ளதா?

## ஆராய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

சில நாட்களுக்கு முன்பாக கொழும்பு நகரில் கைது செய்யப்பட்ட இந்தியர்களின் உடல் உறுப்புக்கள் ஏதும் நீக்கபபட்டுள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதவான்நீதிமன்றம், கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தை மற்றும் ஹவ்லொக் வீதி ஆகிய இடங்களில் சட்டவிரோதமாக தங்கியிருந்த சிலரைக் பொலிஸார் சில நாட்களுக்கு முன்பாகக் கைதுசெய்தனர்.

இந்த நபர்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத சிறுநீரக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இவர்களின் உடம்பிலிருந்து சிறுநீரகம் போன்ற உறுப்புக்கள் ஏதாவது நீக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கூறிய பொலிஸார் இது சம்பநதமாக ஆராய்ந்து அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கு அனுமதி தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நீதிபதி சந்தேக நபர்களின் உடம்பில் உறுப்புக்கள் நீக்கப்பட்டுள்ளதாக என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்பபிக்குமாறு கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரியிடம் உத்தரவொன்றை பிறப்பித்தார்.

விசாரணைகள் இன்னும் பூர்த்திசெய்யப்படாத காரணத்தினால் சந்தேக நபர்களை தடுத்துவைக்க அனுமதி தருமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிபதி சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கினார். (செ-12)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மால்ல 5 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

கிளிநொச்சி பிரதேசத்தில் தேவிபுரம், 68வது இராணுவப் படை முகாம் ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும். (இ-9)

## விற்றமின் சீ இடைநிறுத்தம்

போலிக் அஸிட் மற்றும் விற்றமின் சீ ஆகிய மருந்துகளை விநியோகிக்கும் வேலைத்திட்டம், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த மருந்துகளை உட்கொண்டதில் பண்டாரவளை, பூணாகலை தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் சிலர் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம் மாணவர்கள் பாதிக்கப்பட்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்று ஹல்துமுல்ல பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கூறனார். இந்நிலையிலேயே இந்த மாத்திரைகளின் விநியோகம தற்காலிகமாக இடைநிறுத்தபபட்டுள்ளது. (இ)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி - துனனாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவிலில் மஹாசிவராத்திரி விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ள சிவராத்திரி விழா மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6 மணிவரை விசேட பூஜைவழிபாடுகளுடன் நடைபெறவுள்ளது. (செ-5)

## வாகன விபத்தில் சிறுவன் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கள் விபத்தில் சிக்கிய சிறுவன் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இவ் விபத்துச்சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் வடமராட்சிக் கிழக்கு அம்பன் பகுதியில் இடம் பெற்றது.

இதில் அம்பன் குடத்தனையைச் சேர்ந்த கிருபாகரன் - புஸ்பகரன் (வயது 10) என்ற சிறுவனே விபத்தில் படுகாயமடைந்தவராவார்.

குறித்த சிறுவன் வீதியைக கடக்க முற்பட்ட வேளையே இவ் விபத்துச் சம்பவம் இடம் பெற்றது என்பதும் குறிப்பிடத் தக்கது. (செ-5,60)

# இறைவனின் அளவற்ற அன்பை ஏற்றுக்கொள்வதற்கு நாம் தகுதியானவர்களா?

இன்று தவக்காலத்திற்குள் வருகின்ற நான்காவது ஞாயிறாகும். இன்றைய பைபிள் வார்த்தைகள் ஊதாரி மைந்தனின் உவமைக்கதையை சிந்திப்பதற்கு அழைக்கின்றது: உவமைகள் என்றால் என்ன என நோக்கும்போது சாதாரண, மிக, மிக எளிய மனித அனுபவங்களையும், மனித எண்ணங்களைக் கடந்த மறையுண்மைகளான இறையரசு மற்றும் இறைவன் போன்ற கருத்துக்களையும் தன் உவமைகள் வழியே அருகருகே வைத்து இயேசு மக்களுக்கு விளங்கக் கூடிய ஒப்பீட்டு முறையில் போதித்தார். 'இயற்கையிலிருந்தோ, இயல்பு வாழ்விலிருந்தோ எடுக்கப்பட்ட ஓர் எடுத்

## பரமபிதா காட்டிய பாதை


துக்காட்டு உவமையாகிறது. இது, கேட்போரிடையே ஆர்வத்தைத் தூண்டுகிறது. கேள்விகளை எழுப்புகிறது. மொத்தத்தில், ஓர் உவமை, கேட்போரைச் சிந்திக்க அழைக்கிறது.

'தந்தை ஒருவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். இளையவர் தந்தையை நோக்கி, சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும் என பெற்று தொலை நாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார். அங்குத் ஊதாரித்தனமாக தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார். பின்பு ஏதுமின்றி பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார். ஆனால் அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் யாருமில்லை. கடவுளுக்கும் தந்தைக்கும் எதிராக நான் பாவம் செய்தேன் என தவறை உணர்ந்து தந்தையிடம் திரும்பி வரும்போது தொலைவிலேயே அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப் போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். தன் தம்பி வந்திருக்கிறார் என்று தந்தை கொழுத்த கன்றை அடித்து விருந்து வைப்பதில் சினமுற்று உள்ளே போக விருப்பம் இல்லாதவராக மூத்த புதல்வர் வெளியே நிற்கிறார். தந்தை அவரை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்கிறார். அவர் மறுக்கிறார்" ஊதாரி மகன் எந்த அளவுக்குத் தன் சொத்துக்களை அழிப்பதில் ஊதாரியாக இருந்தானோ, அந்த அளவுக்கு அன்பு காட்டுவதிலும், இரக்கம் அளிப்பதிலும் ஊதாரியாக இங்கு இருந்தார் தந்தை.

இந்த கதையில் வருகிற தந்தை, ஊதாரி மைந்தன், அவனது சகோதரன் மூன்று பேருமே மூன்று மனநிலைகளைச் சித்திரிக்கிறார்கள் என்பது எமக்கு நன்கு புலப்படுகின்றது: தந்தை அன்பின், பரிவின், நிபந்தனையற்ற மன்னிப்பின் மனநிலையைப் பிரதிபலிக்கிறார். ஊதாரி மைந்தன் தனது சொந்த நடத்தையால் வறுமையில் வாடி, தன்மானம் இழந்து, மீண்டும் தந்தையைத் தேடி வருவதைப் பார்க்கிறோம். அவன் நேர்மையான மனத்துயரைப் பிரதிபலிக்கிறான். அறிவுத் தெளிவு பெற்றதும் தந்தையிடம் திரும்பி வந்தான். அத்துடன், மகனாக அல்ல, வேலையாளாகப் பணி செய்ய முன்வந்தான். அந்த மகன் தந்தைக்கு எதிராக திரும்பினாலும் தந்தை நிபந்தனையற்ற அனபை தன் மகன் மேல் வைத்திருந்தார், அவர் தனது அன்பளிப்பாக தன்மகனுக்கு அளவற்ற அன்பை கொடுத்தார். மகனோ தனது தந்தைக்கு கொடுத்த அன்பளிப்பு என்னவென்றால், தந்தையின் அன்பை, திறந்த மனதோடு ஏற்றுக்கொள்ள தயாராக வந்தது தான்.

மூத்த மகன் குறைகாணும் மனநிலையை, பொறாமையை, நன்மையை ஏற்றுக்கொள்ளாத மனதை, தீர்ப்பிடும் மனநிலையைப் பிரதிபலிக்கிறான். வீணாகச் செய்யும் ஒவ்வொரு செலவும் உலகில் கொடுமையான வறுமையையும் பஞ்சத்தையும் உண்டாக்குகிறது. மனிதன் விரயம் செய்யும் ஒவ்வொரு பொருளும் எங்கோ, யாருக்கோ, ஏதோ ஒரு விதத்தில் ஒருபஞ்சத்தையும் வெற்றிடத்தையும் உண்டாக்கு வதை பொருளாதாரம் மறுப்பதற்கில்லை. அந்த இளைய மகன் தந்தையின் அன்பு, பாசம், உறவு அனைத்தையும் அலட்சியப்படுத்தினான். வாரிச் சென்ற பொன், பொருளையும் தாறுமாறாக வாழ்ந்து அழித்தான். சொத்தையும் பணத்தையும் பயன்படுத்தி, உழைத்ததாகவோ, உழைத்து நட்டமடைந்ததாகவோ கதையில் சொல்லப்படவில்லை. மாறாக, நெடும் பயணம், தாறுமாறான வாழ்க்கை, பாழாக்கும் பழக்கம், கெட்ட நட்பு, சூழல் இவற்றில் அனைத்தையும் செலவழித்துள்ளான். வளைவு, பஞ்சம். வறுமை. இழப்பு. தனிமை. மிருகங்களோடு வாழ்க்கை. பன்றிகள் தின்னும் நெற்றுக்குக்கூட அங்கு பஞ்சம்.

வீண் விரயம் செய்ய வேணடாம். பஞ்சத்திற்கு நாங்கள் காரணமாகவும் இருக்க வேண்டாம். ஆண்டவன் தந்த உறவையும் பாசத்தையும் பரவலாக்குவோம். பொன்னையும் பொருளையும் இல்லாரோடு பகிர்வோம். தந்தை தம் இளைய மகனுக்குத் தனிக்கவனம் செலுத்திவிட்டு, தன்னை மட்டும் ஒரு பொருட்டாக எண்ணவில்லையே என்னும் சிந்தனையில் புழுங்குகின்ற மூத்த மகனும் நம் கவனத்தை இன்று ஈர்க்கிறார். சினம் கொண்டு, விருந்தில் கலந்துகொள்ளாமல் வெளியே நிற்கின்றான் மூத்த மகன். 'இளைய மகன் கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்"என்று ஒத்துக்



கொள்கிறான். ஆனால், மூத்த மகனோ வெளிப்படையாக எந்தப் பாவமும் செய்யவில்லை. மாறாக, தந்தையின் இரக்கத்தை, பரிவைக் கண்டு சினமுற்று உள்ளே போகவிருப்பம் இல்லாது வெளியே நிற்கிறார். தந்தை வந்து உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்டும் உள்ளே

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

செல்லவில்லை. மாறாக, தந்தையின் மனனிப்பில் குறை காண்கிறார், குற்றம் சாட்டுகிறார். இந்த மூத்த மகன் தண்டிக்கப்பட்டதாகவோ, தந்தையால் கடிநது கொள்ளப்பட்ட தாகவோ உவமைக்கதையில் சொல்லப் படவில்லை.இருப்பினும்பொறாமை, சினம், தந்தைக்கு அவமதிப்பு, தம்பியின் மனமாற்றத்தில் மகிழாமை, தந்தையையே குறை காணும் மனநிலை எனப் பல்வகைப் பாவங்கள் இவர் செய்துள்ளார் என்பது வெளிப்படை. நாமும் சில வேளைகளில் இறைவனின் இரக்கத்தில் எரிச்சல் கொள்கிறோம், மனமாற்றம்அடைவோரைக்கண்டு கேலி செய்து இறை வனையே அவமதிக்கிறோம். இங்கு கடவுளின் நிபந்தனையற்ற மன்னிப்பையும், அளவற்ற அன் பையும் ஏற்றுக் கொளவதற்கு நாம் தகுதியானவர்களா? இத்தவக் காலத்தில் இறைவனிடம் வருந்தி மன்னிப்பு கோருவோம். பிறரன் மனமாற்றத்தில் மகிழ்வோம்.

# தாஸ் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

## கலைமதி, ஞானமுருகன் வெற்றி





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தமிழ் தேசிய வீரன் தாஸின் நினைவாக நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் வி.க.எதிர் நவிண்டில் கலைமதி வி.க மோதிய போட்டியில் ஆட்டநேர முடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் சம நிலையில் முடிவுற்றதால் சம நிலை தவிர்ப்பு உதையில் கலைமதி வி.க. 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் வி.க.எதிர்வல்வை வி.க. மோதிய போட்டியில் 2:0 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் வி.க.வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக சுமித் தெரிவு செய்யப்பட்டார். (கு)

# இன்றைய போட்டிகள்

தமிழ்த்தேசிய வீரன் தாஸின் நினைவாக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகு கள் விளையாட்டு கழக மைதானத் தில் உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெறுகின்றன.

அதன்படி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடை பெறும் போட்டியில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில்மன்னார் கில்லறி அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்.யூட்ஸ் அணி மோதவுள்ளது. (கு)

◆ ◆ ◆

கரவெட்டி விரதேச செயலக விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான பெண்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 8.30 மணியளவில் மாலுசந்தி மைக்கல் விளையாட் டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மருதநிலா வெற்றி

சாந்தன்யூட் கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான காற்பந்தாட்டத் தொடரில் அண்மையில் இடம் பெற்ற ஆட்டமொன்றில் மருதநிலா அணி வெற்றி பெற்றுள்ளது.

வவுனியா வைரவ புளியங் குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வவுனியா காற்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணி களுக்கு இடையில் நடத்தும் சாந் தன்.யூட்.கயன் ஞாபகார்த்த கிண் ணத்துக்கான லீக் முறையிலான காற்பந்தாட்ட தொடரின் ஆட்ட ங்கள் வவுனியா வைரவ புளியங் குளம் யங்ஸ்டார் விளையாட்டுக்க ழக மைதானத்தில் மின்னொளி யில் இடம்பெற்றுவருகின்றன.

இந்தத் தொடரில் கடந்த திங்கட் கிழமை இரவு 7மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் மருத நிலா அணியை எதிர்த்து அல் இக்பால் அணி மோதிக் கொண்டது.இதில் மருத நிலா அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# கரைச்சி கபடித் தொடர் சிவநகர் அ.த.க.சம்பியன்

கரைச்சி கோட்டப் பாடசாலைக ளுக்கிடையிலான கபடித் தொடரில் 15 வயதுப் பிரிவில் சிவநகர் அ.த.க. பாடசாலையின் ஆண், பெண் அணிகள் கிண்ணம் வென்றுள்ளன.

இறுதியாட்டங்கள் சிவநகர் அ.த.க.பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன. 15வயது பெண்களுக்கான இறுதி யாட்டத்தில் சிவநகர் அ.த.க. பாட சாலை அணியை எதிர்த்து கிளி நொச்சி இந்துக் கல்லூரி அணி மோதியது.

இதில் சிவநகர் அ.த.க.பாட சாலை அணி 5:2என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியன் ஆகி யது.3 ஆம் இடத்தை புது முறிப்பு விக்னேஸ்வரா அணி பெற்றது.

15 வயது ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் சிவநகர் அ.த.க.பாட சாலை அணியை எதிர்த்து கன காம்பிகைக் குளம் அ.த.க. பாட சாலை அணி மோதியது.

இதில் சிவநகர் அ.த.க.பாட சாலை அணி 35:12 என்ற புள்ளி களின் அடிப்படையில் சம்பியனா கியது. 3 ஆம் இடத்தை கிளிநொச்சி இந்து கல்லூரி அணி பெற்றது. (க)

## பருத்தித்துறை பாடசாலைகளுக்கிடையிலான

# கிரிக்கெட் சுற்றுத் தொடர்

## ஹாட்லிக் கல்லூரி சம்பியன்

பருத்தித்துறை கோட்ட பாடசா லைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுத்தொடரில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி சம்பி யனாகியது.

தொடரின் இறுதியாட்டம் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது. இதில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியா லயமும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பலப்பரீட்சை நடத் தின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தொண்டைமானாறு அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக திவ்வியன் 10 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச் சில் ஆனந்த் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.



30 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு களமிறங்கிய ஹாட்லிக் கல்லூரி அணி 3.5 பந் துப் பரிமாற்றங்களில் 4 இலக்கு களை இழந்து இலக்கை அடை ந்தது.

அதிகபட்சமாக நிசாந்தன் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் தயன் 2இலக்குகளையும் டிலக்சன் மற்றும் சசிகரன் இரு வரும் தலா ஓர் இலக்கையும் கைப் பற்றினர். (க)



தெல்லிப்பழை பிரதேச செயலக 2016 ஆம் வருட ஆண்களுக்கான எல்லே போட்டியில் சம்பியனான தெல்லிப்பழை கலை ஒளி விளையாட்டுக்கழகத்தை படத்தில் காணலாம்.



சண்டிலிப்பாய் கோட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 15 வயதுக்குட்பட்ட அணியினை படத்தில் காணலாம்.

## முதல்வர் விக்னேஸ்வரன்...

மிகவும் இரகசியமான முறையில் பூட்டிய அறைக்குள் நடந்த இக் கூட்டத்தில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டப்பட்டிருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இது குறித்து கட்சித் தலைமை ஊடகங்களுக்கு தகவல் கொடுக்க மறுத்துவிட்டது.

நேற்றுக்காலை நடந்த இந்த இரகசியக் கூட்டம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகவும், அவரை பதவி கவிழ்ப்பதற்காகவும் பலதரப்பட்ட சதித்திட்டங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட, அவற்றில் இரண்டு முயற்சிகள் பகிரங்கமாக எல்லோர் மத்தியில் பேசப்பட்டிருந்தன.

முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டுவர முயற்சித்தமை, தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் பதவியை முதலமைச்சர் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று போலிக்கையெழுத்துகள் பெறப்பட்டமை என்ற விடயங்களே அவையாகும்.

அனைத்தும் தோல்வியில் முடிவடைந்துள்ள நிலையில், அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து பேசுவதற்காக மாவை சேனாதிராஜா தலைமையில் நேற்று இந்த கூட்டம் கூடியுள்ளமை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கூட்டத்தின் நோக்கம் 'இன்றைய அரசியல் நிலைமையும், தீர்வுத் திட்டமும்' என்று தலைப்பிட்டு உறுப்பினர்களுக்கு அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தாலும்,

வடக்குமாகாணசபையை கலைப்பது அல்லது முதலமைச்சரை பதவி நீக்கம் செய்வது என்று தொடரும் போக்கில் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு தயார்ப்படுத்தும் கூட்டமாகவே இதனை தான் நோக்குவதாக தமிழரசுக்கட்சியின் பெயர் குறிப்பிட விரும்பாத வடக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார்.

இவ்வாறான போக்குகள் தொடருமாயின் அது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை சிதைத்து இரண்டாகப் பிளவுறுத்தும் ஆபத்தான நிலைமைகளுக்கு கொண்டு செல்லும் என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

கடந்தவாரம் இரா.சம்பந்தனின் இல்லத்தில் சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுமந்திரன், அமைச்சர் சத்தியலிங்கம் ஆகியோர் இரகசிய சந்திப்பு ஒன்றை நடத்தி சதித்திட்டங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அதன் தொடர்ச்சியாகவே நேற்றைய அவசரக் கூட்டமும் நோக்கப்படுகின்றது.

எனினும் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க மாட்டார் என மற்றொரு மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வின் போது உறுப்பினர்களிடையே காணப்பட்ட கசப்புணர்வுகளும் இந்தக் கூட்டத்தின்போது ஆராயப்பட்டுள்ளன.

இதில் முக்கியமாக வடக்கு மாகாண விவசாய அமைச்சருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறையிடப் போவதாக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் லிங்கநாதன் கூறியிருந்தமை தொடர்பிலும் சபையில் ஏற்படும் குழப்பங்கள் தொடர்பிலும் நேற்றைய கூட்டததில் ஆராயப்பட்டதாக அறியு முடிகின்றது. (செ-12)

## குளியாப்பிட்டிய சிறுவனின் கல்வியில் ஜனாதிபதி கவனம்

(கொழும்பு)

எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற வதந்தியால் பள்ளிக்கூடத்திலிருந்து நீக்கப்பட்ட சிறுவன், தனது கல்வியை தொடர அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசி மூலம் கூறியுள்ளார்.



இந்தச் சிறுவனை பார்வையிடுவதற்காக குளியாப்பிட்டியவிலுள்ள அவரது வீட்டுக்கு சென்ற பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, அங்கிருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தொலைபேசியில் தொடர்புக்கொண்ட போதே, அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை தனது மகன் பள்ளிக்கூடத் திலிருந்து நீக்கப்பட்டதன் மூலம், கல்வி கற்பதற்கான உரிமை மீறப்பட்டுள்ளதாக அவரது தாயார் கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். (செ-12)

## உடல் பாதி...

யில் உள்ள 14 அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 23 ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு பேர்ராட்டத்தை ஆரம்பித்து இன்றையதினம் 13ஆவது நாளாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

14 கைதிகளினதும் உடல் நிலை மிகமோசமாக பாதிக்கப்பட்டிருந்ததால் இவர்கள் நேற்றுவரை மருத்துவ உதவியை பெற்றுவந்தனர்.

ஆனால் இனிவரும் நாட்களில் மருத்துவ உதவியை பெறமாட்டோம் என சிறைச்சாலை ஆணையாளரிடம் நேற்றையதினம் கடிதம் ஒன்றினையும் அவர்கள் கையளித்துள்ளர்.

தண்ணீரை மட்டுமே அருந்தி வரும் இவர்களில் உடல் நிலை நாளுக்கு நாள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுவருவதாக உறவினர்களுடாக அறிய முடிகிறது.

பிணையில் அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யுமாறு கோரி தமது போராட்டத்தை தொடர்ந்துள்ளதாகவும் தமக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லையெனில் சிறைக்குளளேயே தமது உயிரை மாய்க்கவுள்ளதாக கைதிகள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (செ-9)

## யாழில் நாளை...

தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ். முனியப்பர் ஆலய முன்றலில் அடையாள உண்ணாவிரத போராடடம் நடைபெறவுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், விடுதலை செய் யப்பட்ட அரசியல் கைதிகளின் குடும்பங்கள், நல் உள்ளங்கள் கொண்ட அனைவரையும் இந்த உண்ணாவிரதத்தில் பங்கு கொள்ளு மாறு மன்னார் பிரஜைகள் குழு அழைப்புவிடுத்துள்ளது.

குறித்த உண்ணாவிரத போராட்டம் தொடர்ச்சியாக வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (செ-9)

## கொழும்பை...

பிணித் தாய் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

வெலிக்கட சிறைச்சாலையிலிருந்த கைதியைப் பார்வையிட்டு விட்டு திரும்பிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சிறைச்சாலைக்கு முன்பாக குறித்த கர்ப்பிணித் தாய் மீது நேற்று பிற்பகல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 3.50 அளவில் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிறைச்சாலையிலிருந்து வெளியேறும் போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சிறைச்சாலையிலுள்ள பாதாளக் குழு உறுப்பினரின் உறவினர்களா என விசாரித்துவிட்டு பயணப் பையினைப் பறித்துள்ளனர்.

இதன்போது, பெண்கள் சத்தமிட்ட போது மோட்டார் சைக்கிளில் வருகை தந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

முன்னதாக வெலிக்கட ஒபேசேகபுரவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் பாதாள உலக கோஷ்டியைச் சோர்ந்த கம்புறுப்பிட்டிய ஹர்ஷா என்பவரே உயிரிழந்தவராவார்.

மேலும் கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு கடந்த இரண்டாம் திகதி கைதிகளை ஏற்றிச் சென்ற சிறைச்சாலை திணைக்கள வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் கைதிகள் நான்கு பேர் படுகாயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மன்னிக்க மறுக்கும் உங்...

மேலாக சிறைகளிலே அவர்கள் வாழ்வை வதைக்கிறீர்களே. மூன்றாவது தடவையாகவும் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவதை உங்கள் மனச்சாட்சி இனச்சாட்சி கடந்து அவர்கள் மீது கருணை கூராதது ஏன்?

எய்தவனே இல்லாத போது அம்பினை நோவது அதர்மயுத்தமாக தெரியவில்லையா? நீங்களும் ஒரு பெற்றோர் என்பதை மறந்து விட்டீர்களா? அல்லது இது தான் சிங்கள தேசத்து ஒவ்வொரு குடிமகனின் மனோநிலையா? மன்னிக்க மறுக்கும் உங்களால் எப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். நீங்கள் தமிழ் மக்களின் வாக்குமூலமாகதானே ஜனாதிபதியாக வந்தீர்கள் அதை ஒரு கணம சிந்தித்துப்பாருங்கள். கொள்கையற்ற தமிழ்த் தலைமைகளால் நீங்கள் எல்லோரும் எம்மில் சவாரி செய்கிறீர்கள்.

உங்களால் பொன்சேகாவிற்கும் சிராணி பண்டாரநாயக்காவிற்கும் மன்னிப்பளித்து பதவி வழங்க முடியுமென்றால் அப்பாவி தமிழ் இளைஞர்களிற்கு ஏன் மன்னிப்பு வழங்க முடியாது.

உங்களைத் தெரிவு செய்த தமிழ் மக்களிற்கு நீங்கள் இது வரை செய்தது என்ன? சிங்கள தலைமைகள் தமிழர்கள் என்றல்ல மனிதர்கள் என்றாவது எம்மை நினைக்கிறீர்களா? அதனால் தானே இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய வரலாற்றை மறந்துவிடாதீர்கள்.

சிறைக்கைதிகளை விடுவித்தீர்களா? இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தீர்களா?

காணாமல் செய்யப்பட்டோர் மற்றும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டோருக்கு இதுவரை நீங்கள் காட்டிய நீதி என்ன? முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீங்கள் பெற்றுக் கொடுத்த நியாயம் என்ன? சம்பூர் மக்களின் நிலையும் நடுவீதியிலே தான். தமிழ் மக்களும் இந்த நாட்டு பிரஜைகள் என்பதை நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு தாங்கள் எந்த நல்லெண்ண முயற்சியும் ஏற்படுத்தவில்லை. இதுதானா உங்கள் நல்லாட்சியின் விசித்திரம்?

எனவே நீங்கள் சிங்கள கடும் கோட்பாட்டாளர்களை திருப்திப்படுத்துவதிலும் உங்கள் அரசியல் எதிர் காலத்தையும் கருத்தில் கொண்டே மனசாட்சியற்றவராக இருக்கின்றீர்கள் என எங்களால் எண்ணத் தோன்றுகின்றது.

ஆகவே நீங்கள் மோடிபோல் உடையணிந்தோ மண்டேலா போல் வேடம் போடுவதிலோ எந்த அர்த்தமுமில்லை.

செயலில் காட்டுங்கள். அப்போது தான் உலகம் உங்களை திரும்பிப் பார்க்கும். எனவே உங்கள் கண்ணால் பார்த்து மனசாட்சிக்கு வேலை கொடுத்து மூன்றாவது தடவையாக உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் உள்ளவர்களை கருணை கூர்ந்து மன்னியுங்கள். காலம் உங்களை கருவேப்பிலையாக்காது கட்டுமரத்தில் ஏற்றும் என்னும் நம்பிக்கையுடன் வேண்டுகோள் விடுக்கின்றோம் என குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## சர்வதேசத்தை தலையிட விடோம்...

ரணை தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச நீதிமன்ற தலையீட்டை அனுமதிக்க மாட்டோம் எனவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் தெரிவித்துள்ள நிலையில், இது தொடர்பில் ஊடகங்கள் வினவியபோதே மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தியமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாத தடைச்சட்டம் கடந்த காலத்தில் மிகவும் அவசியமான ஒன்றாக இருந்தது. அப்போதைய சூழலில் அது நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த பிரதான காரணியாக காணப்பட்டது.

ஆனால யுத்தத்தின் பின்னர் பயஙகரவாத தடைச்சட்டம் நடைமுறையில் இருந்த போதிலும் எவரையும் அநாவசியமாக கைது செய்யும் சூழல் மிகவும் குறைவானதாகவே இருந்தது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த ஒருவருட காலத்தில் அவ்வாறான எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லை.

மக்களும் எந்தவித அச்சமும் இல்லாது சுதந்திரமாக நடமாடும் சூழலை நாம் உருவாக்கிக் கொடுத்துள்ளோம். வடக்கில் இருந்தோ கிழக்கில் இருந்தோ தமிழ் மக்கள் எந்தவித தடைகளும் சந்தேகமும் இல்லாது நாட்டில் அனைத்து பகுதிகளுக்கும் செல்லும் நிலைமை உருவாகியுள்ளது.

எனினும் ஒரு சட்டத்தை உடனடியாக மாற்றி தேவைக்கு ஏற்ப எதையுமே செய்ய முடியாது. பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் அரசாங்கம் ஸ்திரமான தீர்மானத்தை இன்னும் எடுக்கவில்லை.

எவ்வாறு இருப்பினும் அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விவாதங்களின் போது இந்த விடயங்களை ஆராய முடியும்.

ஆனால் நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் சர்வதேச மட்டத்தில் இன்றும் இருந்துவரும் அச்சுறுத்தல்களினால் பயங்கரவாத தடைச் சட்டம் அவசியமாகும்.

**கேள்வி:-** இலங்கையின் நீதிச் சேவை மற்றும் ஏனைய விடயங்களில் மாற்றத்தைக் கொண்டு வருவது தொடர்பில் அமெரிக்காவின் தொழினுட்ப வல்லுநர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு தயாராக உள்ளதாக நிஷா பிஸ்வால் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு எவ்வாறானது?

**பதில்:-** இந்த கருத்து தொடர்பில் அரசாங்கம் விசேடமாக கருத்துகளை கூற வேண்டிய அவசியம் இல்லை. எந்த சந்தர்ப்பத்திலும் எமது நீதிப் பொறிமுறையில் சர்வதேச தலையீடுகளை அனுமதிப்பதில்லை. இலங்கையில் இடம்பெற்ற இறுதியுத்தத்தில் இரு தரப்புக்களிலும் மோசமான இழபபுகளை சந்தித்தனர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டனர். ஆனால் சர்வதேசம் குற்றம் சுமத்தும் அளவுக்கு எந்தவித குற்றங்களோ அல்லது மனித உரிமை மீறல்களோ இறுதி யுத்தத்தின் போது இடம்பெறவில்லை.

எமது இராணுவத்தினால் மனிதாபிமான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறான நிலையில் எமது இராணுவத்தை போர்க் குற்றவாளிகள் என அடையாளப்படுத்துவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

எனினும் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள சந்தேகம், போர்க்குற்றம் தொடர்பிலான குற்றச்சாட்டுகளை நிவர்த்தி செய்து எமது பாதுகாப்பு தரப்பை நியாயப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உள்ளது.

ஆனால் அவ்வாறு முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளும் எமது உள்ளக பொறிமுறை மூலமாக மட்டுமே முன்னெடுக்கப்படும். சர்வதேச தலையீடுகள் இல்லாத எமது சுயாதீன விசாரணை பொறிமுறை மீது அனைவருக்கும் நம்பிக்கை உள்ளது.

ஆகவே எமது நாட்டின் நீதி செயற்பாடுகள் மற்றும் உள்ளக பொறிமுறைகளில் எந்த சந்தர்ப்பத்திலும் சர்வதேசத்தின் தலையீட்டை அனுமதிக்க மாட்டோம் என்றார் சம்பிக்க. (செ-12)

## ஜெனிவா செல்...

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சர்வதேசத்திடம் முறையிடவுள்ளனர்.

சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் மார்டின் சோன்கோனை எதிர்வரும் 31ஆம் திகதி நேரில் சந்தித்து இந்த முறைப்பாட்டை செய்வற்கு ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி தங்களுக்கு வழங்கப்படாமை, விவாதம் மற்றும் உரை நிகழ்த்துவதற்கான நேரம மட்டுப்படுத்தப்பட்டமை, தங்க்ளை ஓர் எதிர்க் கட்சியாக நோக்காமை போன்ற அரசாங்கத்திற்கு எதிரான பல்வேறு விடயங்களை முன் வைத்து அவர்கள் இந்த முறைப்பாட்டை தெரிவிக்கவுள்ளனர்.

சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவரை சந்திப்பதற்காக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, வாசுதேவ நாணயக்கார, குமார வெல்கம, உதய கம்மன்பில உளிட்ட சிலர் ஜெனிவா செல்லவுள்ளனர்.(செ-12)

## இந்தியாவை...

அந்த இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில், சீனாவில் இருந்தே அதிகளவு சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என்று அதிகாரபூர்வ தரவுகளின் மூலம் அறியமுடிந்துள்ளது.

பெப்ரவரி மாதத்தில், 32 ஆயிரத்து 186 சீனர்கள் நாட்டிற்கு வந்துள்ளனர். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.4 வீத அதிகரிப்பாகும்.

அதேவேளை பெப்ரவரியில் 26 ஆயிரத்து 559 இந்தியர்கள் நாட்டிற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியை விட 33 வீத அதிகரிப்பாகும்.

கடந்த ஜனவரியில் 28ஆயிரத்து 895 இந்தியர்களும், 26ஆயிரத்து 83 சீனர்களும் நாட்டிற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டனர்.

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களின் அடிப்படையில், சீனர்களே அதிகளவில் நாட்டிற்கு வந்துள்ளனர். 57 ஆயிரத்து 269 சீனர்கள் இந்த ஆண்டில் நாட்டிற்கு வந்துள்ளனர். இது 49 வீத அதிகரிப்பாகும்.

அதேவேளை, 55 ஆயிரத்து 454 இந்தியர்களும் இந்த ஆண்டில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது 29 வீத அதிகரிப்பாகும்.

நீண்டகாலமாகவே இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் இந்தியா முதலிடத்தை வகித்து வந்தது. தற்போது அந்த இடத்தை சீனா பிடித்துக் கொண்டுள்ளது.

இதற்கிடையே இந்த ஆண்டின் முதல் இரு மாதங்களிலும், 3 இலட்சத்து 21 ஆயிரத்து 787 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22வீத அதிகரிப்பாகும்.

2015ஆம் ஆண்டு 1.79 மில்லியன் சுற்றுலாப் பயயணிகளை ஈர்த்து, 2.86 பில்லியன் டொலரை வருமானமாகப் பெற்றிருந்தது இலங்கை. இந்த ஆண்டு 2.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இலங்கை திட்டமிட்டுள்ளது. (செ-12)

## சூளைமேடு கொ...

தாவுக்கு பலமுறை அழைப்புகள் விடுக்கப்பட்ட போதிலும், அவர் நீதிமன்றத்தில் சமுகமளித்திருக்கவில்லை. இந்தநிலையில் காணொலி உரையாடல் மூலம் கொழும்பில் இருந்து சாட்சியம் அளிக்கத் தயாராக இருப்பதாக அவரது தரப்பில் சென்னை நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை ஏற்றுக் கொண்ட சென்னை விசேட அமர்வு நீதிமன்றம் காணொலி உரையாடல் மூலம் அவரை விசாரிக்க முடிவு செய்திருந்த நிலையிலேயே அவர் நேற்று சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வாறு அவர் சாட்சியம் அளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், என்னை மூன்றாம் நிலை சாட்சியம் அளிப்பதற்காகவே அழைத்திருந்தார்கள்.

இந்தக் கொலைச் சம்பவத்துக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. குறித்த சம்பவத்தை பார்வையிடச் சென்றிருந்த நிலையிலேயே என்மீது குற்றம் சுமத்தியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இவ்வழக்கின் விசாரணைகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

## அடுத்த வார...

பக்ஷ அடுத்த வாரமளவில் கைது செய்யப்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களப் ஊடகம் ஒன்று இந்த தகவலை நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ளது.

பிரபல ரக்பீ வீரர் வசீம் தாஜுடீனின் படுகொலை தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில் இந்த விவகாரத்தில் நாமல் ராஜபக்ஷ முக்கிய சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்படவிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

தாஜுடீன்கொலையுடன் சம்பந்தப்பட்ட பல தொலைபேசி உரையாடல்களை ஆய்வு செய்திருக்கும் நிபுணர்கள், சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் சாட்சியங்கள் பலவற்றை சமர்ப்பித்திருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்படாமல் அதனை தடுப்பதற்காக சட்ட உதவிகளை பெறுவதற்கு நாமல் ராஜபக்ஷ தனது சட்டத்தரணிகள் ஊடாக முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக மற்றுமொரு தகவலும் குறிப்பிடுகின்றது. (செ-12)


புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்

தனியாகவோ குழுவாகவோ வீடுகளுக்கு வந்து பிரத்தியேகமாக கற்பிக்கப்படும். (3774)

தொடர்பு: 0779723648



நீரிழிவு நோய் தொடர்பான விழிப்பூட்டல்

மாரடைப்பு, பக்கவாதம், பார்வைஇழப்பு, உயர்இரத்த அழுத்தம், சிறுநீரக பாதிப்பு போன்ற நோய்களை ஏற்படுத்த காரணமான நீரிழிவு நோய் உங்களை பீடித்துள்ளதா? இல்லையா? என்பதை உடன் அருகே உள்ள அரச வைத்தியசாலையில் இலவசமாய் பரிசீலித்து உறுதி செய்து கொள்ளுங்கள்.

சீனி கொல்லும். Sugar Kills.

யாழ்/ நீரிழிவு அஷோசியேஷன்
J/Diabetes Association
T.P : 077 666 9055 (3759)








சண் ரவல்ஸ்

UK, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மன், சுவிஸ் போன்ற நாடுகளுக்கான Sponcer visa online மூலம் எம்மிடம் விண்ணப்பிக்கப்படும்.

மேலும் இந்தியாவிற்கான ETA Tourist எம்மிடம் சில மணி நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். சகல நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்கள் எம்மிடம் பெற்றுக் கொண்டால் Visa விண்ணப்பபடிவங்கள் இலவசமாக நிரப்பிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0772259030
077 9361427
கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (3798)



CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-3808)

CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062



அம்பிளிபயர்,ஸ்பீக்கர்ஸ் விற்பனைக்கு

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜப்பான் அமெரிக்கன் ( ஒறியினல் பைய்னியர், கென்வூட் ) ஸ்பீக்கர்ஸ் அம்பிளிபயர்கள் அத்துடன் வாகன பூபர்ஸ், DVD, TV, ரிவேஸ் கமரா என்பன எம்மிடம் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: 0772374001 (3793)

ARISTO 238, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.













வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2047 06.03.2016 தொலைபேசி : 021 222 3378
நாதம் 55



# பிரதமர் மோடியை முதல்வர் சந்தித்தால் என்ன?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. இறை வணக்கத்துடன் ஆரம்பமாகிய மாநாட்டில் சகல உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

**பண்டிதர்:** ஈழத்தின் தலை சிறந்த எழுத்தாளர் கலாநிதி கந்தையா குணராசா செங்கைஆழியானுக்கு முதலில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம்.

(பண்டிதர் இப்படி அறிவித்ததும் மாநாட்டில் இருந்த அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்)

**பண்டிதர்:** ஈழத்து எழுத்துத் துறையில் செங்கை ஆழியான் ஒரு பெரும் இமயம். அவருடைய இழப்பு தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பேரிழப்பு...

இவ்வாறாக பண்டிதரின் அனுதாப உரை நீண்டு நிறைவு பெற்றது.

**கங்காணி:** பண்டிதர் ஐயா எங்கட தமிழ்ச்சமூகம் ஒரு காலத்தில பண்பாட்டில எவ்வளவு ஓங்கி இருந்தது. இப்ப பார்த்தால் எங்கும் ஒரே குழப்பம். பெண் பிள்ளைகள் தனியாகப் போவதென்பது முடியாத காரியமாயிற்று. அன்றைக்கும் சித்தன்கேணிப் பகுதியில உள்ள ஒரு கடையில இரண்டு சின்னப் பெண் பிள்ளைகள் நெற்றிப் பொட்டு வாங்கப் போனதுகளாம். அந்தக் கடைக்காரன் அந்தப் பிள்ளைகளோட சேட்டை விட்டதாகக் கேள்வி.

**மூப்பர்:** நாசமறுந்ததுகளால எங்கட சமூகம் கெட்டுப் போய்ச்சுது. கங்காணியார் நான் சொல்லக்கூடியது பெற்றோர்கள் தான் தங்கட பிள்ளைகள் தொடர்பில கண்ணும் கருத்துமாக இருக்கவேணும். இல்லையெண்டால் எங்கட மண்ணில நடக்கிற விரசங்களை ஒருக்காலும் திருத்த முடியாது.

**விதானையார்:** முன்பெல்லாம் உந்த அநியாயங்கள் நடக்கல்ல. இப்ப நடக்குது எண்டால் அதுக்குப் பின்புலமாக இருக்கிறது போதைப்பொருள் பாவனை என்பதை நாங்கள் மறந்துவிடக்கூடாது.

**வாத்தியார்:** அதெண்டால் உண்மைதான். போதைப்பொருள் பாவனையை நாங்கள் இல்லாதொழிக்காவிட்டால் இந்த மண்ணில ஒருத்தரும் வாழமுடியாத சூழல் ஏற்படும் என்பதுதான் உண்மை.



**பண்டிதர்:** தமிழர் தாயகத்தில இப்படியொரு சூழ்நிலை வரும் எண்டு நாங்கள் ஆரும் நினைக்க வில்லை. ஏதோவொரு வகையில் திட்டமிட்ட சதிகாரக்கூட்டம் தமிழற்ற வாழ்வை நாசமாக்குகிறது எண்டு முடிவு செய்து போட்டுது. அதுக்கு எங்கட பிள்ளையளும் இடம்கொடுக்கிறாங்கள்.

எங்கட அரசியல் தலைமைகள் தங்கட குடும்பங்கள வெளிநாடுகளில இருத்திப் போட்டு இஞ்ச இருந்து சுகவாழ்வு வாழுகினம். தமிழ்மண்ணில என்ன நடக்குது என்பது பற்றி ஒரு மண்ணும் தெரியாது. எங்கட தமிழ் அரசியல் தலைமை சரியாக இருந்தா இந்தப் போதைவஸ்துப் பாவனையை உடன கட்டுப்படுத்தலாம்.

**வாத்தியார்:** தமிழ் மக்களின்ர பிரச்சினை பற்றிக் கதைக்கிறதுக்கு ஒருத்தரும் இல்லை.

தங்கட தங்கட பதவிகளைக் காப்பாற்றுவது, அரசியல் தலைமையைக் கைப்பற்றுவது, சுமுகமாக இயங்கவிடாமல் சபையைக் குழப்புவது இது தானே இஞ்ச நடக்குது.

**விதானையார்:** இது மட்டுமல்ல சைவசமயத்தில இருந்து அந்த நேரம் மதம் மாறினவியள் சிலர் ஒரு கூட்டமாக இயங்கிக் கொண்டு சமய மோதலை ஏற்படுத்தச்சதித்திட்டம் தீட்டுறதாகக் கேள்வி.

**கங்காணி:** என்ன? விதானையார் சொல்லுறியள். சமய வாதத்தை தூண்டுகிற முயற்சி நடக்குதோ.

**விதானையார்:** ஓமோம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில துணைவேந்தர் பதவிக்குப் போட்டியிட்ட பேரா சிரியர் ஒருவர் இந்து சமயத்தைத் தாக்கி ரெலிகிராப்பில் கடுமையாக எழுதியுள்ளாராம். முந்தியும் சைவ சமயத்தைத் தாக்கி நிறைய எழுதினதாகக் கேள்வி.

**பண்டிதர்:** பேராசிரியர்கள் பெருந்தன்மையுள்ள மனிதர்களாக நடக்கவேணும். அதிலும் எல்லா சமயங்களையும் மதிக்கிற பக்குவம் இருக்கிறதுதான் நல்லது. ஒரு சமயத்தைத் தாக்கி இன்னொரு சமயத்தை உயர்த்தியதால அதைச்செய்யிறவர்களின்ர மனம் வக்கிரம் அடையுமே தவிர சமயங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

**வாத்தியார்:** உண்மைதான் விதானையார் இருந்தும் ஒரு பேராசிரியர் ஒரு சமயத்தை தாக்கி எழுதுகிறார் என்றால் அவரிட்ட எவ்வளவு மன வக்கிரம் இருக்குது என்பது தெரியுதுதானே.

அதேநேரம் சில ஊடகங்கள் இப்படியான மதவாதக் கருத்துக்களை பிரசுரிப்பது இன்னும் வேதனைக்குரியது.

**விதானையார்:** வாத்தியார் காகம் திட்டி மாடு சாகிறது கிடையாது. இந்த உலகத்தில வாழ்ந்தவர்கள் எத்தனைகோடி; வாழுகிறவர்கள் எத்தனைகோடி; வாழப்போகிறவர்கள் எத்தனை கோடி. கடவுள் தந்த நல்ல வாழ்வை நாங்கள் நாசமாக்காமல் – இன, மத மொழியால் பேதமடையாமல் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றவாறு நடப்பதுதான் எல்லாருக்கும் நல்லது.

**மூப்பர்:** சம்பந்தப்பட்ட பேராசிரியர் வடக்கு முதலமைச்சரையும் தாக்கி எழுதியுள்ளதாகக் கேள்வி.

**பண்டிதர்:** மூப்பர் உங்களுக்குத் தெரியும் தானே. சந்திரன் ஒருபோதும் குரைப்பதில்லை என்று. ஆகையால யார் யாரைப் பற்றி தூற்றி எழுதினாலும் எழுதுகிறவர்கள்தான் மனக்கஷ்டப்படுவினம்.

**கங்காணி:** அதுசரி பண்டிதர் பிறைவேற் ஆஸ்பத்திரிகளில் வைத்திய நிபுணர்களுக்கு காசு கட்டி மருந்தெடுக்கிற முறை இருக்குத்தானே! எனினும் இந்த நடைமுறையில ஒரு நோயாளி ஒருக்கா காசுகட்டி காட்டினால் மருத்துவர் ஏதாவது இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஈ.சி.ஜி. இப்படி ஏதாவது பரிசோதனை செய்யச் சொல்லி எழுதினால் அந்தப் பரிசோதனைகளை முடித்துக்கொண்டு எடுத்த அந்த ரிப்போட்டை மருத்துவரிட்ட இலவசமாக காட்டுவதுதான் வழமை.

இருந்தும் சில தனியார் வைத்தியசாலைகளில ரிப்போர்ட் காட்டுறதுக்கும் ஒரு தொகைப் பணம் அறவிடுகிறதாகக் கேள்வி.

**விதானையார்:** இது கூடாது பாருங்கோ. பொருள் ஈட்டுவதிலும் அறம் இருக்க வேணும். அப்பதான் அது எங்களுக்குச் சுவரும். எப்படியும் எந்தளவும் காசு வசூலிக்கலாம் எண்டால் எல்லாம் அம்போ தான்.

ஆகையால ரிப்போர்ட் காட்டுறதுக்கும் பணம் வசூலிக்கிறதை எந்தத் தனியார் வைத்தியசாலைகளாவது மேற்கொண்டால், அதைக் கைவிட வேணும் எண்டு இந்த ஆலடி மாநாட்டில தீர்மானம் எடுக்கிறம்.

(ஆலடி மாநாட்டில் விதானையாரின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டபோது, அதற்குத் தானும் ஆதரவு தெரிவிப்பது போல, ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்)

ஆதித்தன்

## இனப்பிரச்சினைக்கு தீர்வு

# பிரதமர் நரேந்திரமோடியை முதல்வர் விக்கி சந்திக்கவேண்டும்



குருஷேத்திரம்

2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற இரா.சம்பந்தரின் கனவு பலிக்காதென்பது உறுதியாகிவிட்டது.

ஒற்றையாட்சியின் கீழ் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இலங்கை அரசுடன் உடன்பட்டிருந்தது.

இந்த உடன்பாடு எழுதா யாப்பின் அடிப்படையில் உருவானதாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பாராளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமநாயக்க உள்ளிட்டவர்கள் இந்த உடன்பாட்டில் உடன்பட்டிருந்தனர்.

எனினும் விடுதலைப் புலிகள் இல்லாதவிடத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய அவசியம் ஏன்? என்ற கேள்வி அரச தரப்பிடம் எழுந்து நிற்க, ஒற்றையாட்சியின் கீழ் பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் என்பவற்றைத் தமிழர்களுக்கு வழங்குவதற்கும் அரசு மறுப்புத் தெரிவிக்க கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரின் கனவுக்கோட்டை அடியோடு தகர்ந்து போனது.

இப்போது என்ன செய்வது. நாட்டாமை தீர்ப்பை மாற்றிச் சொல் என்பது போல ஒற்றையாட்சி என்ற உடன்பாட்டில் இருந்து விலகுவது தான் ஒரேவழி என்று சம்பந்தர் முடிவெடுத்தார்.

2016 ஆம் ஆண்டில் தீர்வு; எங்களை நம்புங்கள்; எங்களுக்கு இந்த முறையும் சந்தர்ப்பம் தாருங்கள் என்று கடந்த பொதுத் தேர்தலில் பிரசாரம் செய்த சம்பந்தர் 2016 ஆம் ஆண்டிற்குள் தீர்வு காணப்படவில்லையென்றால் தமிழ் மக்களின் முகத்தில் முழிக்கவே முடியாது.

சம்பந்தர் மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரும் மக்கள் மத்தியில் செல்லமுடியாது.

இந்நிலையில் சம்பந்தர் எடுத்த தீர்மானம் ஒற்றையாட்சியிலிருந்து விலகி, சமஷ்டி முறையிலான வடக்கு கிழக்கு இணைந்த தமிழ்த் தேசியம் என்பதாகும்.

அட இப்படியொரு தீர்மானத்தை சம்பந்தர் எடுத்தாரா? என்று அதிசயமாயினும் 2016 ஆம் ஆண்டில் தீர்வு காணப்படும் என்ற சம்பந்தரின் வாக்குப் பொய்த்துப்போகும்போது சமஷ்டி வடக்கு கிழக்கு இணைவு- தமிழ்த் தேசியம் என்பதால்தான் இலங்கை அரசு அதைத் தரவில்லை எனக் கூறித் தப்பிக் கொள்ளலாமல்லவா.

எது எப்படியாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அண்மையில் திருகோணமலையில் தனது இல்லத்தில் வைத்து கருத்துரைக்கையில், தேடி வந்த அமைச்சர் பதவிகளை விட்டுக் கொடுத்தது தமிழ் மக்களுக்காகவே என்று கடுப்போடு கூறியமை அவரின் பதவி ஆசையைபட்டவர்த்தனமாக்கியது.

தமிழ் மக்கள் வாக்களித்ததாலேயே தாம் பதவியைப் பெற்றது என்பதை மறந்து அமைச்சர் பதவி தங்களைத் தேடி வந்ததாக கதை அளப்பது தமிழ் மக்களின் உரிமைவிடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் உறுதியாக இருக்கமாட்டாது என்பதை உறுதி செய்துள்ளது.


இந்த வகையில்தான் தமிழ்மக்களின் அடுத்த கட்ட நகர்வு என்ன? என்ற கேள்வி எழுகிறது. தமிழ் அரசியல் தலைமையைப் பொறுத்தவரை தலைமைக்குள் இருக்கக்கூடிய ஒரு சிலரே கூட்டமைப்பின் அனைத்து முடிவுகளையும் தீர்மானிக்கின்றனர்.

ஏனையவர்கள் பதவியை மட்டும் வைத்திருப்பது தெரிகிறது. கூட்டமைப்பில் முடிவை எடுக்கின்றவர்கள் அரசுக்குச் சார்பானவர்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

நாவற்குழியில் இருக்கக் கூடிய அரச காணியை சிங்கள மக்களுக்குக் கொடுத்தால் என்ன என்று கேட்கக் கூடியவர்களின் கைகளிலேயே இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அகப்பட்டுக் கிடக்கிறது.

இதன்காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு விடிவைப் பெற்றுத்தரும் என்று யாரேனும் நம்பினால் அதுவே மிகப் பெரும் மடமைத்தனமாக இருக்கும்.

எனவே தமிழ் மக்கள் தங்களின் உரிமை என்ற விடயத்தில் தமிழ் அரசியல் தலைமை என்ற எல்லை கடந்து செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர். இந்த விடயத்தில் தமிழ்மக்களுக்கு உதவக்கூடிய ஒரு சக்தியாக வடக்கு மாகாண அரசு மாற வேண்டும். அதிலும் குறிப்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மாகாண அரசின் பலத்தோடு இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தலையிடவேண்டும். தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசு ஒருபோதும் முன்வைக்காது என்பது



தெட்டத்தெளிவு.

நல்லாட்சியிலும் இது நடக்கப்போவதில்லை. இந்நிலையில் சர்வதேசத்தின் அழுத்தத்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியமாகும். விடுதலைப்புலிகள் இல்லாத ஒரு சூழ்நிலையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி இலங்கை அரசு இம்மியும் கவனம் செலுத்தாது.

இருந்தும் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த இன அழிப்புக் குறித்த விசாரணைகள் மட்டுமே தமிழ் மக்களுக்கு விடிவைப் பெற்றுத்தரும் என்பதால் சர்வதேச போர்க்குற்ற விசாரணை ஆரம்பிக்கப் பட வேண்டும் என்ற கோஷங்கள் மீளவும் வலுப்பெற வேண்டும்.

சர்வதேச அழுத்தம் இல்லாவிட்டால் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒருபோதும் சாத்தியமாகாது என்பது தெட்டத்தெளிவு என்பதால் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான மாகாண அரசு தமிழ்மக்களின் நலன் கருதிச் செயற்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

இதற்கு மேலாக இனப் பிரச்சினைத் தீர்வு என்ற விடயத்தில் அண்டை நாடான இந்தியாவின் வகிபங்கு என்பது முக்கியமானது. இந்தியா விரும்பாத ஒன்றை அமெரிக்காவும் விரும்பாதென்பதே யதார்த்தம். ஆகையால் இந்தியாவை சிக்கனப்பிடித்துக்கொள்வதுதான் ஒரே வழி.

இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் அண்மையில் கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்தபோது இந்தியாவை நம்புகிறீர்களா? எனத் தமிழ்த் தலைமையிடம் ஒரு கேள்வி கேட்டார்.

கேள்வியைக் கேட்ட அவரே பதிலையும் தந்தார். இந்தியாவை நம்புங்கள். இந்தியா நிச்சயம் உங்களைக் கைவிடாது என்றார் பிரதமர் நரேந்திரமோடி.

ஆகையால் பிரதமர் கூறிய வார்த்தையில் நம்பிக்கை கொண்டு வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திக்க வேண்டும்.

காலம் கடந்தால் தமிழர்களுக்கு எதுவும் கிடையாது என்பதால் வடக்கின் முதலமைச்சர் இந்தியப் பிரதமரைச் சந்திப்பது காலத்தின் உடனடித் தேவையாகும்.

விதுரன்




ஆலங்குடி என்ற ஊரில் வேட்டைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் எல்லா விலங்குகளைப் போலவும் ஓசை எழுப்பும் ஆற்றல் வாய்ந்தவன்.

அந்த ஊரை அடுத்த அடர்ந்த காட்டில் பலவகை யான கொடிய விலங்கு கள் வாழ்ந்து வந்தன. அவற்றின் இயல்பை நன்கு அறிந்திருந்தான் அவன்.

# சிங்கம் வருது

ஒருநாள்-

ஒரு முனிவர் அந்த பக்கம் வந்தார். அவரையும் சிங்கத்தைப் போல் உறுமி பயந்து ஓட வைத்தான். அப்போது முனிவர், "மகனே! உனக்கு கிடைத்திருக்கும் அரிய திறமையை நல்ல காரியத்துக்கு பயன்படுத்து இல்லையென்றால் ஆபத்து நேரிடும்," என்றார்.



"போ... போ... நீ எனக்கு புத்தி சொல்லாதே," என்று கிண்டல் செய்தான்.

இப்படி மனிதர்களை ஓடவிட்டு, ஏமாற்றி சிரித்து மகிழ்வதில் இன்பம் கண்டான்.

ஒருநாள், காட்டில் மானைப் போல் குரல் எழுப்பிக் கொண்டிருந்தான். உண்மையான மான்தான் அங்கு கத்துகிறது என்று நினைத்து, அங்கு வரும் மான்களைக் கொல்ல, கையில் அம்புகளை வைத்துக் கொண்டு தயாராக இருந்தான்.

"தனக்கு உணவாகும் மான் இங்கு எங்கோ கத்துகிறது. நம் பசிக்கு இன்று நல்ல விருந்து" என்ற எண்ணத்தில் மானின் குரல் வந்த திசையை நோக்கி ஓநாய் ஒன்று ஓடி வந்தது.

மானின் வருகைக்காக காத்திருந்த வேடன், ஓநாயைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான்.

"இந்த ஓநாயிடமிருந்து எப்படித் தப்பிக்கப் போகிறோம்" என்று நினைத்த அவன், உடனே தன் குரலைப் புலி போல மாற்றிக் கத்தினான். புலியின் உறுமல் கேட்ட ஓநாய் அஞ்சி அங்கிருந்து ஓடிவிட்டது.

அந்த வழியாக வந்த புலி ஒன்று இந்த சத்தத்தைக் கேட்டு, "ஆ! இந்தக் காட்டில் இன்னொரு புலி இருப்பது நமக்குத் தெரியாமல் போயிற்றே!" என்று மகிழ்ச்சியுடன்குரல்வந்த திசையை நோக்கி நடந்தது.

புலி வருவதைக் கண்ட வேடன், "ஓநாயிடம் இருந்து தப்பித்தோம் என்று நினைத்தால் கொடிய விலங்காகிய புலி வருகிறதே என்ன செய்வது" என்று சிந்தித்தான்.

தன் குரலை மாற்றிச் சிங்கம் போல கர்ஜனை செய்யத் தொடங்கினான்.

குரல் கேட்டதுதான் தாமதம். வேடனை நோக்கி கொண்டிருந்த புலி, "தப்பித்தோம், பிழைத்தோம்" என்று ஓட்டம் பிடிக்கத் தொடங்கியது. இதைப் பார்த்த அவன் மகிழ்ச்சி அடைந்தான்.

ஆனால், வேடனின் மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை.


"நான் இருக்கும் காட்டில் இன்னொரு சிங்கத்தின் குரலா?" என்று கோபத்தில் அங்கே பாய்ந்து வந்தது சிங்கம்.

அதைப் பார்த்ததும், "எப்படி குரல் எழுப்பி தப்பிப்பது?" என்று தெரியாமல் திகைத்து நின்றான் அவன்.


வேறொரு சிங்கத்தை எதிர்பார்த்து வந்த சிங்கம் வேடனைக் கண்டதும், அவன் மீது கோபத்துடன் பாய்ந்து அவனை கொன்று தின்றது.


மற்றவர்களை ஏமாற்றி மகிழ்ந்து இன்பம் கண்ட வேடன், கடைசியில், சிங்கத்திற்கு இரையாகி போனான்.

**படத்தில் குழந்தை தன் அம்மாவிடம் செல்ல வேண்டும். கொஞ்சம் வழிகாட்டி உதவுங்கள் ப்ளீஸ்....**



**இரண்டு படத்திற்கும் உள்ள ஏதேனும் நான்கு வித்தியாசங்களை வட்டமிட்டுக் காட்டுங்கள் பார்க்கலாம்**







## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3.2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



'நிலா நீ வானம் காற்று மழை நீ கவிதை ஊற்று' என்ற பாடல் ...

ஊடகங்களில் வரும் செய்திகள் ஒன்றுக்கொன்று முரணாக ...

தமிழ் சினிமாவில் சூர்யாவுக்கு இடம் என்ன?

**விஜிதா — மயிலிட்டி**

**ஆண்கள் சீதனம் கொடுக்கும் நடைமுறை வந்தால் எப்படி இருக்கும்?**

அடங்கிவிடுவார்கள், வீட்டுக்குள் முடங்கிவிடுவார்கள். ஆண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்போம் என்ற அமைப்பைத் தொடங்கிவிடுவார்கள்.

**டெனிசன் — வளலாய்**

**தங்களின் முதல் காதல் பற்றிச் சொல்லுங்கள்?**

இப்படி இடக்கு முடக்கான கேள்விகளுக்கு பதில் எழுதி இரண்டு மூன்று தரம் வீட்டு வாசலில் படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. பிளீஸ் ஐ ஆம் பாவம்.

**கணேஸ் — அல்வாய்**

**இரண்டு திருமணம் செய்தவர்களைத்தான் இந்த உலகம் மதிக்கிறது?**

வடிவேலுவின் ஸ்ரைலில் சொல்லுவதென்றால் இருக்கிறவன் வெச்சிக்கிறான் இல்லாதவன் வரைஞ்சுக்கிறான் கடுப்பேத்துறார் மைலோட்.

**வேல்நந்தன் — புலோலி**

**வெளிநாட்டவர் எல்லாம் இலங்கைக்கு வந்து சென்றதும் மாறிப் போகக் காரணம்?**

பொய்யையும் உண்மையாக்கும் சக்தியும் வல்லமையும் பொருந்தியவர்கள் அங்கு இருக்கிறார்கள்.

ஆனால் இங்கோ உண்மையைக் கூட எடுத்துரைக்காமல் எம் பாரம்பரிய வேட்டி சட்டையை கூட மறந்து கோட் சூட்டுடன் போட்டோவுக்கு போஸ் கொடுப்பதுடன் முடிந்து விடுகிறது எம் புத்திஜீவிகளின் வேலை.

**சிலம்பரசி — பிரமந்தனாறு**

**பள்ளி வயது காதல் பற்றி?**

சொல்லி வருவதுமில்லை சொல்லிவிட்டுச் செல்வதுமில்லை

**சூரியகாந்தி — யாழ்ப்பாணம்**

**பழிவாங்குவது சரியா தப்பா?**

திரைப்படங்களுக்கு மட்டும் சரி

**லயன்சன் — வளலாய்**

**காதலில் ஆர்வம் கொள்வது ஆண்களா பெண்களா?**

ஆண்களின் காதல் வாய்க்குள் சப்பிக் கொண்டிருக்கும் பபிள்க்கம் போல ஒட்டவும் மாட்டாது துப்புவதும் இலகு. பெண்களின் காதல் சுவரில் ஒட்டிய பபிள்கம் போல ஒட்டி விட்டால் பிரிப்பது ரம்ப கஷ்டம்.

**நீக்சன் — அலம்பில்**

**தெறிக்க விடலாமா?**

தம்பி இன்னும் திருமணம் செய்யவில்லை போல. வெங்காயம் மிளகாயோட கடுகு சேர்த்து பொரிக்கும் போது தெரியும் தெறிக்க விடலாமாவின் அர்த்தம்.

**கபீஸ் — கறுக்காய்தீவு**

**காதலில் தோற்பதற்கான காரணம்?**

சரியாக அத்திபாரம் கட்டாமல் யாரும் வீடு கட்டுவார்களா? ஆனால் அத்திபாரமே இல்லாமல் காதலித்தால் அந்த காதல் என்ற வீடு நிலையாய் நிற்குமா... சிலர் வெல்ல வேண்டும் என ஓடுவார்கள் சிலர் சும்மா ஓடிப் பார்ப்போம் என ஓடுவார்கள், சிலர் தோற்க வேண்டும் என்றே ஓடுவார்கள்.

**கஜன் — பரந்தன்**

**தமிழ் சினிமாவில் சூர்யாவுக்கு இடம் என்ன?**

எம்.ஜீ.ஆர். – சிவாஜி ,ரஜினி – கமல், விஜய் – அஜித், விக்ரம் – சூர்யா




**ரம்மியா — கொக்குவில்**

**'நிலா நீ வானம் காற்று மழை நீ கவிதை ஊற்று' என்ற பாடல் இடம்பெற்ற திரைப் படம் என்ன?**

சேரன், பத்மப்பிரியா நடித்த பொக்கிஷம் திரைப்படத்தில் பிரசன்னா மற்றும் மகதி பாடிய பாடலுக்கு சபேஸ் முரளி இசையமைத் திருந்தார்.

**குயினா — சுன்னாகம்**

**உண்மையான காதலும் தோற்குமா?**

அது போட்டி போடுபவர்களைப் பொறுத்தது.

**சாளின் — மல்லாவி**

**அழகில் சிறந்தவர்கள் ஆண்களா, பெண்களா?**

ஆணிடம் கேட்டால் பெண் என்றும் பெண்ணிடம் கேட்டால் ஆணென்றும் கூறுவர். எதிர்பால் ஈர்ப்பு தானே அதிகம்.

**காண்டீபன் — மானிப்பாய்**

**ஊடகங்களில் வரும் செய்திகள் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றதே?**

ஊடகம் என்பதை ஒன்றுக்கு நான்கு தடவை மனதுக்குள் சொல்லிப் பாருங்கள் புரியும்.

**சி.சுகிர்தமலர் — உரும்பிராய்**

**தேசியம் என்பது கலப்பா அல்லது தனித்துவமா?**

உண்டதைக் கக்கியும் கக்கியதை உண்டும் புதிய சகாப்தம் படைப்போம் என கத்திக் கொண்டிருப்பவர்களைக் கோட்டால்தான் தெரியும்.

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

**ஓரக் கண்ணால் பார்க்கும் பெண் நல்லவளா?**

அச்சம், மடம் ,நாணம், பயிர்ப்பு என்கின்ற அத்தனையும் அந்த ஒற்றைப் பார்வையில் தானே அடங்குகிறது. அப்படி பார்க்காவிட்டால் அது பெண்மையல்ல.

**நிர்மலராஜ் — சுழிபுரம்**

**கொஞ்ச நாட்களாக சில பேர் என்னைப் பார்த்து சூரியா சூரியா என்று கூப்பிடுகிறார்களே என்ன காரணம்?**

தம்பி நான் இப்ப கிட்டடியில்தான் தெல்லிப் பழைப் பக்கம் போயிட்டு வந்தன்டா ராசா

**அச்சுதன் — மன்னார்**

**காதலிக்க முடியுமா**


காதல் என்பது அன்பு. அதை யாரும் யார் மீதும் செலுத்தலாம்.

### அன்பு வாசகர்களே!

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

குறுந்தகவல் (SMS) 021 567 1532

# கவிதைக் கலசம்



### சொற்பவேளை சுகபோகம்

அதிகார பீடத்திலே
அமர்ந்து கொண்டு,
அப்பாவிகள்,
அபலை ஜீவன்கள்,
அத்தனை பேரையும்,
கொத்துக் கொத்தாக
செத்து மடியச் செய்து,
எஞ்சியோரை
சிதைத்தும் வதைத்தும்
சின்னாபின்னப்படுத்திய
புத்தரக்கர்கள் எல்லாம்
ஓர் நாள்
ஆழிப்பேரலையில் அகப்பட்ட
அற்பமான வெறும்
காகிதக் கப்பல்களாய்
இங்கு ஆகிடுவார்
அனைத்தையும் விழுங்கி
ஏப்பம் விட்ட
அனகொண்டாக்கள்
அனைத்தையும் இழந்து
அணுகுண்டின் அதிர்வின் முன்னே
சிக்கிச் சீரழிந்து
நிர்க்கதியாய் இங்கு
நிற்கப்போவது
உண்மையிலும் உண்மை

**வாணியழகன்**
**முரசுமோட்டை**

### மழையே

வசந்தத்தின் வரவாக மண்ணுக்கு
வரும் மழையே!
எனக்கு மட்டும் உனது
வரவினைக் கண்டால் இதயத்தில்
தனி மகிழ்ச்சி ஏற்படுகிறதே!
சூரியனை மறைத்துக்கொண்டும்
சோ எனப் பெய்து கொண்டு
உன் ஆசையெல்லாம் எம்மிடம்
தீர்த்து விடுகின்றாய்
பிசுபிசு தூறல்கள் தூறி
மனதினைக் கொள்ளையிட்டு
அநேகநாட்களாக் உன் வரவை
நோக்கி காத்திருப்பவர்களுக்கு
வரவினை அளித்துக்கொண்டே
எங்கள் நிலத்திற்கு வருகிறாய்-நீ
இல்லை என்றால் பூமியில்
யார்தான் உயிர் வாழ்வார்கள்

**முல்லை அன்ரன்**

### காலம் ஒன்று மீண்டு வரும்

அடைக்கலம் குருவி ஒண்ணு
அந்தரத்தில் கதறுதடி
அடைவைத்த முட்டை ஒண்ணு
பொரித்ததென்று கேருதடி
பகை திரட்டும் பூதமென்று
பயமும் காட்டுதடி
கடைவிலக்க காலநேரம்
கனியவேணுமெண்ணு சொல்லுதடி
கோர்த்து வைச்ச ஆரமெல்லாம்
கொடுமையால் முடிந்ததடி-தமிழர்
வார்த்து வைச்ச வடிவமெல்லாம்
வாய்தவறிப் பேசுதடி
தட்டிக்கேட்க ஆளுமின்றி
தவிக்குது நீதியடி
ஈட்டிமுனை மழுங்கி
இப்போ இணக்கமும் ஆச்சுதடி
எட்டாப்பழம் புளிக்கும் எண்ணு
எதிர்வுகூறும் காலம் வரும்
காத்திருப்போம் காத்திருப்போம்
காலம் ஒன்று மீண்டு வரும்

**வேம்பன்**
**கிளிநொச்சி**

தோளில் தடியும்
முகத்தில் புன்முறுவலும்
ஆவலை நெஞ்சில் சுமந்தபடி
அகண்ட காலடிகளுடன்
சிறுவன் ஒருத்தன்
ஊருக்குப் போகிறேன்
ஊருக்குப் போகிறேன்
எனக்கூறியபடி
ஓடியோடிச் செல்கிறான்
அடுத்த எல்லையில்
உயர் பாதுகாப்பு வலயம்
நெடுத்த மனத்துடன்
திரும்புகிறான்
கனவுகள் பொடியாகிப் போகிட...

மாவை. நா.கஜேந்திரன்

### தந்தி

உலகமே உற்று நோக்க- என்
உயிர் முழுதும் உனில்தாக்க- என்
உதிரத்தில் உயிலுக்கு மையெடுத்து
நிலவை நின்றிறுத்தி மெய் தொடுத்து
மேகத்தை அதற்கு மெல்ல கொடுத்து
மேன்மையான கவிகளில் உன்னை வடித்து
வால்வெள்ளியில் வார்த்தை பல கொடுத்து
என் வாழ்வு நீயென... நம்
காதல் என்றும் வாழ்கவென...
கார்முகிலிலே இக்காகிதம் அனுப்புகிறேன்
கலங்காமல் காத்திரு கண்ணே
என்றும் உன் அன்பு கணவனுக்காய்
பெண்ணே...

**ஞா.கட்டைக்கவிதன்**
**நெடுந்தீவு**

# மௌனத்தின் தேடல்- 291



### கடவுளின் வரம்

எழிலின் உருவமாய்
ஓரிரு வருடங்களில்
தனிமைக்கு உறவாக
அன்னை மடியில்
நீ வந்த நொடி
எழுதிவிட்டேன்-என்
இதயப்புத்தகத்தில்
வாழ்க்கையில் கடவுள்
தந்த அரும்பெரும் வரம்
என் அன்புத்
தங்கையே நீ என்று...

ச.அகல்யா
சண்டிலிப்பாய்

### அன்னை இல்லை

அமுதூட்டிய அன்னை இல்லை
அரவணைத்த தந்தையும் இல்லை
தோள் சுமக்கும் அண்ணன் தலைசீவி
சோறூட்டி பள்ளிக்கு செல்ல தயாராகிறான்

சந்நிதி
கதிர்ஷன்

### அம்மா போல

இச்சிறுமி உறங்க
ஒளிகொடுத்தது
தெருவிளக்கு
இதே சிறுமி வாழ
வழிகாட்டியவன்
இச்சிறுமியின் அண்ணனே
அம்மா போலிருந்து

ம.சாருஜன்
தரம் 09

### என் தங்கை ஓர் தங்கம்

என் தங்கமே!
உன்னை அலங்கரிக்க
அன்னை இல்லையென்றால் என்ன
அண்ணன் நான் இருக்கேன்
நானும் ஒரு சிற்பிதான்
உன்னை சிலையாய் செதுக்குவதில்

பா.சத்யா
அல்வாய் வடக்கு

### பாசம்

உங்கள் பாசம்
எங்கள் கல்வி
என்று ஏனைய
சிறுவர்கள்
கற்றுக்கொள்ளட்டும்
நீங்களும் உங்களுக்குள்
மட்டுமல்ல உலகிற்கே
அன்பு செய்யுங்கள்
உலகம் உங்களுடையது

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### பாசமான பாதுகாப்பு

உச்சி வகிடெடுக்கும்
உயர்வான அண்ணனாரே
தங்கமான தங்காவை
தனித்தும் நீ காத்திடப்பா
மேதினியில் மேடு பள்ளம்
மேவியே நடந்திடுவீர்
பாவிகள் பாதகர்கள்
பண்பற்று நடந்திடுவர்
பாதுகாப்பு வேண்டுமப்பா
பாலகர்கள் உங்களுக்கு

அணிஞ்சில் புவப்பாலன்

### பாசக்கீற்று

உறவுகள் எல்லாம்
மறைந்தன
தனிமை இருள்
சகோதர பாலகர்களை
கௌவியது!
பாசக்கீற்று உதித்தது
தலைவாரிச்
சொரிந்தது பரிவு
தெரிவு ஒன்று கிட்டியது
இனி இவர்களுக்கு எதிர்காலம்
எட்டாத் தூரத்தில் இல்லையென்று

அராலியூர்
சோ.சிவகுமாரன்

### சகோதர பாசம்

பெற்றாரை இழந்து
மாற்றாரின் துணையுமின்றி
சோற்றுக்கும் வழியின்றித்
தன் தங்கையைப்
பாசத்தோடு
அரவணைத்துச் சட்டைபோட்டு
கலைந்திருக்கும் தலைமுடியையும்
வாரி அழகுபார்க்கிறான் அண்ணன்
சகோதர பாசம் அவர்களை என்றும்
சந்தோசமாய் வாழவைக்கும்

துரை
தென்மட்டுவில்

### கவலை விடு

தலைவாரக்கூட தாயில்லை
தங்கை உனக்கு -சிலருக்கு
தாயிருந்தும் தலைவாரும்
பாக்கியம் கிட்டவில்லை
பரவாயில்லை அண்ணன் உள்ளான்
உன் தாய் போல்


பத்மகாந்தன்
வரணி

### அநாதை

கருவறையில் சுமந்தவள்- எனை
தெருவினில் விட்டுச் சென்ற பின்
ஏதுமறியா பிஞ்சு எனை
அரவணைத்து தலைவாரி விடுபவனே
நீயும் எனைப்போல் அநாதையா???

திக்கம் மதி

# மௌனத்தின் தேடல் -292



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 09.03.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



# வேர்க்கடலை

## ஏழைகளின் அசைவ உணவு

நிராகரிப்புகளை அலட்சியப் படுத்திவிட்டு நம்மோடு இயைந்தும் சினந்தும் ஆயிரமாயிரம் வளங்களை அள்ளிக் கொடுக்கிறது இயற்கை.

வெளிநாட்டு வியாபார தந்திரததால் "உப்பு இருக்கா...கரி இருக்கா...இதைச்சாப்பிடாதீர்கள்... அதைச் சாப்பிடாதீர்கள்!" என மிரட்டும் விளம்பரங்களோடு, கலர் கலர் பேக்கிங்குகளாக களமிறக்கப்படுகின்றன விதவிதமான நொறுக்குத் தீனிகளும் இன்ன பிற உணவுகளும்...!

அப்படி தவறான புரிதலோடு, நம் மண்ணில் பல்வேறு இயற்கை உணவுகள் கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன. அதில் ஒரு வகைதான் நிலக்கடலை.

வேர்க்கடலை, நிலக்கடலை, கச்சான் என்ற பெயர்களில் அழைககப்படும் இவை கொட்டை வகையைச் (Nuts) சேர்ந்தது. மத்திய அமெரிக்காவை பிறப்பிடமாகக் கொண்டது. எண்ணெய் வித்துக்காக சீனா அதிக அளவில் பயிரிட்டு வருகின்றன. நிலக்கடலை நம் நாட்டில், பெருமளவு உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கான காரணம் எத்தரப்பினரும் வாங்கும் நிலையில் உள்ளது என்பதும், அதில் அடங்கியிருக்கும் சத்துக்களுமே ஆகும்.

100 கிராம் நிலக்கடலையில் காபோஹைஹட்ரேட், நார்ச்சத்து, கரையும் கொழுப்பு, புரதம், ட்ரிப்டோபென், திரியோனின், ஐசோலூசின், லூசின், லைசின், குலுட்டாமிக் அசிட், கிளைசின், விற்றமின், கல்சியம், காப்பர், இரும்புச் சத்து, மக்னீசியம், மங்கனீஸ், பொஸ்பரஸ், பொட்டாசியம், சோடியம், துத்தநாகச் சத்து, தண்ணீரச சத்து ஆகியவற்றுடன் போலிக் அசிட் சத்தும் நிறைந்துள்ளன.

அதெல்லாம் சரி. இத்தனை சத்துக்கள் அடங்கிய "நிலக் கடலையை உண்ணக்கூடாது... அப்படி உண்பதால் இரத்தத்தில் கெட்ட கொழுப்பின் அளவு அதிகரித்து. மாரடைப்பு போன்ற இதய நோய் வரக்கூடும்" என்று ஒரு தகவலை சிலர் மக்களிடையே பரப்பியிருக்கிறார்கள்.

இந்த கூற்று உண்மைதானா என தெரிந்துகொள்ள சென்னையைச் சேர்ந்த இதய நோய் சிறப்பு மருத்துவர் கூறும்போது,

"நிலக்கடலை சாப்பிடுவதால் கெட்ட கொழுப்பு அதிகரித்து, இதய நோய் வரும் என்பது தவறான கருத்து. சொல்லப்போனால், அடிக்கடி நிலக்கடலை சாப்பிடுபவர்களுக்கு இதயநோய்கள் வருவது குறைகிறது. வாரத்திற்கு ஐந்து முறை, ஒரு கைப்பிடி அளவு நிலக்கடலை எடுத்துக் கொண்டால் இதய நோய் வராமல் தடுக்கலாம். வாரத்திற்கு இரண்டு முறை கைப்பிடி அளவு நிலக் கடலை சாப்பிட்டால், ஏற்கனவே இதய வியாதி இருப்பவர்களின் இறப்பு விகிதம் 24வீதமாக குறைககப்படுகிறது. நிலக்கடலையில் உள்ள காப்பர் சத்து மற்றும் அதிலிருந்து எடுக்கக்கூடிய எண்ணெய் பொருட்களில் மோனோ அன் சாச்சுரேட்டட் (MUFA) மற்றும் பாலி அன் சாச்சுரேட்டட் ஃபேட்டி அசிட் இருக்கின்றன.

இவைகள் கெட்ட கொழுப்பு (LDL) மற்றும் தீங்கு விளைவிக்கக்கூடிய ட்ரைகிளிசரைட்ஸ் போன்றவைகளைக் குறைத்து, நன்மை தரக்கூடிய நல்ல கொழுப்பை (HDL) அதிகரிக்கச் செய்கிறது. இதனால் இரத்த அழுத்தம் சீராக இருப்பதோடு, நீரிழிவு நோயால் உண்டாகக் கூடிய சீரற்ற கொழுப்பு மற்றும் செரிமான மாற்றங்களை கட்டுக்குள் வைக்கின்றன. இது குறித்த பல்வேறு ஆராய்ச்சிகள் இன்றளவும் நடந்து கொண்டேதான் இருக்கின்றன" என்றார்.

அவென்டிஸ்ட் ஹெல்த் ஸ்டடி (Aventist Health Study), லோவா வுமன்ஸ் ஹெல்த் ஸ்டடி (Lowa Women's Health Study), நர்சஸ் ஹெல்த் ஸ்டடி (Nursus Health Study), மற்றும் பிசிஷியன்ஸ் ஹெல்த் ஸ்டடி (physicians Health study) போன்றவைகள் நிலக் கடலை குறித்த பல்வேறு ஆய்வறிகைககளை சமர்ப்பித்திருக்கினறன. அதில், நிலக்கடலையில் இருக்கும் ஃபோலேட் (Folate) என்கிற விற்றமின், பெண்களின் கருத்தரிப்புத் (Fertility) தன்மையை ஊக்குவிக்கின்றன எனவும், தாய்மைப்பேறு அடைவதற்கு முன்பாகவோ அல்லது ஆரமப காலத்திலோ 400 மைக்ரோ கிராம் நிலக்கடலை சாப்பிடும் பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு 70வீத மூளைத் தண்டுவட குறைபாடு வருவது தடுக்கப்படுகிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

தன் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள பரபரப்பாக ஓடிக் கொண்டிருக்கும் சூழலில், பெரியவர முதல் சிறியவர் வரை அனைவரையும் பாதிப்பது மனஅழுத்தம. "நான் உற்சாகமாகத்தான் இருக்கிறேன். எனக்கு எப்படி மனச் சோர்வு?" என்று தனக்குள் என்ன நடக்கிறது என்பதை அறியாத நிலையில்தான், இன்றைய வாழ்க்கை நம்மை வைத்திருக்கிறது. நிலக்கடலையில் உள்ள அமினோ அசிட்டுகள், மூளையின இயல்பு ஊக்கத்திற்கு தேவையான செரோடோனின் (Serotonin) என்ற வேதிப்பொருளை உற்பத்தி செய்கின்றன. இதனால் மன அழுத்தம் குறைக்கப்படுகிறது.

மேலும், இதில் உள்ள விற்றமின் பி.3 மூளையின் நினைவாற்றலை துரிதப்படுத்துகிறது. மற்றொரு ஆச்சரியம் என்னவென்றால், ஓர் ஆராய்ச்சியில், தினமும் ஒரு அவுன்ஸ் நிலக்கடலை எடுத்துக்கொண்டால் 25வீதம் பித்தப்பையில் கல் (GallStone) உருவாவது தடுக்கப்படுவதாகவும் உடல் பருமன் குறைக்கப்படுவதாகவும் கண்டறிந்துள்ளனர்.

ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் இரத்தக் கொழுப்பும், நீரிழிவு நோயும் இரட்டைக் குழந்தைகள்போல மக்களை வாட்டி வதைககின்றன. இதை வியாபாரமாக்க முனையும் ஒருசிலர், "கொழுப்பைக் குறைக்கிறோம்... சீனியை குறைக்கிறோம்...!" எனக் கூவிக் கூவி ஆயிரம்; இலட்சம் என மக்களை ஏமாற்றிக் கொணடிருக்கிறார்கள். அந்தக் காலங்களில் பூச்சி கொல்லிகள் பயன்படுத்தாமல் பயிரிடப்பட்ட இயற்கை உணவுகளில உள்ள சத்துக்களைக்கொண்டு, உடலும் மனதும் ஆரோக்கியமாக இருந்தன. இன்றைக்கு உடலுக்கு எதிரான மருந்தாக உணவு மாறிவிட்டது.

இதய நோயை அண்டவிடாத தன்மையைக் கொண்டுள்ள நிலக்கடலை சற்று ஆறுதலாக இருந்தபோதும், "இரத்தத்தில் உள்ள சீனியின் செயற்பாட்டில் நிலக்கடலையின் பங்கு என்ன?"

"வேர்க்கடலையில் புரதம் மற்றும் கொழுப்புச்சத்து அதிகமாகவும், மாவுச்சத்து குறைவாகவும் இருக்கின்றன. அதனால் இதை ஏழைகளின் அசைவ உணவு எனறு கூட கூறலாம். தற்போதைய உணவு ஆராய்ச்சிகள் (FDA) நில்க்கடலையில் மருத்து வக் குணங்கள் இருப்பதாக நிரூபித்திருக்கின்றன. ஒவ்வொரு உணவுப் பொருளுக்கும் அதில் இருக்கும் சீனியின் தன்மையை அளவாகக் கொண்டு, இன்டெக்ஸ் (Index) (அதாவது, G -1 – 14 ) தீர்மானிக்கிறார்கள். அதன் அடிப்படையில் நாம் பார்த்தோமேயானால், பச்சைப்பட்டாணி, வாழைப்பழம், புழுங்கல் அரிசி, அவித்த உருளைக்கிழங்கு போன்றவற்றில் G -1 அதிகமாக இருக்கிறது. இந்த வகை உணவுகள சீனியின் அளவை அதிகப்படுத்தும்.

ஆனால், வேர்க்கடலையில் G -1 குறைவாக இருப்பதால், இரத்தத்தில் சீனியின் அளவை உடனடியாக உயர்த்தாமல் சீர் செய்கிறது. அத்துடன் நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பை 21வீதம் குறைக்கிறது. இன்சுலின் வேலை செய்வதற்கான செயற்றிறனை அதிகப்படுத்துகிறது. ஏறக்குறைய GLP-1 என்ற ஓமோன் போன்று வேலை செய்து நீரிழிவு நோயை கட்டுப்பாட்டிற்குள் வைக்கிறது.

தினமும் ஒரு கைப்பிடி அளவு (1 ½ oz அல்லது 50 to 75 grms ) வேர்க்கடலை சாப்பிட்டால் போது மானது, நீரிழிவு நோய் வராமல் கட்டுப் பாட்டிற்குள் வைக்கலாம்" என்றார்.

இப்படி நல்லெண்ணெய், கடலை எண்ணெய் எனப் பழகி வந்த நாம், அனைத்து சத்துக்களும் உறிஞ்சி எடுக்கப்பட்ட தெளிந்த எண்ணெயை உபயோகப்படுத்தி வருகிறோம். கடலை எண்ணெய் அதிக ஆற்றல் கொண்டது. அதிகப்படியான 'லிப்பிடுகள்' இருப்பதால் கெட்ட கொழுப்பை உடலில் சேராமல் தடுக்கிறது. 'பீட்டா சிட்டோஸ்டிரால்' என்னும் துணை இரசாயனப் பொருள் கெட்ட கொழுபபை உறிஞ்சி அகற்றும் தன்மை கொண்டது. 'ரெசவராடல்' எனும் நோய் எதிர்ப்பு பொருள், கடலை எண்ணெயில் அதிகம் இருக்கிறது. இது புற்றுநோய்க்கு எதிராக செயலாற்றும் தன்மை கொண்டது.

இதில் உள்ள விற்றமின் இ சத்து, லிப்பிடுகளில் கரையும் நோய் எதிர்ப்பு பொருளாகும். இவை செல்சவ்வுகளின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பல்வேறு சர்வதேச உணவு உற்பத்தி நிறுவனங்களின் போட்டா போட்டிக்கு ஈடுகொடுக்க முடியாமல், சத்துக்கள் நிறைந்த உணவுப் பயிர்கள் உருத்தெரியாமல் போய்க்கொண்டிருக்கின்றன. நிலக்கடலையும் இந்த வால்மார்ட் அரசியலுக்குத் தப்பவில்லை.

நம் மூதாதையர் வழிகாட்டுதலில் தட்பவெப்பத்திற்கு ஏற்ப நமக்காக, நம் மண்ணில் பரவுகிற காய்கறிகள், தானியங்கள், பயறுவகைகளை காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அதை மீட்டெடுக்கும் விதமாக, மீண்டும் மரபுவழி உணவு குறித்த தெளிவை நோக்கி நாம் பயணப்பட வேண்டும். யாராவது இருவர் பேசிக்கொண்டிருந்தால் "என்ன கடலையா"... என்கிற நக்கலான பேச்சை விடுத்து, இனியேனும் கடலையின் மகத்துவத்தை கவனியுங்கள்.

எது எப்படியோ, "நிலக்கடலை மிகுந்த ஆரோக்கியமான உணவுப்பொருள். எந்தவித பயமும் இன்றி, கடலை மிட்டாயாகவோ, வேகவைத்தோ அல்லது வறுத்தோ சாப்பிடலாம். பயப்படத் தேவையில்லை. இதனால், பல்வேறு நோய்களிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும்!" என மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

எல்லாவற்றிலும் எதிர்மறை விளைவுகள் இருப்பதுபோல் உணவுகளிலும் இருக்கத்தான் செய்கிறது. இதை மனதில் கொண்டு, இனியாவது கையளவுக் கடலையில் ஆரோக்கியமான வாழ்க்கையைத் தொடங்கலாமே!



# பாரமில்லா கனவுகள்

## சிறுகதை

முல்லைத்தீவு நகர த்தை விட்டு இடம்பெயரத் தொடங்கிவிட்டோம். சனங்கள் எல்லாம் தங்கள் உடைமைக ளுடன் முள்ளிவாய்க் கால் நோக்கி இடம்பெயரத் தொடங்கிவிட்டார்கள். எனது சைக்கிளின் கரியலில் வீட்டுத் தளபாடங்களை ஏற்றியபடியும் அரை வாசி உரைப்பை நெல்லை ஏற்றியபடி மிதிவண்டியை உருட்டுகின்றேன்.

எனது கையைப் பிடித்தபடி "அப்பா எங்கபோறம்" சிறுமி அருள்நிலாவின் வின வல்.

அருள் மிகவும் பயந்த சுபாவம் கொண்டவள். "அப்பா என்ர கலர் பென்சிலையும் சித்திரக் கொப்பியையும் வீட்டுத் திண்ணேல விட்டுட்டு வந்திட்டேன். எடுத்திட்டு வரவோ?" "செல் மேலால போகுது வேணாம் அருள்நிலா.

நான் யாழ்ப்பாணத்திற்குப் போய் உனக்குப் புதுக்கொப்பியும் கலர்ப்பென்சிலும் வாங்கித் தாறன்" சனத்திரளால் நிறைந்திருந்தது முல்லை வீதி.

"அம்மா தண்ணி விடாய்க்குது" ஒரு சிறுமியின் குரல். "எல்லாப் பக்கத்தாலும் செல் வந்து விழுகுது.

இழவு இதுதான் எங்கட கடைசிக் காலம்" முதியவரின் குரல்.

"இந்த மண்ணில் ஒரு காலமும் நாம் சுதந்திரமாக இருக்க முடியாது.

அகதியாய் அலைந்து உலைந்து கடைசியில பாடையில போக வேண்டியதுதான்" ஒருவரின் ஆவேசக்குரல். "என்ன செய்யிறது ஒரு காலம் எப்படியிருந்தனாங்கள் இண்டைக்கு பாய் பெட்டிகளோட வெளிக்கிட வேண்டியதாச்சு" ஆச்சியின் குரல். "பிள்ளை அழுகிறாள் பால் குடுக்க வழியில்லை. முலையில் பால் இல்லை. பால்மா எப்படித்தான் கிடைக்கும்" இந்தப் பாழாய்ப்போன தேசத்தில் இளம் பெண்ணின் குரல்.

வீதிகளைச் சுத்தி வெடியோசைகள் கேட்கின்றன. "அம்மா என்ர அம்மா... ஐயோ!" அழுகுரல்கள் தொடர்ந்து கேட்ட வண்ணம் இருக்கின்றன. தூரத்தே பனைமரங்கள் வட்டுகளை தொலைத்துவிட்டு நிற்கின்றன. ஆலமரம் ஒன்று வெடிபட்டு வீழ்ந்து போய் கிடக்கிறது. நாய்களின் ஊளையிடல்கள் தொடர்ந்து கேட்ட வண்ணம் இருக்கின்றன. அழுகை ஒலிகளால் காற்று திண்டாடிக் கொண்டிருக்கிறது. எங்கும் புகை மண்டலம் சூழ்ந்து கொண்டிருக்கிறது.

"கடவுளே! எங்களை காப்பாத்து" அருள்நிலாவின் மெல்லிய குரல். "அப்பா எங்கட பள்ளிக்கூடம் நாங்கள் இடம்பெயர்ந்து வரேக்க வடிவாத்தான் இருந்தது. இப்ப உடைஞ்சிட்டே...? ஏன் இப்படிச் சண்டை நடக்கிறது. எங்கட சனங்கள் பாவம். ஏன் அப்பா மௌனமா இருக்கிறியள்?" அருள்நிலாவின் கேள்விகளுக்கு பதில்களை அருள்நிலாவின் அப்பாவால் வழங்க முடியவில்லை. அந்த நேரத்திலும் மெல்லிய புன்னகையை மட்டுமே அவரால் உதிர்க்க முடிந்தது.

"அப்பா நான் எங்கட வீட்டு முற்றத்தில நட்டு வைச்ச மாங்கண்டுக்கு யார் இனி தண்ணி ஊற்றுவினம்? நாங்கள் இடம்பெயர்ந்து போறம் எல்லோ? எங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருந்த வானதியும் அவான்ர அம்மா,அப்பா எல்லாம் எங்க இடம்பெயர்ந்து போச்சினம்? அவையும் யாழ்ப்பாணம் வருவினமா? அப்பா நான் படிச்சு ஒரு டொக்டரா வரவேணும். செல்லடி பட்டுக் காயப்பட்ட மக்களுக்கு உதவி செய்யணும்போல இருக்கு.

எங்க அப்பா இடம்பெயர்ந்து போறம்?" அருள்நிலாவின் கேள்விகள் அருள்நிலாவின் தந்தையின் மனதில் சங்கடத்தை உண்டுபண்ணியது. அருள்நிலாவின் கேள்விகளுக்கு எப்படிப் பதிலளிப்பது?

புதுமாத்தளன் கடற்கரையில் பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன... சனங்கள் அல்லோலப்பட்டு ஓடுகினம்.

வானத்தில் பருந்துகள் அதிகமாக வட்டமிடுகின்றன. காற்று முன்பைவிட வேகமாக வீசுகிறது.

ஒருவேளை மண்ணில் மரணித்துப்போன உறவுகளின் மூச்சுக்காற்று கூட்டாக இருப்பதாலோ என்னவோ காற்று வேகமாக வீசுகிறது.

"அருள்நிலா இப்பதான் குண்டுச் சத்தம் குறைஞ்சிருக்கு வா அந்த பாலைமரத்தடி பங்கரின் அடியில இருப்பம்" "அப்பா எனக்கு பயமா இருக்கு நாங்கள் செத்திடுவோமோ எண்டு" "கவலைப்படாதே அருள்நிலா எங்களை கடவுள் கைவிடமாட்டார்" "இந்தக் கஞ்சியை இந்தத் துண்டுப் பனங்கட்டியைக் கடிச்சுக்கொண்டு குடி. இந்தச் சின்னப் போத்தலுக்க பனாட்டு இருக்கு தேவை எண்டா எடுத்துச் சாப்பிடு" அருள்நிலா சாப்பிடுவதை பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார் தந்தை. அப்பா "அம்மா விறகு எடுத்திட்டு வாறன் எண்டு போனதால தானே மிதி வெடி பட்டு செத்துப் போனா"

"அம்மாவை எனக்கு இப்பவும் ஞாபகம் இருக் கப்பா. நான் நேசறிக்குப் போன முதல் நாள் அண்டைக்கு என்ர தலை வாரி,கறுத்த சாந்துப்பொட்டு வைச்சு தான் போட்டிருந்த சட்டையின் முன்பகுதியால் என் முகத்தில் இருந்த பவுடரை அழுத்தி துடைச்சது இப்பவும் ஞாப கம் இருக்கப்பா. ஏன் என்னை தன்ர மடியில இருத்தி சோறும் மீன் முறியும் பிசைந்து தீத்தி விட்டவா. அம்மாவை இனி நான் அடுத்த பிறப்பிலதான் காணுவனோ தெரியல" அருள்நிலாவின் வார்த்தைகள் தந்தையின் நெஞ்சத்தில் வேலைப் பாய்ச்சியது. "அழாத அருள்நிலா. உன்ர அம்மா எப்பவும் என்னோட கதைக்கேக்க நீ படிச்சு ஒரு டொக்டராய் வரவேணும் அவளை நீங்கள் தான் கவனிக்கோனும் எண்டு அடிக்கடி சொல்லுவா. அருள் நீ படிச்சு ஒரு டொக்டராய் வந்து உன்ர அம்மான்ர கனவை நிறைவேற்றோனும். அதுதான் என்ர கனவும் கூட" "ஓம் அப்பா..."

வீதியால் மாட்டுவண்டில் ஒன்று வேகமாகச் செல்கிறது. மாட்டுவண்டியில் கதிரை, மேசை ஏற்றப்பட்டிருந்தன. எங்கெங்கோ இடம்பெயர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். சிலர் மிக வேகமாக நடந்து செல்கிறார்கள். சிலர் அழுது புலம்பியபடி செல்கிறார்கள். செத்துப்போன தாய் ஆட்டின் மீது குட்டி ஒன்று பால் குடிக்க முனைகிறது. கடவுள்கூட கண்திறக்கவில்லையே. இப்பிடியே இந்த மண்ணில் நாங்கள் சாகவேண்டியதுதான். யார்தான் எங்களக் காப்பாற்ற வரப்போயினம். நாங்கள் யாருக்குத்தான் துன்பம் செய்தம்?

சனங்களின் கூக்குரல் வீதிகளில் கேட்கிறது. "அருள்நிலா வா எல்லாச் சனமும் இடம்பெயர்ந்து எங்கையோ போகுதுகள். நாங்களும் போவம்" அருள்நிலாவின் தந்தையின் அவலவார்த்தை. "அப்பா நான் கஞ்சி குடிச்சிட்டன். நீங்கள் குடிக்கவில்லையோ?" "வா அருள்நிலா பேந்து குடிப்பம்" குண்டுச் சத்தங்களும் மனைவியின் இழப்பும் அருள்நிலாவின் அப்பாவை வாட்டியது.

"அருள் நீ இருக்கிறதால தான் நான் இருக்கிறன்.

இல்லாட்டி நானும் கடல்ல விழுந்து செத்திடுவன்.

உன்னைப் படிப்பிச்சு ஆளாக்கி கரைசேர்த்து விட்டாத்தான் அம்மான்ர ஆத்மா சாந்தியடையும்"

ஒரு மாதிரியாக சனங்கள் கொஞ்சம் கொஞ்சமாக போர் இல்லாத பிரதேசத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள். வானத்தில் கிபிர் வட்ட மிட்டுக் கொண்டிருந்தது. அருள்நிலாவைப் பார்க்கிறேன்.

முகம் கடும் சுகயீனத்தின்போது இருந்ததைப் போல வெளிறி இருந்தது. கண்களில் பீதி தெரிந்தது. எமது வாழ்வு சில நொடிப்பொழுதில் முடியப் போகிறது. வீதியில் சிலர் மேலே பாத்து பாத்து ஓடித்தாவினர். கிபிர் குத்துகிறது என்றனர். "அப்பா என்ன செய்யிறது? " "வா அந்த வேப்பமரத்தில விழுந்து படுப்பம்" கிபிர் வானத்திலிருந்து கீழ் இறங்கி வருகிறது. கீழ் இறங்கி வரும் கிபிர் தெரிகிறது. அது சூரிய ஒளியில் பளபளத்தது.

எங்கும் சாவு அமைதி. எங்கள் அடுத்த கண ஆசையின் எண்ணத் தொடர்கள் அறுந்து விட்டிருந்தன. வரண்டு தொண்டை அடைத்தது. வாழ்க் கைப் பயணம் முடிவுற ஒரு கணந்தான் இருந் தது.

கீழ் இறங்கி வந்த கிபிர் எழுந்து கிழக்கு நோக்கி போகத் தொடங்கியது. சனங்களை கண்டுதான் குண்டு போடாமல் போறான். தூரத்தே ஒரு முதியவரின் குரல் எல்லாரும் வாங்கோ இன்னும் கொஞ்சத் தூரம் தான் இருக்கு. அங்கால போனால் சண்டையில்லை. அருள் நிலாவைப் பார்க்கிறேன். அவள் முகத்தில் வாழும் ஆசை தெரிகிறது.

அவள் மனதிலே டொக்டராய் வரவேண் டும் என்ற இலட்சி யமும் சேர்ந்து இருப் பது தெரிகிறது.

ஆ.முல்லைதிவ்யன்

# ஈழ நிலாவின் மூன்றாம் பாலின் முகம்

## ஒரு விமர்சனப் பார்வை




இலங்கையின் வரலாற்றுப் பதிவில் புதிதாக இடம் பிடித்துக் கொள்கிறது மூன்றாம் பாலின் முகம் எனும் ஆய்வு கட்டுரை நூல் என்றால் அதுவே சாலச்சிறந்தது. நூலாசிரியர் திருநங்கை ஈழநிலா ஆய்வு செய்திட படைப்பாளிகள் உலகம் எனும் அமையம் பதிப்புரிமையை ஏற்றுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் இதுவரையில் யாருமே ஆற்றிடாத வகையில் ஒதுக்கப்பட்டு தமக்கென எதுவித அடையாளங்களும் இல்லாமல் மறைவுற்று வாழ்ந்து கொண்டிருக்கும் மூன்றாம் பாலினத்தவர்களின் (திருநங்கை துயரங்களை பலரும் அறிந்திடும் வகையில் நூலாக்கம் செய்துள்ளார் ஈழநிலா(திருநங்கை) ஆரம்பத்தில் தம்மை அறிமுகமாக்கிக் கொள்கின்றார் பொதுப்பாலினத்தவர்களாக திருநம்பி திருநங்கை எனும் மாற்றுப் பாலினத்தவர்கள் உள்ளார்கள் என்று.

திருநம்பி என்பவன் பிறப்பால் பெண்ணாகவும் செயற்பாட்டாலும் அவர்களது சிந்தனையாலும் ஒரு ஆணாகவே தோற்றம் கொள்கின்றனர். அதேபோன்று திருநங்கை என்பவள் ஆணாக பிறப்பெடுத்து அவள் தன் செயற்பாட்டாலும் சிந்தனையாலும் பெண்ணாக தோற்றம் கொள்கின்றாள். இதுவே அவர்களது குறைபாடாக கூறப்பட்டு அதனை தொடர்ந்து தமது குழந்தைப்பருவம் தொட்டு தாம் அனுபவித்துக் கொண்டுள்ள துன்பங்களையும் அதற்கான மாற்று வழிகளையும் கூறிக் கொள்கின்றார்.

ஓமோன் இடமாற்றுச் சிகிச்சை மூலம் தமக்கான தீர்வினை ஓரளவு சீர்செய்து கொள்ள முடியும் என்று கூறிக் கொண்டு தொடர்ந்து அதற்கான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்களையும் அறிமுகம் செய்து வைக்கின்றார் நூலாசிரியர். எது எப்படியோ மூன்றாம் பாலின் முகம் நிச்சயம் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டிய நூலே. ஏனெனில் இன்றைய காலத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு பிரச்சினைகளின் மத்தியில் ஏன் பிறந்தேன் நான் எனும் கேள்வியை எழுப்பிக் கொண்டே இருக்கின்றான். அந்தவகையில் அதற்கான தீர்வை கண்டு கொள்ள வேண்டுமாயின் அவர்களுக்கான தீர்வாக மூன்றாம் பாலின் முகம் எனும் நூலை படிக்க பணியுங்கள். இறைவனின் படைப்பில் அர்த் தநாரீஸ்வரர் என்று கும்பிட்டுக் கொள்ளும் நாம் மனிதப் பிறப்பில் பிறப்பெடுத்திடும் இவர்களை ஏளனம் செய்து அவர்களின் மனங்களை சிதைத்திடச் செய்கிறோம். அவர்களின் வளர்ச்சியை ஏற்காதவர்களாக அவர்களை ஒதுக்கி விடுகின்றோம். புரிதலின்றி அவர்களை விலை மாது என்று முத்திரை பதிக்கிறோம்.

தமது மனவலிகளை எடுத்துரைத்திடும் நூலாசிரியரின் மனது பயம் கொண்டாலும் அவரது துணிவு என்பதை கட்டாயம் பாராட்டியே தீர வேண்டும்.

மூன்றாம் பாலின் முகம் நூல் கட்டாயம் படியுங்கள். உங்கள் ஒவ்வொருவருடைய மனங்களையும் நெகிழ்வடையச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. மூன்றாம் நூலின் முகம் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டு வரட்டும் வாழ்க வளமுடன்.

**காவலூர் அகிலன்**

# எங்கும் செல்ஃபி எதிலும் செல்ஃபி



பாறை மீது ஏறி செல்ஃபி எடுக்க முயன்ற மாணவி பலி, ஆற்றில் இறங்கி செல்ஃபி எடுக்க முயன்றபோது தண்ணீர் அடித்து சென்று கல்லூரி மாணவர்கள் பலி,

மும்பையில் ரயில் பெட்டி மீது ஏறி செல்ஃபி எடுக்க முயன்று கை தூக்கும்போது உயர் அழுத்த மின் கம்பியில் கை பட்டு உயிரிழந்த ஒன்பதாவது வகுப்பு



மாணவன் பலி என எத்தனையோ வகையான செல்ஃபி மரணங்களை கேள்விப்படுகிறோம்.

இந்த லிஸ்டில் சமீபத்திய சேர்க்கை, ஆர்ஜெண்டினாவின் கடற்கரை பகுதியில் கரைக்கு வந்த 'லா பிளேட்டா' என்ற அரிய வகை டால்பின் குட்டி ஒன்றை, கையில் பிடித்து செல்ஃபி எடுக்க சுற்றுலா பயணிகள் முயன்றபோது, வெப்பம் தாங்க முடியாமல் குட்டி டால்ஃபின் உயிரிழந்த பரிதாபம்.

அன்றாடம் வீதிகளிலும், பேருந்து நிலையங்களிலும், சுற்றுலா தலங்களிலும் நடந்து சென்றுகொண்டிருப்பவர்கள், 'மச்சான் ஒரு செல்ஃபி' என சொல்லிக்கொண்டு வாகனங்கள், வீதிகளில் நடந்து வரும் மனிதர்கள் என எதையும் பொருட்படுத்தாமல் திடீரென திரும்பி நின்று, கைகளை உயர்த்தி செல்ஃபி எடுத்துக்கொள்வதை எத்தனை முறை பார்த்திருப்போம். இறந்து போன சித்தப்பாவோடு செல்ஃபி எடுத்து, அதை ஃபேஸ்புக்கில் ஷேர் செய்து, 'சித்தப்பா டெட்,, பீலிங் சேட்' என ஸ்டேட்டஸ் போடுபவர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள்.

கொடிய தொற்று நோய் போல டிஜிட்டல் உலக நெட்டிசன்களிடையே பரவி கிடக்கிறது செல்ஃபி மோகம். தாங்கள் எடுக்கும் செல்ஃபிக்களையும், க்ரூப்பிகளையும் சமூக வலைத்தளங்களில் பகிர்வதனால் கிடைக்கும் போலி போதைக்கு பலரும் அடிமையாக தொடங்கிவிட்டனர் என்கின்றனர் மனநல நிபுணர்கள்.

செல்ஃபி எடுத்து, பருக்களை நீக்கி, பற்களை வெள்ளையாக்கி, கண்களை பெருசாக்கி போலியான அழகை உருவகித்து, செல்ஃபிக்களை சமூக வலைத்தளங்களில் அப்லோட் செய்து மகிழ்வது பெண்கள் மட்டுமல்ல. தங்கள் சிக்ஸ் பேக் உடலை, பாத்ரூம் கண்ணாடி முன்பு நின்று கொண்டு பை செப்களோடு செல்பி எடுத்துப் போடும் ஆண்களும் இதில் அடக்கம்.

இவ்வாறு எடுக்கப்படும் எத்தனை நூறு செல்ஃபிக்களை ஃபேஸ்புக்கிலும், டுவிட்டரிலும் அன்றாடம்



தரிசிக்கிறோம். சும்மா ஃபேஸ்புக்கில் 'செல்ஃபி' என்ற ஹாஷ் டாகை தட்டி பார்த்தால், குப்பை போல வந்து கொட்டுகிறது செல்ஃபிக்கள்.

மில்லினியல்ஸ் தலைமுறையினர்தான் கல்லூரிகளிலும் வேலை செய்யும் இடங்களிலும் செல்ஃபி எடுத்துகொண்டு இருக்கிறார்கள் என நினைத்தால், வயதானவர்களும் சளைத்தவர்கள் அல்ல. ஒவ்வொரு நொடியும் நடப்பவற்றை சுட்டுத் தள்ளி செல்ஃபிக்களாக பதித்து இவர்களும் 'லெட்ஸ் டேக் எ செல்ஃபி' எனதான் இருக்கிறார்கள். ஆனால் இந்த அதீத செல்ஃபி மோகம் ஒன்று ஒருவகையான போலி மிதப்பை தந்து விடும், இல்லையேல் காழ்ப்புணர்ச்சி தந்துவிடும் என்று எச்சரிக்கின்றனர் மனோவியல் நிபுணர்கள்.

வெகுஜன மக்களிடம் மட்டுமல்லாமல் பிரபலங்களையும் இந்த செல்ஃபி மோகம் விட்டு வைக்கவில்லை. எல்லன் டீஜெனரசின் ஆஸ்கர் செல்ஃபி தொடங்கி அரசியல் வாதிகள் செல்ஃபி மோகம் என பரவும் செல்ஃபிக்கள்தான் எத்தனை எத்தனை? புகழ்பெற்ற ஒக்ஸ் போர்ட் டிக்ஷனரியின் 2013 ஆம் ஆண்டின் பிரபலமாக, அதிகம் பயன்படுத்திய வார்த்தையாக குறிப்பிடும் அளவுக்கு 'செல்ஃபி' பிரபலமாக உள்ளது என்பது சிந்தனைக்குரியது.

எது எப்படியோ.. அடுத்த நூறு ஆண்டுகளுக்கு பின் வரும் சந்ததியினர், "இது வீணாய் போன செல்ஃபி ஜெனரேஷன்" என்று சொல்லிவிடுவார்களோ என்றுதான் சற்று பயமாக இருக்கிறது

# கோட்சேவுக்கு ஒரு நீதி பேரறிவாளனுக்கு

தேர்தல் ஆதாயமாக இருந்தாலும் பரவாயில்லை. ஏழு பேர் விடுதலையானால் எல்லோருக்குமே மகிழ்ச்சிதான். - இது ஒரு தீவிர தி.மு.க.காரரின் முகநூல் பதிவு.

என்னை தனிப்பட்ட முறையில் கேட்டால், அவர்களை விடுவித்துவிடலாம். - இது ஒரு தீவிர பி.ஜே.பி காரரின் கருத்து. ஆம். தமிழகத்தின் பெருவாரி மக்கள் பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட எழுவர் விடுதலைக்கு ஆதரவாகவே இருக்கிறார்கள்.

அனைத்து தளங்களிலும் அ.தி.மு.கவை கடுமையாக விமர்சித்து வரும் ஒரு தீவிர தமிழ் தேசிய மூத்த இடதுசாரி ஒருவருடன் பேசிக கொண்டிருந்தபோது சொன்னார், "ஜெயலலிதா எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. அவர் மட்டும் அந்த ஏழு பேரை விடுவித்தால், பெருவாரி தமிழ் சமூகம் அவர் பின்னால் இருக்கும்"

"கருணாநிதி செய்த பிழையை அம்மாவும் செய்து விடக் கூடாது. தன் குடும்ப நலத்தை முன்னிறுத்தாமல், கருணாநிதி மட்டும் ஈழப்போரின் போது, ஒரு காத்திரமான முடிவை எடுத்து, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இராஜினாமா செய்திருந்தார்கள் என்றால்,

ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அவர் பின்னால் நின்று இருப்பார்கள். பெருவாரி மக்களின் உணர்வுகளைத் தாண்டி, அவர் மகளையும் கைது செய்திருக்க முடியாது. அம்மாவும் தன் வழக்கை மனதில் கொள்ளாமல், அந்த எழுவரையும் விடுவிக்க வேண்டும்.

அப்படி விடுவிக்கும் பட்சத்தில், உச்சநீதிமன்றத் தீர்ப்பு எதிராக வந்தாலும், தமிழ் சமூகம் அவரை காக்கும். காலத்தைத் தாண்டி எம்.ஜி. ஆர். கொண்டாடப்படுவது போல், அம்மாவும் கொண்டாடபடுவார்..." - இது ஒரு அ.தி.மு.க. நண்பரின் கருதது.

பெருவாரி தமிழ் சமூகம், எழுவர் விடுதலையை ஆதரிக்கிறது. அவர்களை விடுவிக்காமல் இருப்பது, தமிழர் விரோத போக்கை மத்தியில் ஆண்ட காங்கிரசும், பி.ஜே.பியும் கடைப்பிடிக்கிறது என்று நினைக்க வைக்கிறது. ஒரு ஆட்சியின் கீழ் இருக்கும் ஒரு சமூகம், தன்னை இனப்பாகுபாடுடன் தன் அரசை நடத்துகிறது என்று நினைப்பது, வலுவான ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. மத்திய அரசு அடிக்கடி குறிப்பிடுவது போல், 'இது அனைவருககுமான அரசு. நாங்கள் யாரையும் இன, மத, மொழி பாகுபாடுடன் நடத்தவில்லை' என்பதை தன் செயலில் காட்ட வேண்டுமென்றால் அவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்பதே பெருவாரி தமிழ் சமூகத்தின் எண்ணமாக இருக்கிறது.

"நிறுத்துங்கள். கையில் கீபோரடும், மௌசும் இருக்கிறது என்பதற்காக, நீங்கள் என்ன வேண்டு



முருகன் பேரறிவாளன் சாந்தன்



மானாலும் எழுதுவீரகளா...? உணர்ச்சிவசப்படுவது வேறு, சட்ட யதார்த்தம் வேறு. சட்டம் அனைவருக்கும் பொதுவானது. இந்த ஏழு பேருக்காகவெல்லாம் அதை வளைக்க முடியாது. அப்படி நாம் வளைப்போமென்றால், அது தான் ஜனநாயகத்தை வலுவிழக்க செய்யும்..." என்று சட்டத்தை மதிக்கும் மனிதராக நீங்கள் சொல்வீர்கள் என்றால், நாங்களும் அதைத்தான் குறிப்பிடுகிறோம். சட்டம் அனைவருக்கும் பொதுவானது, கோபால் கோட்சேவுக்கு ஒரு சட்டம், பேரறிவாளனுக்கு ஒரு சட்டம் கிடையாது என்கிறார்கள் பேரறிவாளன் விடுதலைக்காக் தொடந்து போராடி வரும் செயற்பாட்டாளர்கள்.

### யாருக்காகவும் சட்டம் வளைந்து கொடுக்கக் கூடாது

காந்தி கொலை வழக்கில் வாழ்நாள் சிறையாளியான கோபால் கோட்சேவை, மராட்டிய மாநில அரசு அவரது சிறைவாசம் 15 ஆண்டுகள் முடிந்த நிலையிலேயே, 1964இல் விடுதலை செய்தது. இத்தனைக்கும், அவர் பேரறிவாளன் போல், "நடந்த குற்றத்திற்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை" என்று மறுத்தவர் கிடையாது. "நான் ஏன் காந்தியை கொன்றேன்?" என்ற தலைப்பில் புத்தகமாகவே வெளியிட்டவர் இவர். ஆனால், பேரறிவாளன் உள்ளிட்டோர் தங்களுக்கும் ராஜீவ் படுகொலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று தொடர்ந்து மறுத்து வருபவர்கள், 22 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்தவர்கள். ஏன் கோட்சேவுக்கு ஒரு மாதிரியும், பேரறிவாளனுக்கு ஒரு மாதிரியும் சட்டம் நடந்து கொண்டிருக்கிறது....?

"முட்டாள்தனமாக பேசாதீர்கள். தமிழர்கள் மிகவும் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். அவர்களுக்கு யதார்த்தம் புரிவதில்லை. அப்போது இருந்த சட்டம் வேறு, இப்போது அதில் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. சட்டத்தை மதிக்க பழகுங்கள்" என்பது உங்கள் வாதமா...?

மறுப்பதற்கில்லை. "பல சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படடுள்ளது உண்மைதான். ஆனால், எந்தச் சட்டமும் இவர்கள் விடுதலைக்கு முட்டுக்கட்டையாக இல்லை" என்கிறார் ஏழு தமிழர் விடுதலை நூலின் ஆசிரியர் கி.வெங் கட்ராமன்.

"காந்தியார் கொலை வழக்கில் வாழ்நாள் தண்டனை பெற்ற கோபால் கோட்சே , 14 ஆண்டுகள் சிறையில கழித்துவிட்டதாகவும், அதனால், தன் வாழ்நாள் தண்டனை முடிவுக்கு வந்துவிட்டதாகவும் வதாடினார்

இவ்வாதத்தை ஏற்க மறுத்த உச்ச நீதிமன்றம், இந்திய தண்டனை சட்டம் பிரிவு 53வுடன் இணைந்த பிரிவு 45இன் கீழ், வாழ்நாள் சிறை என்பது அச்சிறையாளியின் மீதியுள்ள வாழ்நாள் முழுவதையும் குறிக்கும் என்று வரையறுத்தது.

ஆனால் அதேநேரம், தொடர்புடைய அரசாங்கத்தின் தண்டனை குறைப்பு அதிகாரம் தற்சார்பானது என்றும் விளக்கம் அளித்தது.

அதாவது காந்தியார் வழக்கு, ஒரு கொலை வழக்கு. அது இந்திய தண்டனைச் சட்டம் 302இன் கீழ், மராட்டிய அரசால் பதியப்பட்ட வழக்கு. இப்போது மராட்டிய அரசு அவரை விடுவிக்க விரும்பினால், அவரை விடுவிக்கலாம் என்பதே ஆகும். அதன்படி மராட்டிய அரசு அவரை விடுதலை செய்தது.

இன்னொரு வழக்கில், ஒரு வாழ்நாள் சிறையாளிக்கு தண்டனை குறைப்பு வழங்கும் போது ஓர் கணக்கீட்டுக்காக உச்சபட்ச சிறைக்காலம் என்பதை 20 ஆண்டுகள் தண்டனைக் காலமாக வைத்துக் கொள்ளலாம் என்று அறிவுரையை வழங்குகிறது.

எப்படி பார்த்தாலும், பேரறிவாளன் உள்ளிட்டோர் 22 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்துவிட்டார்கள். அவர்களை விடுதலை செய்வதுதான் நீதி" என்கிறார் கி.வெங்கட்ராமன்.

### இல்லாத சட்டத்தின் கீழ் தண்டனை

சரி தான். காந்தி வழக்கு கொலை வழக்காக 302 IPC பதியப்பட்டது. அது மாநில அரசின் முழு அதிகாரத்திற்குட்பட்டது.

ஆனால், பேரறிவாளன் உள்ளிட்டவர்கள் மத்திய அரசின் வெடிமருந்துத் தடைச் சட்டத்தின் கீழும் அல்லவா கைது செய்யப்பட்டார்கள். இது எப்படி அவர்களுக்கு பொருந்தும்...? என்ற கேளவியை எழுப்புகிறீரகளா..?

தடா சட்டம் மற்றும் வெடி மருந்து சட்டத்தின் கீழும் அவர்கள் கைது செய்யப்பட்டது உண்மையே! தடா சட்டமே இரத்தாகிவிட்டது. தடா சட்டத்தின் கீழ் இந்த வழக்கு வராது என உச்ச நீதிமன்றம் ஏற்கனவே சொல்லிவிட்டது.

இது சாதாரண தண்டனைச் சட்டத்தின் கீழுள்ள கொலைக் குற்றம்தான் என வரையறுத்துக் கூறிவிட்டது. வெடிமருந்து சட்டப்படி உச்சபட்சமாக ஒருவரை 7 ஆண்டு காலமே சிறை வைக்க முடியும். ஏழாண்டுகளைக் கடந்தும் அவர்கள் அனைவரும் சிறையில் இருந்து விட்டதால், மத்திய அரசின் வெடிமருந்து சட்டத்தின் கீழ் அவர்கள் தண்டனையை அனுபவித்து முடித்து விட்டனர்.

தற்போது, மத்திய அரசின் எந்த சட்டத்தின் கீழ் அவர்களை ஆயுள் முழுக்க சிறை வைக்க நினைக்கிறார்கள் என்பதே இங்கு விடையளிக்கப்பட வேண்டிய கேள்வி! மாநில அரசின் அதிகார்த்திற்கு உட்பட்ட 302 IPC யின் கீழ்தான் அவர்கள், தற்போது சிறையில் இருக்கின்றனர்.

எனவே, இப்போது மாநில அரசு நினைத்தால் அவர்களை விடுவித்துவிடலாம் என்பது சட்ட நிபுணர்களின் வாதம்!

**ஜனாதிபதியே கருணை மனுவை நிராகரித்த பின், எப்படி விடுதலை சாத்தியம்...?**

ஏற்கனவே பல்வேறு தீர்ப்புகளில் குடியரசு தலைவரின் மன்னிப்பு அதிகாரமும்ம் (அரசமைப்புச் சட்டப் பிரிவு 72), மாநில ஆளுநரின் மன்னிப்பு அதிகாரமும் (அரசமைப்புச் சட்டப் பிரிவு 161) இணையானவை, சம அதிகாரம் உடையவை. தமிழக அரசு தன் அமைச்சரவையை கூட்டி, தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தால் அவர்களை விடுதலை செய்தே ஆக வேண்டும். தமிழக அரசு எதற்கும் அஞ்சாமல், மத்திய அரசை கேட்காமல் சட்டப் பிரிவு 161ஐ பயன்படுத்தி விடுதலை செய்ய வேண்டும்.

"மீண்டும் புரியாமல் பேசுகிறீர்கள் சட்டப்பிரிவு 435 (1)ன் படி, மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்ட சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்பட்டு ஆனால் அதன் விசாரணை மத்திய அரசாங்கத்தன் அதிகாரத்திற்குட்பட்ட சி.பி.ஐ. போன்ற புலனாய்வு அமைப்பால் நடத்தப்பட்டிருந்தால், சிறையாளிகளை விடுதலை செய்ய மத்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று கடைசியாக இவ் வழக்கில் வெளியான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது" என்பது உங்கள் வாதமா...?

உண்மைதான் ஆனால, அதே தீர்ப்பில் அரசியலமைப்பு சட்டம் 161 ஐ பயன்படுத்த, மாநில அரசுக்கு முழு அதிகாரம் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர் என்பதே மிக முக்கிய செய்தி! தமிழ்நாடு அரசு 161 ஐ பயன்படுததி தாராளமாக விடுதலை செய்யலாம் என்கிறார்கள் சட்ட நிபுணர்கள்.

சட்டங்களை எல்லாம் தாணடி, பெருவாரி மக்களின் உணர்வு நிலை, அந்த எழுவரும் விடுதலை பெற வேண்டும் என்பதே. மத்திய அரசுக்கு எழுவரின் விடுதலை நிறுத்த சட்ட அதிகாரம் இல்லை என்றாலும், இப்போது தமிழக அரசு மத்திய அரசிடம் கருத்துக் கேட்டுள்ளது. தமிழக மக்கள் மத்திய அரசுடன் இணக்கமாக இருக்கவே விரும்புகிறார்கள். மத்திய அரசும் அப்படித் தான நினைக்கிறது நம்புகிறோம்.

நாங்கள் காங்கிரஸ் போல் அல்ல, தனிப்பட்ட முறையில் எங்களுக்கு எந்த பழிவாங்கும் எண்ணமும்இல்லை என்று மத்திய அரசு நினைக்குமானால், எழ் வரையும் உடனே விடுதலை செயய உத்தர விட வேண்டும். தேர்தல் ஆதாயமாக இருந்தாலும் பரவாயில்லை. ஏழு பேர் விடுதலையானால் எல்லோருக்குமே மகிழ்ச்சிதான் - இது ஒரு தீவிர தி.மு.க.காரரின் முகநூல் பதிவு. தமிழ் சமூகத்தின எண்ணமும் இது தான். இதை மத்திய அரசு மதிக்க வேண்டும்!

ஜூனியர் விகடன்

# இருபது-20 உலகக்கிண்ணம்






# வெல்லப்போவது யார்?









அதகளமாக ஆரம்பிக்கிறது ஆறாவது இருபது-20 உலகக் கோப்பை கிரிக் கெட் போட்டிகள். இதுவரை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, இங்கிலாந்து, மேற்கு இந்தியத்தீவுகள் ஆகிய அணிகள் கோப்பையை வென் றுள்ளன. மார்ச் 8 ஆம் திகதி தொடங்கி, இந்தியாவில் நடக்கப்போகும் இந்தத் தொடரில், ஜெயிக்கப் போவது யார்? கோப்பையை வெல்லும் ரேஸில் முன்னிலையில் இருக்கும் அணிகளின் பலம, பலவீனங்கள் என்ன?

**இந்தியா**

**பலம்**

மிகச் சமீபத்தில், அவுஸ் திரேலியாவை அவர் கள் மண்ணிலேயே இருபது-20 தொடரில் வாஷ்அவுட் செய்த தும் இலங்கையை வென் றதும அணிக்கு பெரிய உத்வே கம். டோனி, யுவராஜ் சிங், ரோஹித் ஆகியோரின் ஐந்து இருபது-20 உலகக் கோப் பைப் போட்டிகளில் ஆடிய அனுபவம்.

ரோஹித், தவான் எனத் தொடக்க ஆட்டக்காரர்களின் அதிரடி. 'குட்டி டிராவிட்' எனப்படும் ரஹானே, கோலி போன்ற அடுத்த நிலை ஆட்டக்காரர்களின் சிறப்பான ஆட்டம். ரெய்னா என்ற அட்டகாச ஓல் ரவுண்டர். புதிய வேகப புயல் பும்ரோ மற்றும் முகமது சமி.

சுழற்பந்து வீச்சில் விஸ் வரூபம் எடுத்திருக்கும் அஸ் வின். அவருக்குப் பக்க பலமாக ஜடேஜா, ரெய்னா, யுவராஜ் சிங். எக்ஸ்ட்ராவாக இவர்களின் சிறப்பான ஃபீல்டிங். டோனியின் புயல் வேக ஸ்டம்ப்பிங்.

**பலவீனம்:**

எதிர் அணியினர் மிரண்டு போகும் அளவுக்கான வேகப் பந்து வீச்சு இல்லாதது.

சில வீரர்களைத் தவிர, பிற வீரர்கள் ஃபீல்டிங்கில் ஆவேசமாக இல்லாமல் இருப்பது.

யுவராஜ் சிங் மற்றும் ஜடேஜா வழக்கமான அதி ரடி ஆட்டத்துக்கு முழுமையாகத் திரும்பாதது.

தொடக்க ஆட்டக்காரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டம் இழந்தால், ஐந்தாவது விக்கெட்டுக்குப் பிறகு வலுவான கூட்டணி இல்லாதது.

**அவுஸ்திரேலியா**

**பலம்:**

இருபது-20 உலகக் கோப்பையை இதுவரை வெல்லாததால், இந்த முறை வென்றே தீர வேண்டும் என்ற வெறியில் விளையாடுவது. எதிர் அணியின் பந்து வீச்சாளர்களை மிரட்டும் அதிரடி துடுப்பாட்டக்காரர்கள். எதிர் அணி துடுப்பாட்டக்காரர்களைத் திணறச் செய்யும் வேகப்பந்து வீச்சு.

டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளைத் தொடர்ந்து இருபது-20இற்கும் கப்டனாக மாறியுள்ள ஸ்மித்.

**பலவீனம்:**

போல்க்னர், பின்ச், கோல்டர் நைல் போன்ற வீரர்கள் காயத்தால் பாதிக்கப்பட்டு இருப்பது. இந்திய மைதானங்களில் சிறப்பாகப் பந்து வீசக் கூடிய சுழற்பந்து வீச்சாளர்கள இல்லாதது.

**தென்னாபிரிக்கா**

**பலம்:**

மற்ற அணிகளைவிட வலுவான பட்ஸ்மேன்கள் அதிகம் இருக்கும் அணி. துல்லியமான லைன் லெங்க்த்தில் பந்து வீசும் நான்கு பந்து வீச்சாளர்கள் மற்றும் மீதமுள்ள அனைவரும் அதிரடி துடுப்பாட்டக்காரர்களாக களம்இறங்கும்சென்னை சுப்பர் கிங்ஸ் ஃபார்முலாவைப் பயன்படுததும் தென்னாபிரிக்க கப்டன் டூப்ளெஸியின் வியூகம். எதிர் அணியினரைப் பயமுறுத்தும் டிவில்லியர்ஸ், ஸ்டெயின் போன்றோர் அணியில் இருப்பது.

**பலவீனம்:**

உலகக் கோப்பை போன்ற பெரிய போட்டிகள் என்றாலே, இறுதிப் போட்டிகள் வரை அட்டகாசமாக ஆடி, மோசமாகத் தோற்கும் ராசி. இது மன ரீதியாக வீரர்களைப் பாதிப்பது தென்னாபிரிக்க அணியின் பலவீனம்.

**நியூசிலாந்து**

**பலம்:**

போட்டியின் முதல் பந்தையே சிக்ஸருக்கு விரட்டக் கூடிய துடுப்பாட்டக்காரர்கள் இருப்பது.

சமீபத்தில் விளையா டிய ஒருநாள் போட்டிகளையே 20 ஓவர் போட்டிகளைப் போல விளையாடியவர்கள். 20 ஓவர் போட்டிகளை எப்படி விளையாடப்போகிறார்கள் என்று எல்லா அணிகளுமே எதிர்பார்க்கிறது.

**பலவீனம்:**

பிரண்டன் மக்கலம் என்ற அதிரடி பட்ஸ்மேன் ஓய்வு பெற்றுவிட்டது.

வெட்டோரிக்குப் பிறகு வெளிநாடுகளில் அற்புதம் புரியும் சுழற்பந்து வீச்சாளர்கள் கிடைக்காமல் போனது.

**மேற்கிந்தியத் தீவுகள்**

**பலம் :**

20 ஓவர் போட்டிகளை விளையாடுவதற்கு என்றே பிறந்தவர்களைப் போல விளையாடும் அணி என்பதே அவர்களது கூடுதல் பலம்.

இமாலய சிக்ஸர்களை அடிக்கும், சிக்ஸர் மழை பொழியும் கெயில் போன்ற வீரர்கள அணியில்இரு ப்பது.

**பலவீனம்:**

நரேய்ன், பொல்லார்டு, பிராவோ போன்ற சிறந்த வீரர்கள் அணியில் இல்லாமல் இருப்பது. நிலையான அதிரடி ஆடடத்தை எந்த வீரர் தருவார் என நம்பவே முடியாது. திடீரென சொதப்பலாக விளையாடி, வேகமாக வெளியேறுவது.

**வோன் சொன்னா பலிக்குமா?**

முன்னாள் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சா ளர் வோன் சொல்லும் கணிப்புகள் பெரும்பாலும் சரியாகவே நடந்துள்ளன. 2011 ஆம் ஆண்டு இந்தியா தான் உலகக் கோப்பையை வெல்லும் என்றார். மைக்கேல் கிளார்க் கப்டனாக இருந்தால், 50 ஓவர் உலகக் கோப்பையை அவுஸ் திரேலியாதான் வெல்லும் என்று கூறியிருந்தார். 2011 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையே நடந்த டெஸ்ட் போட்டி ஒன்று, டையில் முடியும் என்று கூறியிருந்தார். அவர் சொன்னது அத்தனையுமே நடந்தது. 'இந்த முறை இருபது-20 உலகக் கோப்பையை வெல்லும் அணியாக இந்தியா தான் இருக்கும்' என்று கூறியிருக்கிறார். இந்த முறையும் ஷேன் வோர்னேயின் கணிப்பு பலிக்குமா?

இருபது -20 உலகக் கோப்பையை இதுவரை நடத்திய நாடுகளில், இலங்கையைத் தவிர வேறு எந்த நாடுமே இரண்டாவது சுற்றைத்தாண்டியது இல்லை. இந்த ஃபார்முலாவை இந்திய அணி உடைக்குமா?

**மற்றைய அணிகள்!**

**இலங்கை:** டில்ஷான் என வலுவான தொடக்க வீரர்கள். இறுதி ஓவர்களில் கட்டுக்கோப்பாக பந்து வீசும் மலிங்க, சுழற்பந்து வீச்சில் கலக்கும் சேனநாயக்க போன்றோர் அணியின் மிகப்பெரிய பலம்.

சங்கக்கார, ஜெயவர்தனே போன்றோருக்குப் பிறகு, மத்தியில் சிறப்பாக ஆடக்கூடிய வீரர்கள் இல்லாமல் இருப்பது. மலிங்கவுக்கு துணையாக, சிறப்பான வேகப்பந்து வீச்சாளர் இல்லாதது பலவீனம்.

**பாகிஸ்தான்:** அப்ரிடி, மலிக், ஹபீஸ், ரியாஸ் என அனுபவம் வாய்ந்த வீரர்கள் இருப்பது. உலகக் கோப்பை போன்ற பெரிய போட்டிகளில் திடீர் பலம் பெற்று ஆச்சர்யம் அளிப்பது பலம்.

ஐபிஎல் போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடாததால், அவர்களுக்கு இந்திய மைதானங்களின் தன்மை புரியாமல் இருப்பது பெரிய பலவீனம்.

**இங்கிலாந்து:** சமீப காலங்களில், 20 ஓவர் போட்டிகளில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி இருக்கிறார்கள். சமீபத்தில், பாகிஸ்தானை வென்று கூடுதல உத்வேகத்துடன் இருப்பது பலம்.

வேகப்பந்து வீச்சு பலமாக இருந்தாலும், இந்திய மைதானங்களில் விக்கெட்களை வீழ்த்தும் சுழற்பந்து வீச்சாளர்கள் இல்லாதது பெரிய குறை.

பலம் வாய்ந்த இந்த அணிகளைத் தவிர, வங்கதேசம், சிம்பாவே, ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து, அயரலாந்து போன்ற அணிகளும் விளையாடுகின்றன. இத்தகைய சின்னச்சின்ன அணிகளும், பல சமயங்களில் திடீர் ஆச்சர்யத்தை அளிக்கும். கடந்த ஒருநாள் உலகக கோப்பைப் போட்டிகளில், வங்கதேச அணி மற்ற சின்ன அணிகளை வென்றதோடு, இங்கிலாந்தையும் வீழ்த்தியது.

அதுபோல ஆச்சர்யங்களும் இந்த இருபது-20 உலகக் கோப் பையில் காத்திருக்கலாம்... பார்ப்போம்!

நன்றி:-விகடன்

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்-நீர்க்குமிழி
பாடல்-ஆடி அடங்கும் வாழ்க்கையடா
பாடியவர்- சீர்காழி கோவிந்தராஜன்.
இசை- வி.குமார்
பாடலாசிரியர்- உவமைக்கவிஞர் சுரதா




ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா
கண் மூடினால் காலில்லா கட்டிலடா
பிறந்தோம் என்பதே முகவுரையாம்
பேசினோம் என்பதே தாய்மொழியாம்
மறந்தோம் என்பதே நித்திரையாம்
மரணம் என்பதே முடிவுரையாம்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

சிரிப்பவன் கவலையை மறைக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை
வந்தவர் யாருமே நிலைத்ததில்லை
தொகுப்பார் சிலரதை சுவைப்பதில்லை
தொடங்குவார் சிலரதை முடிப்பதில்லை

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

சிரிப்பவன் கவலையை மறைக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்புவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா...

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
மணிமாறன், அருள்செல்வம், நந்தன், நகுலன், பிரியதாஸ்- நட்டான்கண்டல், ஜோகநாதன், புவிதாஸ், எஸ்.சஜிதன், இடைக்குறிச்சி, எஸ்.கரன், அம்மா, ஆதி- காட்டுப்புலம்,கரவெட்டி, இராமதாஸ்-கணேசபுரம், வவுனியா,

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## தினப்பயணம் -குறும்படம்-ஓர் விமர்சன நோக்கு

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து தமிழர்கள் புலம்பெயர் நாடுகளில் எதிர்கொள்ளும் துன்பங்களைப் பற்றி பல குறும்படங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை போருக்குப்பின்பான உளவியல் வலிகளை அதிகம் பேசி இருக்கின்றன. புலத்தில் வாழும் தமிழர்கள் அங்குள்ள ஆதிக்கவாதிகளினால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றி அதிகமான குறும்படங்கள், இலக்கியங்கள் பேசாத போதும் சில குறும்படங்கள், சிறுகதைகள் அவற்றைப்பேசி இருக்கின்றன. அவ்வாறு புலம்பெயர்ந்து அதிகம் தமிழர்கள் வாழும் நாடான பிரான்சில் பிரெஞ் குடிமக்களினால் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பற்றி நகைச்சுவையாக பேசி இருக்கும் குறும்படம் தினப்பயணம்.

பிரான்சில் அடிக்கடி நடப்பது மொபைல் போன் திருட்டு. பயணங்களின் போது புகையிரதத்தில், பேருந்தில் தனியாகச் சிக்கிக்கொள்ளும் தஞ்சம் புகுந்துள்ள அந்நிய நாட்டு மக்களிடம் இருந்து வழிப்பறி செய்யப்படுவதுண்டு. உயர் ரக கைத்தொலைபேசிகள் அடித்துப் பறிக்கப்படுவதுண்டு. இவ்வாறு பிரான்ஸில் அடிக்கடி நடக்கும் மொபைல் போன் வழிப்பறியை மையமாகக் கொண்டு சதா பிரணவன் இயக்கி இருக்கும் குறும்படம் தினப்பயணம்.

சதாபிரணவன், ரஜிந்த் ஆகிய இருவருக்கும் குறும்படம ஒன்று உருவாக்கவேண்டும் என்று நீண்ட நாள் ஆசை. அதற்காக வட்டிக்குப் பணம் வேண்டிவிட்டு பிரபலமான




நடிகர் ஒருவரிடம் கதைசொல்ல பயணமாகிறார்கள். இவ்வாறு புகையிரத நிலையத்தில் பயணம் செல்லும் போது அவர்கள் இருக்கும் பெட்டியில் பிரெஞ் இளைஞர்களும் பயணம் செய்ய வருகிறார்கள். அவர்களைக் கண்டவுடன் சதாபிரணவன், ரஜிந்துக்கு நடுக்கம் ஏற்படுகின்றது. தங்களது கைத்தொலைபேசிகள் வைபிரசனில் உள்ளதாக நினைத்துக்கொண்டு மரண பயத்தை முகத்தில் காட்டாமல் சமாளித்துக்கொண்டு இருக்கிறனர். அந்த நேரத்தில் சதாபிரணவனுக்கு அழைப்பு வருகிறது. கைத்தொலைபேசி ஒலி அனைவரையும் சதாபிரணவனை நோக்கி சுட்டுகின்றது.

நோன்-லீனியர் கதையமைப்பில் திரைக்கதை நகர்கின்றது. புகையிரத பயணத்தை ஒரு கதையாகவும், பிரபல நடிகர் ஒருவருக்கு கதை சொல்வது இன்னும் மொரு கதையாகவும் காட்சிப்படுத்தப்படுகின்றது. இரண்டுக்கும் இடையிலான தொடர்புகள், படத்தின் ஆரம்பத்தில் குறும்படம் எடுக்க வட்டிக்கு பணம் வேண்டுவதில் சம்பந்தப்படுத்தப்படுகின்றது.

வசனங்களும், நகைச்சுவையான உடல் மொழிகளும் குறும்படத்தை இன்னும் சுவாரசியப்படுத்துகின்றது. யாழ்ப்பாண மொழிவழக்கை புலம்பெயர்ந்தவர்கள் உச்சரிக்கும் முறையை கச்சிதமாக ஒப்பேற்றி இருக்கிறார்கள்.

கைத்தொலைபேசி வழிப்பறி கும்பலிடம் அடிவாங்கி, ஐபோனை பறிகொடுத்துவிட்டு வரும் சந்தர்ப்பத்தில், அதைப்பற்றி விசாரிக்கும் தமிழர்கள் சொல்லும் பதில்களும் விசாரிப்புக்களும் இன்னும் நகைச்சுவையை அதிகரிக்கின்றது. அவர்களுக்கு நக்கலாக சதாபிரணவன் சொல்லும் வசனங்கள் அட்டகாசமாக இருக்கின்றன. "சிம் காட் அளவு சுதந்திரத்தையாவது வாங்கி கொடுங்கோ" என்ற வசனமும், அடிவேண்டியதை ஃபேஸ்புக்கில் எழுதிவிடக் கூடாது என்று உடன் பயணித்த நண்பரிடம் சத்தியம் வேண்டும் வசனங்களையும் அதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ப்ளாக் காமடிக்கான தன்மையை இக் குறும்படம் அதிகம் கொண்டிருக்கின்றது. சிரிக்க வைப்பது மட்டுமல்லாது தமிழரின் இலக்குகள் பல கோணங்களில் பரிந்துகிடக்கும் நிலையை பற்றியும், அதனால் ஏற்படும் இழப்புக்களையும் நகைச்சுவையாக உணர்த்துகின்றது. வெறும் நகைச்சுவை படமாக இருந்தாலும் இக்குறும்படம் உணர்த்தும் செய்திகள் மிகுந்த வலிமையானது. திரைப்பட அழகியலுடன் அட்டகாசமாக உருவாக்கி இருக்கின்றது இக்குறும்படம்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

## கோடை

ஒரு கோடை நடுப்பகல்
நடுப் பகலின்
வெக்கையின் தாக்கம்
விளைவிக்கும் வெறுமை
எங்கோ இருந்தொரு காக்கை
வெறுமைக்குக் குரல் கொடுக்கும்
கோடை உமிழும் குரல்
எரிச்சல் பற்றி வர எழுந்து போய்
காக்கையைக் கலைத்தால்
கலைகிறதா வெறுமை?
சுருதியறுந்த தந்தியின்
அதிர்வாய் அதே
வெறுமையின் மீட்டல்
வலம்வந்தொருகால் மீண்டும்
கொல்லை அமர்ந்ததுகாக்கை
மீட்டும் குரல் மாறிலது
அதே வெறுமை எடுத்தகுரல்
வெளியில் காற்றின் விழுக்காடு
சோர்ந்து வழிகின்ற தென்னைகள்
வெறிச் சோடிப் போன தெரு
கானல் அரவுகள் நெளிதரும்வயல் வெளி
மேய்தலிலாவது வெறுமையை இரைமீட்டபடி
காய்தலுறும் மாடுகள்
இவற்றுக் கெல்லாம் ஒட்டுமொத்தமாக
குத்தகை எடுத்ததாய் ஓர் குரலில்
கோடை வறுக்கிறது காக்கை
கானல் திரைவெளியில் வெறுமை
நிழல் விழுத்தி உலர
கண்கள் வெயில்கிறது
மூடி விழித்தால் கானலின் ஓவியம்
கூடவே காக்கையின் குரலின்
பின்னணி ராகம்
கல்லெறிந்து மீண்டும் அதைக்
கலைப் போமெனின் சாய்மனையோடு
மல்லுக்கட்டி மாளுகிறது மனம்
சொல்லெறிந்து மீண்டும் காக்கை
சுற்றிச் சுற்றி எதையோ குத்திக் காட்டுவதாய்
முற்றும் இலையுதிர்ந்த வொரு
முள் முருக்கில் உலர் குரலில்...
சீ சனியன் நரகம்
நிச்சயமாக நான் வெறுக்கின்றேன்
இந்தக் கோடையை
வெறுமை தின்னும் கோடை நடுப்பகலை
குரல் கறுத்த காக்கையை
நிச்சயமாக என்னையும்
நான் சாய்ந்து கிடக்கும் சாய்வு நாற்காலியையுங்கூடவே

## விடுதலைப் பொழுது


எழுந்திரு பிள்ளாய்
இது விடுதலைப் பொழுது
இருளின் துயில் கலைகிறது நீயோ
இழுத்துப் போர்த்தபடி
இன்னம் உறங்குதியோ? எழுந்திரு
இதோ விடியலில் கீழ் வானம்
ஒளிமுடி தரிக்கும் உன்னதம்
உனக்குத் தரிசனமாகவில்லை
குருகினங்களின்
உதயத்து இசை
உனக்குத் தெளிப்பதில்லை
மெல்லிதழ் மலர்த்தி வரும் தென்றல்–உன்
மேனி வருடச் சிலிர்ப்பதில்லை
சீ! நீ என்ன மனிதன்
இன்னந் துயில் புணர்வாய்
புலர் பொழுதை ஸ்பரிசிக்காத
நின் புலன்கள் பழுதுடைய
இனியும் காலம் கடத்தாதே
புலன்கள் நறையுண்ணும்
பொழுதை மழிக்காதே
ஒளியேந்தவிரியும் விழிகொள்
விடியலின் குரலுக்குச் செவிகொடு
நெஞ்சப்புலம் நெகிழ்ந்து அங்கு
புலரவிடு காலைப்பொழுதை எழுந்திரு
சோம்பலை உதறிச்
சுருட்டிய பாயொடு தூரவீசு
வைகறை நீராடு
பொய்கறை இருள் கழுவிப்
புலரும் பொழுதை வரவேற்று
மனதில் ஒரு கும்பம் வை
நினைவுகளை ஒருங்குவி
திகழ் ஒளியைத் தியானி அதோ
உன் வீட்டு வாசற்படியில்
ஒளிக்குழந்தை
தொற்றித் தவழ்கிறது
ஒற்றிக் கொள் கண்களில்
கதவிடுக்கின் ஊடாக
உட் செல்லத் துடிக்கிறது
திறந்து விடு கதவை முற்றாய்
உனதகம் ஒளி பெறட்டும்

1985 இல் வெளிவந்த அகங்களும் முகங்களும் கவிதை நூலில் இருந்து

# சேதுபதி

## திரைவிமர்சனம்





பண்ணையாரும் பத்மினியும் என்ற ஒரு ரசனையான படம் கொடுத்த இயக்குநர் அருண்குமார், அதே நாயகனுடன் கை கோர்த்திருக்கும் படம், சேதுபதி.

போஸ்டரிலும், டிரெய்லரும் அதிரடியாக மிரட்டும் இந்தப் படம், நிவாஸின் இசையில் அழகானதொரு மெலடியோடு தொடங்கி, டைட்டில் கார்டில் பொலிஸாரின் சின்னச் சின்ன சங்கடங்களை - நிஜத்தோடு ஒப்பிடுகையில் - மிகைப்படுத்தல் இருந்தாலும், மாண்டேஜ்களாக சொல்லி.. பாடல் முடிந்ததும் ஒரு பொலிஸ்காரர் கொலை செய்யப் படுவதில் ஆரம்பிக்கிறது.

கறாரான, நேர்மையான, பயப்படாத, மக்களை சந்திப்பதில் மகிழ்கிற, புல்லட் வைத்திருக்கிற, கூலிங்க்ளாஸை ஸ்டைலாக மாட்டுகிற, குடும்பத்தை நேசிக்கிற, மீசை முறுக்குகிற என்று வழக்கமான தமிழ்ப்பட இன்ஸ்பெக்டர் விஜய் சேதுபதி. ASP ப்ரமோஷனுக்குக் காத்திருக்கிறவருக்கு, அவரது எல்லைக்குள் நடந்த இன்னொரு பொலிஸ்காரரின் கொலையை விசாரிக்கும் போது சிலபல சிக்கல்கள் நடக்கிறது. அதையெல்லாம் தாண்டி, சிக்கல்களை அவிழ்த்து யார் காரணமென்று கண்டுபிடித்து இடைவேளைக்கு முன்பே அரெஸ்ட் செய்துவிடுகிறார் விஜய் சேதுபதி.

பழிவாங்கும்விதமாக, வில்லன் செய்யும் ஒரு காரியம் விஜய் சேதுபதியை மீண்டும் சிக்கலில் மாட்டிவிட்டு பதவி உயர்வுக்கு மட்டுமின்றி, வேலைக்கே பாதிப்பைக் கொண்டுவருகிறது. அதை எப்படி ஹீரோ உடைக்கிறார் என்பதை கொஞ்சமும் சலிப்படைய வைக்காமல் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு கதையாக, சாதாரணக் கதைதான். நாடே எதிர்நோக்குகிற பிரச்சினையையோ, மாநில அளவில் சீரியஸான கேஸையோ இந்த ஹீரோ கையாளவில்லை. ஆனாலும் ஒரு இன்ஸ்பெக்டரின் குடும்பம், குடும்பம் சார்ந்த அவரது நடவடிக்கைகளை உள்ளே புகுத்தியதில் இயக்குநர் ஈர்க்கிறார்.

பொலிஸ் கெட்டப்பில் முதல் முறையாக விஜய் சேதுபதி. கச்சிதமாகப் பொருந்தியிருக்கிறார். முறைத்துக் கொண்டே சீரியஸான இன்ஸ்பெக்டராக இருக்கும் அதே சமயம் வீட்டுக்கு வந்ததும் மனைவியைக் கொஞ்சுவதிலும், மாமனார் - மாமியாரோடான சண்டையிலும் (அது என்னதான் சண்டை? சொல்லவேல்ல? பார்ட்-2 ஏதும்வருதோ?), குழந்தைகளுடனான ஜாலி நேரங்களிலும் தேர்ந்த நடிப்பைக் காட்டத் தவறவில்லை. ஆனா அதென்ன பாஸ், சக பொலிஸ்காரரிலிருந்து வில்லன் வரைப்பளார்னு விடற ஒரே அறையில வழிக்குக் கொண்டு வந்துடறீங்க?

பீட்சாவுக்குப் பிறகு, விஜய் சேதுபதியுடன் ரம்யா நம்பீசன். பீட்சா போலவே ரொமாண்டிக் காட்சிகளில் நெருக்கம் காட்டியிருந்தாலும், இவ்வளவு அழகான பொண்டாட்டி சண்டை போட்டுட்டாவே இருப்பாங்க? இட்லிப் பொடியை தொட்ட விரலை... விடுங்க... அவ்ளோ ஆசையை வெச்சிருந்து, ஒவ்வொருக்கா புருஷன் வரும் போதும் தள்ளிவிட்டுட்டேவா இருப்பாங்க? ஒருகட்டத்தில் விஜய் சேதுபதியே காலில் விழுந்த பிறகுதான் போனாப்போவுது என்று கட்டிப்பிடிக்கிறார். நடிப்பில்.. நச்! கணவனுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்போது, மகள் பார்த்துவிட கண்ணில் நீருடன் ஒரு எக்ஸ்ப்ரஷன் தருகிறார். ரம்யம்!

வில்லனாக வேல ராமமூர்த்தி. வழக்கம்போலவே சிறப்பு. காமெடி என்று எதையும் இயக்குநர் முயற்சிக்காதது கதையோட்டத்துக்காக என்றிருந்தாலும், ஆங்காங்கே நகைச்சுவையை தெளித்திருக்கலாம். எஸ்.ஐ-உடனான உரையாடல்கள் அவ்வளவு சிரிப்பைத் தரத்தவறினாலும், அந்தா அவன் மொறைக்கறான். சிரிப்பு சிரிப்பா வருது வெளில போகச்சொல்லு' - கலகலகல. குழந்தைகளாக நடித்திருக்கும் இரண்டு குட்டீஸ்க் கும் ஒரு மூட்டை சாக்லேட் பார்சல். அவ்வளவு அழகு, கச்சிதம். குறைந்த நிமிடங்களே வந்தாலும், அந்த கமிஷனை விசாரிக்கும் அதிகாரி.. செம.

இசை நிவாஸ் கே பிரசன்னா. தெகிடி படத்தின் பாடல்கள் மூலம் கவனமீர்த்தவர், இதிலும் மெலடிக்களில் முத்திரை பதித்திருக்கிறார். நான் யாரு.. நான் யாரு' வில்லனுக்கு வரும்போது எடுபட்டத்தை விட, ஹீரோவுக்கு வரும்போது அதிக க்ளாப்ஸ்அள்ளுகிறது.

ஆனால் பின்னணி இசை ஒரு சில அக்ஷன் காட்சிகளில் ஓகே என்றாலும், காதுவலிக்குது சார். பல நேரம் சைலண்டாக இருந்திருக்க வேண்டிய இடத்திலெல்லாம் ஓவர் டைம் வேலை செய்திருக்கிறார். ஒரு இடத்தில் வசனமே கேட்காத அளவுக்கெல்லாம் துருத்திக் கொண்டிருந்தது. தினேஷ் கிருஷ்ணனின் கமெரா, அக்ஷன் காட்சிகளிலும், ரொமாண்டிக் காட்சிகளிலும் இருவேறு விதமாக காண்பித்து அசத்தியிருக்கிறது. ஸ்ரீகர் ப்ரசாத்தின் எடிட்டிங் படத்துக்கு மிகப் பொருத்தம். ஒன்றே ஒன்று, ஒரு காட்சியில் கணவனுடனான சண்டையில் அழுதபடி இருக்கும் மனைவி, குழந்தை பார்த்ததும் டக்கென்று எக்ஸ்ப்ரஷனை மாற்றிக் கொண்டு சமாளித்து பேசுவதோடு அதை முடித்திருக்கலாம். உடனேயே அம்மா ஏதோ கேட்க, அதற்கு இவர் ஒன்று சொல்ல என்று இழுத்தது அந்த அழகை மறக்கடித்துவிட்டது. அதை வெட்டித்தூக்கியிருக்கலாம்.

பொலிஸாரின் 'சிஸ்டத்தை' விமர்சித்திருக்கும் விசாரணை படம் வெளிவந்து இரண்டே வாரங்களில் இது வெளியாவதால், இரண்டையும் நம் மனது ஒப்பிடுவதைத் தவிர்க்க முடியவில்லை. அப்படி ஒப்பிடுகையில், அதில் பொலிஸார் செய்த அதே என்கவுண்டரை இதில் அதே துறை ஹீரோ செய்கிறார். கமர்ஷியல் படத்தில் ஹீரோ என்கவுண்டர் செய்கிறார் என்பதால் அதை ஏற்கமுடியாது.

அதே ஹீரோ, வில்லனை, முதல்முறை கைது செய்யும் போது வெறுமனே இரண்டுநாள் சுற்ற விடுகிறாரே தவிர, வேறெதுவும் செய்வதில்லை.

ஆக, அடியாட்கள் என்றால் என்கவுண்டர் செய்யலாம், அவரை ஏவி விட்ட செல்வாக்குள்ள மனிதர் என்றால் செய்ய வேண்டியதில்லை என்றெல்லாம் இருப்பதும்,பொலிஸாரின் முகத்தை இன்னொரு விதமாக வெளிப்படுத்தியதாகவே பார்க்க வேண்டியதாய் இருக்கிறது.

நாயகனாக இருக்கும் எல்லோருக்கும் பொதுவான, காக்கிச் சட்டைக் காதலில் விஜய் சேதுபதியும் தப்பவில்லை. பொலிஸ் என்றாலே விஜய்காந்த், பொலிஸாக அவர் நடித்த சேதுபதியும் மக்களுக்கு ஹிட் மெமரி. அது தன் பெயராகவும் இருப்பதில் விஜய் சேதுபதிக்கு டபுள் குஷியாக இருந்திருக்க வேண்டும். ஒரு பொலிஸ் கதையில் அழகான குடும்பம் ரொமான்டிக்கைக் கொண்டுவந்து சோர்வடையச் செய்யாமல் படத்தை நகர்த்திச் சென்ற விதத்தில்.. சேதுபதிக்கு ஒரு சல்யூட்!

# சரத்குமார் மீது பல கோடி ஊழல் புகார் அதிர்ச்சியில் திரையுலகம்



சரத்குமார் சமீப காலமாக பல சர்ச்சையில் சிக்கி வருகிறார். சமீபத்தில் கூட ஒரு அரசியல் கட்சியிலிருந்து விலகினார்.

இந்நிலையில் தற்போது இவரின் மீது பல கோடி ஊழல் புகார் சென்னை பொலிஸ் நிலையத் தில் கொடுக்கப்பட்டுள்ளது.

நடிகர் சங்க பொறுப்பில் இருந்த போது, பல கோடி ஊழல் செய்ததாக கூறி, நடிகர் சங்கத்தின் முக்கிய பதவியில் இருக்கும் பூச்சி முருகன் புகார் கொடுத்துள்ளார்.

### விஷால் தரப்பு மீது சரத்குமார் புகார்

சரத்குமார், தன் மீது கோரப்பட்ட பண மோசடி புகாருக்குப் பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அதில் அவர் கூறியுள்ளதாவது,

நான் இந்திய சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடக்கும் இந்தியக் குடிமகனாவேன். நான் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவராக உள்ளேன். நான் ஏற்கனவே ராஜ்ய சபை உறுப்பினராக இருந்துள்ளேன்.

நான் தற்போது தென்காசி சட்ட மன்ற உறுப்பினராக உள்ளேன். மேலும் நான் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் செயலாளராக கடந்த 6 ஆண்டுகளும், தலைவராக கடந்த 9 ஆண்டுகளாக இருந்து வந்தேன்.

தற்பொழுதுள்ள புதிய நிர்வாகிகள் கேட்ட கணக்குகள் அனைத்தையும் நடிகர் சங்கத்தின் பொதுகுழுவால் நியமிக்கப்பட்ட ஆடிட்டர் மூலமாக தணிக்கை செய்யப்பட்ட ஆவணங்கள் முறையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாக கேட்கப்பட்ட ஒவ்வொரு கடிதத்திற்கும் முறையாக விளக்கக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இச்சூழ்நிலையில் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்தில் எனது வளர்ச்சியைத் தடுக்கும் விதமாக எனது பெயருக்கும் , எனது புகழுக்கும் எனது கட்சிக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் என் மீதும் மற்றும் ஏற்கனவே இருந்த இரண்டு ட்ரஸ்டிகள் மீதும் பொலிஸ் ஆணையாளரிடம் பூச்சிமுருகன் ஊழல் புகார் ஒன்று கொடுத்துள்ளதாக ஊடகங்கள் மூலம் செய்தி பரப்பி வருகிறது.

மேற்படி புகார் உண்மையில்லை. இச்செய்தியை பார்த்த பலர் அலைபேசி மூலம் என்னைக் கேட்டதன் பேரில் நான் மிகுந்த மன உளைச்சலுக்கும், மன வேதனைக்கும் ஆளாகியுள்ளேன்.

பூச்சிமுருகன் தொடர்ந்து எனது பெயருக்கும் புகழுக் கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதைத் தடுத்து அவர்கள் மீது சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இவ் வாறு அந்த பதில் மனுவில் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த காலம் தாழ்த்தக்கூடாது

மகிந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டு நல்லாட்சி எனும் பெயருடன் மைத்திரி - ரணில் கூட்டாட்சி நடைபெறுகின்றது.

நல்லாட்சி என்று பெயர் வைக்கப்பட்டு விட்டது என்பதற்காக அதை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று யாரும் நிர்ப்பந்திக்க முடியாது.

நடப்பது நல்லாட்சி என்பதை அனைத்து மக்களும் உணர்ந்தால், அனுபவித்தால் பெயருக்கேற்றாற்போல் செயற்படுகிறது என மெச்சுவர். பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி மகிந்த மீது மக்கள் வைத்திருந்த வெறுப்பினையும் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்த நல்லாட்சியாளர்கள் தற்போது நல்லிணக்க முயற்சிகளில் கூடிய கவனம், கரிசனை, அக்கறை செலுத்துவதாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர்.

நல்லிணக்க முயற்சிகள் தோல்வியில் முடிந்ததால் கொடிய யுத்தத்திற்கு இலங்கை களம் கொடுத்தது.

இலங்கையில் இடம்பெற்ற நீண்ட கால ஆயுதப் போராட்டத்தில் அனைத்து இனத்தவர்களும் உயிர்ப் பலி கொடுத்தனர்.

தமிழினம் ஏனைய இனங்களோடு ஒப்பிடுகையில் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைப் பலி கொடுத்தது.

இன அழிப்புக்கு உட்பட்ட தமிழினம் இன்னும் அந்தப்பாதிப்பிலிருந்து விடுபடவில்லை.

தமிழினம் தற்போதும் பிறரிடம் கையேந்தும் நிலையில்தான் உள்ளது. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

போர்ப்பாதிப்பிலிருந்து விடுபட்டு தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டும். அதற்கான முயற்சிகளை நல்லாட்சியின் பங்காளர்கள் இதயசுத்தியுடன் முன்னெடுக்க வேண்டும்.

மகிந்த ஆட்சியில் நல்லிணக்க முயற்சிகள் தோல்வியைக் கண்டதாலும் இன முரண்பாடுகள் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியிலும் தூண்டப்பட்டுக் கொண்டிருந்ததாலும் மைத்திரியை மக்கள் ஆதரித்தனர்.



மைத்திரி வழங்கிய வாக்குறுதியும் மகிந்த மீது மக்கள் வெளிப்படுத்திய வெறுப்பும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆட்சியமைக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

பொருளாதார நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சி, பாதுகாப்பற்ற சூழல், ஊழல், மோசடி எல்லாம் மேலோங்கிக் காணப்பட்டதால் மகிந்த ஆட்சி கவிழ்ந்தது.

உலக நாடுகள் மகிந்த ஆட்சியை இல்லாமல் செய்ய திரைமறைவில் பல இராஜதந்திர நடவடிக்கைகளை அரங்கேற்றின.

இருப்பினும் மகிந்த தனது ஆட்சியைத் தொடரவே விரும்பினார். நீதிமன்ற செயற்பாடுகளில் அதிக தலையீடுகளைச் செய்த ஆட்சியாளர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார்.

சுயாதீன ஆணைக்குழுக்களையும் தனது நிறைவேற்று அதிகார முறைக்குள் வைத்து ஆட்டிப்படைத்த மகிந்த, முழுநாட்டையும் சூறையாடும் முயற்சியில் தடையின்றி பயணித்தார்.

மகிந்த ஆட்சியில் நடந்த ஊழல் மோசடிகள் தற்போது இலஞ்ச, ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவின் விசாரணைகள் ஊடாக வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்துள்ளன.

மகிந்தவின் மகன் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இன்னும் பலர் கைது செய்யப்படுவார்கள் என்ற தகவல்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் கண்டி தலதாமாளிகையில் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இன்னும் சில நாட்களுக்குள் தானும் தனது மகன் நாமல் ராஜபக்ஷ எம்.பி. உள்ளிட்டவர்கள் கைது செய்யப்படவுள்ளதாக கூறியிருந்தார்.

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கைது செய்து மகிந்த ஆட்சியில் அங்கம் வகித்த பலர் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் பலர் கைது செய்யப்படவுள்ளனர்.

ஆனால் தமிழினம் அழிக்கப்பட்டது தொடர்பாக ஆட்சியாளர்கள் உரிய பதிலை வெளிப்படுத்தத் தயங்குவது ஏன் என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர்க்குற்றங்கள் இடம்பெற்றதை ஆதாரபூர்வமாக பிரிட்டனின் சனல்-4 தொலைக்காட்சி காணொலிகள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளது.

இதுதவிர காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது பலர் அதிர்ச்சியளிக்கும் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

கண்ணால் கண்ட சாட்சிகளை ஆதாரமாகக் கொண்டு விசாரணைகளை முன்னெடுப்பதன் மூலம் போர்க்குற்றங்கள் இலங்கையில் இடம்பெற்றதா? இல்லையா? என்பதை அறிய முடியும்.

தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு காரணமானவர்கள் கண்டறியப்படும் போது போர்க்குற்றம் புரியப்பட்டது உண்மையா? பொய்யா? என்பது புலப்படும்.

இதை ஆட்சியாளர் செய்ய முற்படவேண்டும். அப்போது தான் நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடிய நல்லிணக்கம் இலங்கையில் சாத்தியமாகும்.

தெற்கிலுள்ள மக்களிடமிருந்தே நல்லிணக்கம் உருவாக வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்களே யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற போதிலும் நல்லிணக்கம் என்பது தெற்கிலுள்ள மக்களிடமிருந்தே உருவாக வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கங்களின் செயலாளர் நாயகம் எல்.ஹாஜ் அஸ்ஸி கடந்த புதன்கிழமை ஜனாதிபதியை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடிய போது இதனைத் தெரிவித்திருந்தார்.

தெற்கிலுள்ள மக்களின் மனங்களில் நல்லிணக்கம் ஆழமாக வேரூன்ற வேண்டியதன் தேவைப்பாட்டினையும் அவசியத்தையும் இதன் போது ஜனாதிபதி மிகவும் தெளிவாக எடுத்துரைத்திருந்தார்.

நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படும் அனைத்து இனமக்களும் குறிப்பாக தமிழர்கள் நிம்மதியாக வாழும் சூழல் உருவாக்கப்படும் என்ற வாக்குறுதிகளை நம்பியே மைத்திரியை தமிழர்கள் ஆதரித்தனர்.

போர்ப்பாதிப்பிலிருந்து மீள முடியாமல் நாளாந்தம் பல துன்பங்களை அனுபவித்து வரும் தமிழர்கள் நல்லிணக்க முயற்சிகளுக்கு தடையேற்படுத்த மாட்டார்கள் என்பதையும் உணர்ந்ததால் தென்னிலங்கையிலுள்ளவர்களின் மனமாற்றத்தை ஜனாதிபதி எதிர்பார்த்திருக்கலாம்.

தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்கள் தான் இலங்கையில் ஆயுதப் போராட்டத்தை உருவாக்கியது, அல்லது ஊக்கப்படுத்தியது என்பதையும் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த தெற்கிலுள்ளவர்களே காரணம் என்பதையும் ஜனாதிபதி முன்பு பலமுறை இடித்துரைத்துள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த தென்னிலங்கையிலுள்ள மக்கள் குறிப்பாக இந்நாட்டின் பெரும்பான்மை இன மக்கள் என தம்மை அடையாளப்படுத்தும் சிங்களவர்கள் ஒன்றிணைய வேண்டும்.

சிங்களவர்களின் ஆதரவின்றி தமிழர்கள் எதையுமே இனிப் பெற முடியாது என்ற துர்ப்பாக்கிய நிலைக்கும் தள்ளப்பட்டு விட்டனர் என்பதும் உண்மையே.

இதைத் தமிழர்கள் ஆயுதப்போராட்டம் மௌனித்த மறுகணமே உணர்ந்து விட்டனர்.

இருப்பினும் சிங்கள மக்களின் தலையில் நல்லிணக்கம் என்னும் பாரிய பொறுப்பை சுமத்தி விட்டு ஆட்சியாளர்கள் ஒதுங்கிக் கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால் நல்லாட்சியின் பங்காளர்களுக்கு அது அணி சேர்க்காது.

எனவே நல்லாட்சியில் தமிழர்கள் மட்டுமல்லாது முழு இலங்கை வாழ் மக்களும் வைத்திருக்கும் நன்மதிப்பை உணர்ந்து பொறுப்புக்கூறும் முக்கிய கடமையுடன் நீண்டு நிலைத்திருக்கக்கூடிய எக்காலத்திலும் பிளவு ஏற்படாத வகையில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும்

சர்வதேச தலைவர்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற நல்லாட்சி அரசாவது முன்வர வேண்டும். இன நல்லிணக்கம் இலங்கைக்கு மிகவும் அவசியம்.

**காண்டீபன்**

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 653

Search for people, places and things Nagendram Home

## மனித நேயம்

ராஜராஜ சோழன், நம்பி ஆண்டார் நம்பி எனும் புலவருடன் சிதம்பரத்தில் இருந்து காணாமற் போன தேவார ஓலைச் சுவடிகளின் ரகசியத்தை விவாதிக் கிறார்) மார்கழி மாத கடும் குளிர்நாட்டு மக்களை ஆழ்ந்த தூக்கத்தில் தாலாட்டிக் கொண்டிருந்தது.

தம் உடலை கனத்த ஆடைகளில் புகுத்திக் கொண்டு நகர்வலத்திற்கு ஆயத்தமானார் வாமனபுரி ராஜா (சும்மா- அற்புதத்தீவு மகா ராசாவ நினைச்சுக்குங்க).



அரண்மனை வாயில் தனக்கென (special-MfBenz) நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வண்டியில் ஏரி பயணிக்க லானார்.

வண்டி போகும் வழியில் பாதையோரமாக ஸ்ரீ விஜயன் என்ற துறவி கோவணம் மட்டுமே அணிந்து உறங்கிக் கொண்டிருப்பதை கண்டார் மகாராஜா (feelings) மனதில் கருணை கசியவே வண்டியை நிறுத்தி விட்டு(parking) கீழே இறங்கினார்.


தான் போர்த்தியிருந்த விலையுயர்ந்த போர்வையை அமைதியாக துறவியின் மீது போர்த்தினார். ஸ்ரீவிஜயன் யாரிடமும் எதையும் கைநீட்டிப் பெறமாட்டார் என்பது ராஜாவுக்கு நன்றாவே தெரியும். எனவே அவர் தூக்கம் தெளிந்து எழுவதற்குள் அங்கிருந்து புறப்பட்டார்.

சற்று நேரத்தில் கண் விழித்த துறவி தன் மீது போர்வை போர்த்தியிருந்ததை பார்த்துத் திடுக்கிட்டார்.


"எனக்கு இந்தக் கோவணம் போதாது என்று யாரோ போர்வையைப் போர்த்திவிட்டு போயிருக்கிறார்களே! துறவியான எனக்கு எதற்கு இந்த சுகமெல்லாம்", என்று கூறியவாறு நாலா புறமும் பார்வையை ஓட்டினார். சற்று தூரத்தில் ஒரு நாய் குளிரால் நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டார். "எனக்காவது கோவணம் இருக்கிறது. இதனிடம் எதுவும் இல்லை. தன் துன்பத்தை யாரிடமாவது சொல்லித் தீர்க்கலாம் என்றாலும் முடியாது. பாவம் வாயில்லா ஜீவன்". என்று கூறியபடியே நாய் மீது அந்தப் போர்வையை போர்த்தினார் ஸ்ரீவிஜயன்.




சந்துரு




தர்சிகன்




ராகுலன்

**மனைவி : ஏங்க..! கிச்சன்ல அந்த உப்பு டப்பாவ எடுத்துக்கிட்டு வாங்க!**

**கணவன் : எங்க வச்சிருக்கு காணமே?**

**மனைவி : உங்களால எந்த வேல தான் செய்ய முடியும்?**

**கணவன் : நல்லா தேடிட்டேன் பா.கிடைக்கல.**

**மனைவி : உங்கம்மா உங்கள எப்பிடித்தான் வளத்தாங்களோ? உருப்படியா ஒரு வேலை செய்ய முடியுதா.உங்களை என் தலைல கட்டிவச்சு எங்க வீட்டுக்காரங்க என்னை ரொம்ப ஏமாத்திட்டாங்க. நீங்கல்லாம் ஆபீஸ்ல பத்து பேரை எப்பிடித்தான் கட்டி மேய்க்கிறீங்க.**
**இதுல மேனேஜர்ன்னு ஒரு பட்டம் வேற.!!**

**கணவன்: இல்ல...நெஜமாவே உப்பு டப்பாவே காணலடி!**


**மனைவி: உங்களால ஒரு வேலையும் உருப்படியாச் செய்ய முடியாதுன்னு தெரிஞ்சு தான் உப்பு டப்பாவ முதல்லயே இங்க கொண்டு வந்துட்டேன்.**

**கணவன் : ????**


சாலோன்

வாழ்வில் சிலநேரம்
தொடர் கஷ்டங்கள் வரலாம்..
அவற்றை நம்பிக்கையுடன்
சந்தியுங்கள்..
மனம் தளராதீர்கள்...
அவைதான் நாளை நாம்
பெறப்போகும்
வெற்றியின் படிக்கட்டுகள்..


கம்ஷி





லொலிபப் விதுஷன்



அருணன்




கஜருபன்



மது




ராதா

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 23

## தேங்காயின் முதற்பாலை மூன்றாம் பால் ஆக்குவது எப்படி?

பலர் தேங்காயின் முதற் பாலை பிளிந்து வெளியே ஊற்றிவிட்டு இரண்டாம் மூன்றாம் பால்களை கறி சமைப்பதற்கு பயன்படுத்தி வருவது தெரியவந்திருக்கிருக்கிறது. முதலாம் இரண்டாம் மூன்றாம் தேங்காய்ப்பால்களுக்கு இடையிலான வேறுபாடுகள் அவற்றின் செறிவு வித்தியாசம் மாத்திரமே. எனவே முதலாம் பாலை இரண்டாம் பால் ஆக்க நீங்கள் விரும்பினால் 1 கப் முதலாம் பாலினுள் 1 கப் நீரை ஊற்றிக் கலக்கிக் கொள்ளுங்கள். அது இரண்டாம் பால் ஆகிவிடும். மூன்றாம் பால் ஆக்கவிரும்பினால் 1 கப் முதலாம் பாலினுள் 2 கப் நீரை ஊற்றி கலக்குங்கள். அது மூன்றாம் பால் ஆகிவிடும். தேங்காயின் முதற்பாலை வெளியே ஊற்றுவது முக்காற்பங்கு தேங்காயை விரயமாக்குவதற்கு ஒப்பானது.

Dr. சி.சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்

## வைத்தியர் உங்களுக்கு பொது மயக்க மருந்து (General Anaesthesia) கொடுத்து சத்திர சிகிச்சை செய்யவுள்ளாரா?

### இப் பொது மயக்கமருந்தை யார் கொடுப்பார்?

- பொது மயக்க மருந்து கொடுப்பதற்கு விசேட வைத்தியர் உள்ளார்.
- அவர் உங்களுக்கு சத்திரசிகிச்சை செய்வதற்கு முதல் நாள் உங்கள் உடல் நிலையை பரிசோதிப்பார்.
- பரிசோதித்த பின்னர் உங்களுக்கு பொது மயக்க மருந்து கொடுக்கலாமா அல்லது கொடுக்க முடியாதா என்பது பற்றி உங்களுடன் கலந்தாலோசிப்பார்.
- அவ்வாறு உங்களுக்கு பொது மயக்க மருந்து கொடுக்க முடியாவிடில் உங்களுக்கு சத்திரசிகிச்சை செய்யும் பகுதியில் உணர்ச்சி இல்லாமல் செய்யக்கூடிய வேறு வகையான முறைகள் பற்றியும் கலந்தாலோசிப்பார்.
- அத்துடன் அவர் சத்திரசிகிச்சை நிபுணருடனும் இதுபற்றி கலந்தாலோசிப்பார்.
- இவ்வைத்தியரே நீங்கள் மயக்க நிலைக்கு போனது முதல் மயக்கம் விட்டு எழும்பும் வரை உங்கள் உடல் நிலையை பேணுவார்.

### என்ன வழிகளில் மயக்கம் கொடுக்கப்பட்டு சத்திர சிகிச்சை செய்யப்படுகிறது?

**பொது மயக்கமருந்து முறை**

- பொது மயக்கமருந்து முறையில் மருந்தானது உங்கள் குருதிக்குழாயில் ஏற்றப்படுகிறது. அல்லது சுவாசம் மூலம் வழங்கப்படுகிறது.
- இதன் பின் நீங்கள் மயக்க நிலைக்கு சென்று விடுவீர்கள். உங்களுக்கு வலி உணரப்படாது.

**பகுதியாக விறைப்பு ஏற்படுத்தும் முறை**

- இதன்போது நாரி முள் என்பில் விறைப்பு ஊசி ஏற்றப்படும். இதன் பின் நாரிக்கு கீழான பகுதி விறைத்து காணப்படும். தொடுகை உணர்வு இருக்கும். ஆனால் நோ தெரியாது. நீங்கள் விழிப்புடனே இருப்பீர்கள்.
- கால்/கை/உடலின் சிறு பாகங்களில் சத்திர சிகிச்சை செய்வதாயின் அந்த பகுதியிலேயே விறைப்பு ஊசி ஏற்றப்பட்டு சத்திரசிகிச்சை செய்யப்படும்.

### பொது மயக்க மருந்து கொடுப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் என்ன?

தற்போதைய வளர்ச்சியடைந்த வைத்திய துறையில் பொதுமயக்கமானது பாதுகாப்பானதாகும். பக்கவிளைவுகள் ஏற்படினும் அவை தற்காலிகமானவை. சில சமயங்களிலேயே இவை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

**இப்பிரச்சினைகள் சில காரணிகளில் தங்கியிருக்கும்.**

- உங்களுக்கு உள்ள வேறு நோய்கள்- உதாரணமாக நீரிழிவு நோய், இருதய நோய், சிறுநீரக நோய்கள்...
- உங்களுக்கு செய்யும் சத்திரசிகிச்சை
- சத்திரசிகிச்சை செய்ய எடுக்கும் நேரம்
- உங்களுக்கு செய்யும் சத்திரசிகிச்சை திட்டமிட்டு செய்யப்படுகிறதா அல்லது அவசரமாக செய்யப்படுகிறதா என்பதில்

**மிகவும் பொதுவான பக்க விளைவுகள்**

- வயிற்று குமட்டல், சத்தி
- தலையிடி
- ஊசிமருந்து ஏற்றிய இடங்களில் வலி
- தொண்டை வறட்சி
- கண் மங்கலாக தெரிதல்
- சலம் விடுவதில் ஏற்படும் பிரச்சினை

**இவை யாவும் தற்காலிகமானவையே.**
**சாத்தியத்தன்மை குறைந்த பக்கவிளைவுகளாவன**

- உடல் வலி
- உடல் சக்தியற்று இருத்தல்
- சில நரம்புகளில் விறைப்பு தன்மை காணப்படல்

**மிகவும் சாத்தியத்தன்மை குறைந்த பக்க விளைவுகள்**

- உங்களது பல்லில் காயம் ஏற்படல்
- உங்கள் குரல் நாண் பாதிக்கப்படுவதால் தற்காலிகமாக உங்கள் குரலில் மாற்றம் ஏற்படலாம்.
- மருந்துகளுக்கு ஒவ்வாமை தன்மை ஏற்படலாம்
- வலிப்பு வரலாம்
- நுரையீரல் நோய்த்தொற்றுக்கள் ஏற்படலாம்.
- உங்களுக்கு ஏற்கனவே உள்ள வருத்தங்கள் தீவிரமடையலாம்.

**மிக மிக அரிதாக சில வேளைகளில் மரணம் சம்பவிக்கலாம்.**

- கடுமையான ஒவ்வாமை
- உடலின் வெப்பநிலை சடுதியாக அதிகரித்தல்
- மாரடைப்பு
- பாரிசவாதம்
- நுரையீரல் கிருமித்தொற்று

**இவை ஏற்படுவதற்கான சாத்தியம் கூடுதலாக உள்ளவர்கள்**

- வயது முதிர்ந்தவர்களிலும், உடற்பருமனானவர்களிலும், வேறு நோய்கள் உள்ளவர்களிலும் (நீரிழிவு, உயர்குருதியமுக்கம், மாரடைப்பு...)

### பகுதியாக மயக்கம் கொடுப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் என்ன?

மேற்கூறிய பிரச்சினைகளும் ஏற்ப்படலாம். இதைவிட

- முதுகு நோ
- தலைவலி
- இரு கால்களிலும் விறைப்பு (குறைந்தது 6 மணித்தியாலங்களுக்கு)
- சலம் விடுவதில் ஏற்படும் பிரச்சினை

### நான் எவ்வாறு சத்திரசிகிச்சைக்கு தயாராக வேண்டும்?


- உடல் நிறை அதிகமாக இருப்பின் நிறையை குறைப்பது நல்லது
- புகைபிடிப்பதை நிறுத்துவது நல்லது. (குறைந்தது 6 கிழமை)
- மதுபானம் அருந்துவதை குறைப்பது நல்லது. 24 மணித்தியாலங்களுக்கு மது அருந்தக்கூடாது.
- நீங்கள் ஏதும் மருந்துகளை பாவிப்பதாயின் அதை வைத்தியரிடம் முதலே அறிவியுங்கள். ஏனெனில் சில மருந்துகளை நிறுத்தவேண்டிய தேவை ஏற்படும். உங்களுக்கு உள்ள நோய்கள் பற்றியும் வைத்தியரிடம் அறிவியுங்கள்.

### பொதுமயக்க மருந்து கொடுத்து 24 மணித்தியாலங்கள் வரை உங்கள் நிதானத்தன்மை குறைவாக காணப்படும். இதனால் நீங்கள் பின்வருவனவற்றை செய்யக்கூடாது


- நீங்கள் வாகனம் செலுத்தக்கூடாது
- இயந்திரங்களை கையாளக்கூடாது
- முக்கியமான பத்திரங்களில் கையொப்பமிடக்கூடாது.
- மது அருந்தவோ அல்லது சிகரட் பிடிக்கவோ கூடாது.




பொது மயக்க மருந்து கொடுத்தல்




நாரியில் விறைப்பூசி ஏற்றி கீழ்ப்பாகத்தை விறைக்க செய்தல்





சிறு பகுதிகளை விறைக்க செய்து சத்திரசிகிச்சை செய்தல்

Dr. க.சிவசுகந்தன்
யாழ்.போதனா வைத்தியசாலை

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.